**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

[2016 ஜூன் 22

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.*

**டாக்டர் இரா. மாசிலாமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. மைலம் சட்டமன்றத் தொகுதி, ரெட்டணை ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்துவது குறித்தும்;*

*2. மைலம் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;*

*3. மைலம் தொகுதி, கூட்டேரிப்பட்டு தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கூட்டுப் பாதையில் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;*

*4. மைலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், மணியம்பட்டு, கீழையூர் ஊராட்சிகளில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;*

*5. மைலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியம், கமுகுப்பட்டு—மேல்சேவூர் இடையே தொண்டி ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;*

*6. மைலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியம், பனப்பாக்கம்—அருகாவூர் இடையே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;*

*7. மைலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியம், ரெட்டணை ஊராட்சியில் உள்ள நாரேரிக்குப்பம், முல்லாப்பாளையம் கிராமங்களைப் பிரித்து தனி ஊராட்சியாக அமைப்பது குறித்தும்;*

*8. மைலம் சட்டமன்றத் தொகுதி, மோழியனூர் ஊராட்சியில் உள்ள நெடி கிராமத்தைப் பிரித்து தனி ஊராட்சியாக அமைப்பது குறித்தும்;*

*9. மைலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியம், ஜெகனூர்பட்டி, புதூர் ஊராட்சியைப் பிரித்து புதூர் கிராமத்தைத் தனி ஊராட்சியாக அமைப்பது குறித்தும்;*

*10. மைலம் சட்டமன்றத் தொகுதி, மைலம் ஒன்றியத்தில், கூட்டேரிப்பட்டு ஊராட்சியில் வேளாண் விற்பனை நிலையம் அமைப்பது குறித்தும்;*

*11. மைலம் சட்டமன்றத் தொகுதி, மைலம் ஒன்றியம் வீடூர் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;*

*12. மைலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியம் உள்ள வீடூர் அணையை மேம்படுத்தி சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்தும்;*

*13. மைலம் சட்டமன்றத் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், வெள்ளிமேடுபேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

**திரு. கே.எஸ். மஸ்தான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.*

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் பெண்ணாகரம் தொகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் சீரான முறையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது குறித்தும்;*

*2. தருமபுரி–சேலம் மாவட்ட மக்களுக்கு பயனளிக்கக்கூடிய காவேரி ஆற்றின் குறுக்கே பண்ணவாடி–கோட்டையூர் மேம்பாலம் கட்டுவது குறித்தும்;*

*3. ஏரியூரில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்தும்;*

[திரு. பி.என்.பி. இன்பசேகரன்] [2016 ஜுன் 22

4. பெண்ணாகரம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் போதிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, உயர் சிகிச்சைக்கான மருத்துவக் கருவிகளை நிறுவி, தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களை நியமிப்பது குறித்தும்;

5. பெண்ணாகரம் ஒன்றியம், கலப்பம்பாடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

6. வட்டுவனஅள்ளி ஊராட்சி, பவளந்தூர்–பேகாரஅள்ளி ஊராட்சி, பேகாரஅள்ளி ஆகிய இடங்களில் புதிய கால்நடை மருத்துவமனைகளை ஏற்படுத்துவது குறித்தும்;

7. அரகாசனஅள்ளி ஊராட்சி, அரகாசனஅள்ளி–பள்ளிமுத்தூர் கிராமங்களுக்கு இடையே நாகவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவது குறித்தும்;

8. கோட்டூர்மலை, ஏரிமலை ஆகிய மலைக் கிராமங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

9. சின்னாறு உபரி நீரை பாப்பாரப்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிக்குக் கொண்டுவரும் கால்வாய்த் திட்டத்தினை செயல்படுத்துவது குறித்தும்;

10. தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, மாமரத்துப்பள்ளத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வேலைவாய்ப்புகளை அளிக்கக்கூடிய புதிய பட்ட மேற்படிப்புகள் தொடங்குவது குறித்தும்;

11. சின்னாறு உபரி நீரை ஜெர்த்தலாவ் வாய்க்காலிலிருந்து புலிக்கரை ஏரி மற்றும் அதன் சுற்றுவட்டார ஏரிகளில் நிரப்பி, பாசன வசதியினை விரிவுபடுத்தும் திட்டம் தீட்டுவது குறித்தும்;

12. சின்னாற்றின் குறுக்கே புதிய தடுப்பணை கட்டி, செங்கன்பசுவந்தாலவ் கால்வாய் வழியாக இணைத்து பாலக்கோடு, பெண்ணாகரம் வட்டங்களில் உள்ள 50–க்கும் மேற்பட்ட ஏரிகளை நிரப்பி பாசன வசதியை மேம்படுத்துவது குறித்தும்;

13. பெண்ணாகரம் வட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;

14. ஒகேனக்கல் நீர்மின் திட்டம் தொடங்குவது குறித்தும்;

15. பெண்ணாகரம் ஒன்றியம், பருவதனஅள்ளி, பாலக்கோடு ஒன்றியம், பாடி ஆகிய ஊராட்சிகளில் சிட்கோ தொழிற்பேட்டைகளைத் தொடங்குவது குறித்தும்;

16. சின்னாறு குடிநீர்த் திட்டத்தினை விரிவுபடுத்தி, பெண்ணாகரம் பேரூராட்சிக்கு உட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது குறித்தும்;

17. பாப்பாரப்பட்டி பகுதியில் குளிர்பதனப் புளி கிடங்கு தொடங்குவது குறித்தும்;

18. பாப்பாரப்பட்டியில் சென்னகேசவன், பாரத மாதா, அவ்வை மகளிர் உள்ளிட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

**திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓடும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே வாணிஒட்டு என்கிற இடத்தில் தடுப்பணை கட்டி, வலது மற்றும் இடதுபுறக் கால்வாய்கள் வெட்டி, மாவட்டத்தில் உள்ள ஏரிகளுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம் தீட்டுவது குறித்தும்;

[திரு. டி. செங்குட்டுவன்] [2016 ஜூன் 22

2. கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காவேரிப்பட்டினம் ஒன்றியம், பையூர் வேளாண்மை விதைப் பண்ணை மையத்தில் அரசு வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

3. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வேளாண்மை தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் அமைப்பது குறித்தும்;

4. கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காவேரிப்பட்டினம் மற்றும் கிருஷ்ணகிரி ஒன்றியப் பகுதிகளில் அதிகமாக உற்பத்தியாகும் மல்லிகைப் பூக்களை ஆதாரமாகக் கொண்டு வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

5. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாம்பழக் கூழ் ஏற்றுமதி மையம் அமைப்பது குறித்தும்;

6. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, பெரிய ஏரிக்குத் தண்ணீர் வழங்கிடும் "படேதலா கால்வாய்த் திட்டம்" ஏற்படுத்துவது குறித்தும்;

7. கிருஷ்ணகிரி—ஒசூர் ஆறுவழிச் சாலையில் அரசு மருத்துவக் கல்லூரி துவக்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

**திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

***திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. ஆலங்குடியில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

2. ஆலங்குடி தொகுதியில் வாழைப் பழங்களை பதப்படுத்துகின்ற தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

3. ஆலங்குடி தொகுதியில் மலர்ச் சந்தை அமைப்பது குறித்தும்;

4. ஆலங்குடி தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

5. ஆலங்குடி பேரூராட்சிப் பகுதியில் புறவழிச் சாலைகள் அமைப்பது குறித்தும்;

6. ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட வில்லூனி ஆற்றைத் தூர் வாரி, தடுப்பணைகள் கட்டுவது குறித்தும்;

7. ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட அம்புலி ஆற்றைத் தூர் வாரி, தடுப்பணைகள் கட்டுவது குறித்தும்;

8. ஆலங்குடி தொகுதி, குழந்தை விநாயகர்கோட்டை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

9. புதுக்கோட்டை முதல் தவளைப்பள்ளம் மற்றும் அரசடிப்பட்டி நாலு ரோடு வழியாக ஆலங்குடி வரை பேருந்து வசதி செய்வது குறித்தும்;

10. புதுக்கோட்டை முதல் அறந்தாங்கி வரை செல்லும் நெடுஞ்சாலையைப் புதுப்பிப்பது குறித்தும்;

11. புதுக்கோட்டை முதல் ஆலங்குடி மற்றும் பேராவூரணி செல்லும் நெடுஞ்சாலையைப் புதுப்பிப்பது குறித்தும்;

12. ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட அரசுப் போக்குவரத்துப் பணிமனையில் உட்கட்டமைப்பு ஏற்படுத்துவது குறித்தும்;

13. மறமடக்கு அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;

14. ராஜேந்திரபுரம் ஊராட்சி, எருக்கலக்கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

15. புதுக்கோட்டை விடுதி ஊராட்சி, கும்மங்குலம் பகுதியில் நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.*

**திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

**திரு. மு. திராவிடமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. கூடலூர் ஜென்ம ஒழிப்பு மற்றும் ரயத்துவாரி பட்டா வழங்கும் சட்டம், 1969–ல் பிரிவு 17–ன்கீழ் உள்ள பூமிக்கு பட்டா வழங்குவது குறித்தும்;*

*2. நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர், பந்தலூர் வட்டங்களில் தமிழ்நாடு தனியார் ஒதுக்குக்காடு பராமரிப்பு சட்டம், 1949 பிரிவு 3(1)–ல், 5 ஏக்கருக்கு மேல் விற்பனை செய்யும் அனைத்து பரிவர்த்தனைக்கும் நிபந்தனை விதிக்கப்படும் என்று அறிவிக்கை வெளியிடுவது குறித்தும்;*

*3. கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இடங்களில் யானைகளால் ஏற்படும் உயிர்ச் சேதம் மற்றும் பொருட் சேதம் குறித்து மாற்றுத் திட்டம் தீட்டுவது குறித்தும்;*

*4. 2006 வன உரிமைச் சட்டத்தை அமல்படுத்துவது குறித்தும்;*

*5. தேயிலைக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்வது குறித்தும்;*

*6. கூடலூர் தொகுதியில் பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள், மாதத்தில் அனைத்து நாட்களிலும், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்க வேண்டியது குறித்தும்;*

*7 தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தின் நிதி நிலையை மேம்படுத்துவது குறித்தும்;*

2016 ஜூன் 22] [திரு. மு. திராவிடமணி]

*8. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தினக்கூலியை உயர்த்துவது குறித்தும்;*

*9. தோட்டத் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைப்பது குறித்தும்;*

*10. விவசாயிகள், விவசாயத்திற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்வது குறித்தும்;*

*11. நீலகிரி மாவட்டம், கூடலூர் பாரதியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றி விஞ்ஞானப் பாடப் பிரிவுகள் துவக்குவது குறித்தும்;*

*12. கூடலூர் கல்வி மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளி, உயர் நிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;*

*13. கூடலூர் பேருந்து கிளை நிலையத்தை விரிவாக்குவது குறித்தும்;*

*14. நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்ட தலைமை மருத்துவமனைகளில் முதுகலைப் பட்டம் பெற்ற மருத்துவர்களை நியமிப்பது குறித்தும்;*

*15. கூடலூர் தொகுதியில் வசிக்கின்ற பழங்குடியினருக்கு அரசு வழங்கும் நலத் திட்டங்களை ஆதிவாசிகள் நல கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகச் செயல்படுத்துவது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.*

**திரு. தங்கம் தென்னரசு**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.*

[2016 ஜுன் 22

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. பல்லாவரம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்குவது குறித்தும்;

2. பல்லாவரம் தொகுதிக்குட்பட்ட பம்மல் நகராட்சி, அனகாபுத்தூர் நகராட்சி, திருநீர்மலை பேரூராட்சி மற்றும் பொழிச்சலூர் ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

3. பல்லாவரம் தொகுதி, கீழ்க்கட்டளை ஏரி, ஜமீன் பல்லாவரம் ஏரி ஆகியவை தூர் வாரப்பட்டு, ஆழப்படுத்தப்பட்டு நடைபாதைகள் அமைக்கும் திட்டம் குறித்தும்;

4. பல்லாவரம் தொகுதியில் அனகாபுத்தூர், பொழிச்சலூர், திருநீர்மலை ஆகிய பகுதிகளுக்கு மாநகர குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்குவது குறித்தும்;

5. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின்கீழ் பல்லாவரம் நகராட்சிப் பகுதிக்கும் குடிநீர் வழங்கலை விரிவாக்கம் செய்வது குறித்தும்;

6. பல்லாவரம் தொகுதி, அனகாபுத்தூர், பொழிச்சலூர் மற்றும் திருநீர்மலை ஆகிய பகுதிகளில் அடையாறு ஆற்றின் ஓரம் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் குறித்தும்;

7. பல்லாவரம் முதல் பம்மல் வழியாக அனகாபுத்தூர் வரை செல்லும் சாலையை அகலப்படுத்தும் திட்டம் குறித்தும்;

8. பல்லாவரம் தொகுதி, அனகாபுத்தூர் நகராட்சியில் பெண்களுக்கு தனியாக அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்குவது குறித்தும்;

9. மெட்ரோ இரயில் திட்டத்தை பல்லாவரம், குரோம்பேட்டை வழியாகத் தாம்பரம் வரை நீட்டிக்கும் திட்டம் குறித்தும்;

10. பல்லாவரம் தொகுதி, பொழிச்சலூர் ஊராட்சிப் பகுதியில் அடையாறு ஆற்றின் குறுக்கே கெருகம்பாக்கம் வழியாக போரூர், பூந்தமல்லி செல்வதற்கு பொதுப் பணித் துறையின் மூலம் பாலம் அமைக்கும் திட்டம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

2016 ஜுன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

**திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. நத்தம் பகுதியில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்தும்;

2. விளைபொருட்களை சேமிப்பதற்கு குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

3. நத்தம் தொகுதியில் தொழிற்பேட்டை ஏற்படுத்துவது குறித்தும்;

4. நத்தம் தொகுதி, லிங்கவாடி ஊராட்சியில் லி.மலையூர் கிராமத்திற்கு பாதை அமைக்க வேண்டியது குறித்தும்;

5. நத்தம் தொகுதி முழுவதும் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவருவது குறித்தும்;

6. நத்தம் தொகுதி, பெரிய மலையூர், வலசு, சின்னமலையூர், பள்ளத்துகாடு ஆகிய கிராமங்களுக்குப் பாதை அமைப்பது குறித்தும்;

7. நத்தம் பேரூராட்சி, நல்லாகுளம் மற்றும் செட்டியார்குளம் கண்மாய் கரைகளில் இருக்கும் மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடு கட்டிக் கொடுப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.

**திரு. ப. ஆடலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

**திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் அரசினர் கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;*

*2. துரிஞ்சாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களுக்கு சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்குவது குறித்தும்;*

*3. கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களுக்கு சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்குவது குறித்தும்;*

*4. அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அறிவிப்பது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

**திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.*

**திரு. கே.வி. சேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. போளூர் பெரிய ஏரியை 10 மீட்டர் ஆழம், 200 மீட்டர் அகலத்திற்கு தூர் வாரி கரையை வலுப்படுத்துவது குறித்தும்;*

*2. போளூர் தொகுதிக்குட்பட்ட நெடுங்குணம் ஊராட்சியில் உள்ள பெரிய குடிநீர் குளத்தை ஆழப்படுத்தி, கரையில் வேலி அமைத்துத் தர வேண்டியது குறித்தும்;*

*3. போளூர் தொகுதியில் கொழப்பலூர் ஊராட்சியில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் நேரடி கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;*

4. போளூர் தொகுதிக்குட்பட்ட சேத்துப்பட்டு பேரூராட்சியில் ஆற்காடு—விழுப்புரம் சாலையில் சேத்துப்பட்டில் புறவழிச் சாலை அமைக்க வேண்டியது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன் அவர்கள்.

**திரு. சௌ. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

**திரு. எஸ். அம்பேத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. வந்தவாசி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

2. வந்தவாசி அருகில் உள்ள வெண்குன்றம் கிராமத்தில் உள்ள தவளகிரிநாதர் கோயிலை சுற்றுலாத் தலமாக தரம் உயர்த்துவது குறித்தும்;

3. வந்தவாசி தொகுதிக்குட்பட்ட பெரணமல்லூரை தனி வட்டமாக அமைப்பது குறித்தும்;

4. வந்தவாசி பொது மருத்துவமனையில் CT Scan, MRI Scan வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

***திருமதி பி. கீதா ஜீவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. தூத்துக்குடியில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;*

*2. தூத்துக்குடி மாநகராட்சியின் 3–வது வார்டு, வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் பகுதியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;*

*3. தூத்துக்குடி தொகுதியில் சுத்தப்படுத்தப்படாத குப்பைகளும், தூர்வாரப்படாத, ஓடாத கழிவு நீர் கால்வாய்களுமாய் இருப்பதால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேட்டை களைவது குறித்தும்;*

*4. தூத்துக்குடி தொகுதியில் தேவைப்படும் இடங்களில் பொதுக் கழிப்பிடங்களும், தனிநபர் கழிப்பிடங்களும் அமைப்பது குறித்தும்;*

*5. தூத்துக்குடி தொகுதியில் புறநகரில் வசிக்கும் மக்களின் நலனுக்காக பேருந்து வசதி அல்லது சிற்றுந்து வசதி செய்து தருவது குறித்தும்;*

*6. தூத்துக்குடி மாநகராட்சியோடு புதியதாக இணைக்கப்பட்ட பகுதியில் குடிநீர் வசதி செய்வது குறித்தும்;*

*7. தூத்துக்குடி தொகுதி மற்றும் ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் மழைக் காலத்துக்கு முன்பு விரிவான வெள்ளத் தடுப்புத் திட்டங்களை நிறைவேற்றுவது குறித்தும்;*

*8. தூத்துக்குடி புறநகர்ப் பகுதியான ராஜகோபால் நகரில் இரயில்வே கிராஸிங்கில் சுரங்கப் பாதையோ அல்லது மேம்பாலமோ அமைப்பது குறித்தும்;*

*9. தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படும் கட்டணக் கழிப்பிடங்களை இலவசக் கழிப்பிடங்களாக மாற்றுவது குறித்தும்;*

*10. தூத்துக்குடி தொகுதி, முள்ளக்காடு கிராமத்தில் கடலோடு கலக்கும் ஊரணி வடிகால் வாய்க்காலைத் தூர் வாரி, வெள்ளத் தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்வது குறித்தும்;*

11. தூத்துக்குடி தொகுதி, முள்ளக்காடு கிராமத்தில் ஊரணி வடிகால் வாய்க்காலில் நெடுஞ்சாலையில் உள்ள குறுகிய பாலத்தை அகலப்படுத்துவது குறித்தும்;

12. தூத்துக்குடி தொகுதியில் மழைக் காலத்தில் உப்பாற்று ஓடையில் அடிக்கடி உடைப்பு ஏற்படும் பகுதியில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

13. தூத்துக்குடி தொகுதியில் முத்துநகர் பகுதியில் உள்ள உப்பாற்று ஓடையின் வெள்ளத் தடுப்புச் சுவரின் உயரத்தை அதிகரிப்பது குறித்தும்;

14. தூத்துக்குடி—துறைமுகம் தேசிய நெடுஞ்சாலையில், தூத்துக்குடி—திருச்செந்தூர் நெடுஞ்சாலை சந்திக்கும் இடத்தில் உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

15. தூத்துக்குடி தொகுதியில் குறைந்த மின்னழுத்த மின்சாரத்தை சரிசெய்ய ஏதுவாக புதிய டிரான்ஸ்பார்மர்கள் அமைப்பது குறித்தும்;

16. தூத்துக்குடி மாநகராட்சியில் தெருவிளக்குகள் இல்லாத பகுதிகளில் புதிய தெரு விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.

**திரு. ப. ஆடலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. திருத்துறைப்பூண்டியை மையமாகக் கொண்டு அரசு வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

2. திருத்துறைப்பூண்டி, கொருக்கை கால்நடைப் பண்ணையின் அருகே ஆவின் பால் பண்ணை அமைப்பது குறித்தும்;

*3. திருத்துறைப்பூண்டியை மையமாக வைத்து, வைக்கோலை மூலப்பொருளாகக் கொண்டு காகித உற்பத்தி ஆலை அமைப்பது குறித்தும்;*

*4. கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்துவது குறித்தும்;*

*5. திருத்துறைப்பூண்டி நகர புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

**திரு. உ. மதிவாணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*“1. கீழ்வேளூர் தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க தீர்வு காண்பது குறித்தும்;*

*2. கீழ்வேளூரில் வேளாண் கல்லூரியை செயல்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;*

*3. கீழ்வேளூர் தொகுதியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;*

*4. கீழ்வேளூர் தொகுதியில் மாங்கனிகளைக் கொண்டு பழச்சாறு உற்பத்தி செய்யும் ஆலைகள் அமைப்பது குறித்தும்;*

*5. கீழ்வேளூர் தொகுதியில் காமேஸ்வரம், விழுந்தமாவடி ஆகிய கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடி தூண்டில் வளைவு துறைமுகங்கள் அமைப்பது குறித்தும்;*

*6. காமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் படகுகள் நிறுத்தி வைக்க கால்வாய் அமைப்பது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

2016 ஜூன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.*

**Thiru Palanivel Thiaga Rajan:** Hon. Speaker Sir, I move the following amendment to the Motion of Thanks for the Governor's Address—

"Add at the end, the following:

'but regret to note that no mention is made about

1. Restoration of Vaigai River.

2. Public sanitation and urban infrastructure schemes for the city of Madurai.

3. Mass transit schemes as in Chennai for other major urban centres like Madurai, Trichy, Salem, Coimbatore, etc.

4. Institution of annual survey of labour conditions including categorization of jobs by requisite qualification/skill along with compensation levels and making annual forcecast of future demand by a skill/profession, and the transmission of this information to students and parents in order to end need skill mismatch of labour."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.*

**திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. காஞ்சிபுரத்தில் உள்ள மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையினை தரம் உயர்த்தி பல்நோக்கு மருத்துவமனையாக (*Multi–Speciality Hospital) *மாற்றியமைப்பது குறித்தும்;*

*2. காஞ்சிபுரம் தொகுதி, காரைபேட்டையில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனை வளாகத்தில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, 108 ஆம்புலன்ஸ் வாகன வசதி ஏற்படுத்துவது குறித்தும்;*

*3. காஞ்சிபுரம் தொகுதி, தாமல் ஏரி, பொன்னேரிக்கரை ஏரி ஆகியவற்றில் கருவேல மரங்களை அகற்றி, ஆழப்படுத்தி சீரமைப்பது குறித்தும்;*

*4. காஞ்சிபுரத்தில் சென்னை–பெங்களூரு நெடுஞ்சாலையில் புதியதாக பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;*

*5. காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் போதிய எண்ணிக்கையில் மருத்துவர்களை நியமிப்பது குறித்தும்,* MRI Scan, Mammogram Scan (*மார்பக புற்றுநோய் அறியும் கருவி) ஆகியவை அமைப்பது குறித்தும்;*

*6. காஞ்சிபுரம் புதிய இரயில்வே நிலையம் அருகில் மேம்பாலம் கட்டுவதற்கான திட்டம் குறித்தும்;*

*7. காஞ்சிபுரம் தொகுதியில் பரத்தூர் கிராமத்தில் உள்ள 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையத்தை மகப்பேறு மருத்துவ வசதியுடன்கூடிய 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;*

*8. அரசுக்குச் சொந்தமான அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தை சீரமைப்பது குறித்தும்;*

*9. காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு அரங்கில் 1974 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பார்வையாளர் மாடம், நீச்சல் குளம், இறகுப் பந்து உள்விளையாட்டு அரங்கம், உடற்பயிற்சிக் கூடம் ஆகியவற்றைச் சீரமைத்து, விளையாட்டு வீரர்கள் தங்கும் விடுதியுடன்கூடிய விளையாட்டுப் பயிற்சி நிலையம் அமைப்பது குறித்தும்;*

*10. காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா பட்டுப் பூங்கா அமைப்பது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

**திரு. தா. உதயசூரியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

***திரு. கே.எஸ். மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*“1. மேட்டூர் அணையில் திறந்து விடப்படும் உபரி நீரை திருமணிமுத்தாறில் திருப்பிவிட்டு மல்லசமுத்திரம், எலச்சிபாளையம், பரமத்தி ஆகிய ஒன்றியப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர திருமணிமுத்தாறு திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;*

*2. பரமத்தித் பகுதியில் உள்ள இடும்பன்குளத்தைத் தூர் வாரி அதில் தண்ணீர் தேக்கி விவசாய அபிவிருத்தி செய்வது குறித்தும்;*

*3. பரமத்தி-வேலூர் தொகுதியில் ஜோடர்பாளையம் அல்லது கபிலர்மலையில் தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;*

*4. இராஜ வாய்க்கால், குமாரபாளையம் வாய்க்கால், மோகனூர் வாய்க்கால் புதுப்பிக்கும் திட்டம் குறித்தும்;*

*5. பரமத்தி-வேலூரில் வெற்றிலையைப் பாதுகாக்கும் குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;*

*6. பரமத்தி-வேலூர் தொகுதியில் ஆதி திராவிட மாணவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகள் அமைப்பது குறித்தும்;*

[திரு. கே.எஸ். மூர்த்தி] [2016 ஜுன் 22

7. எலச்சிபாளையம் ஒன்றியம், மாவுரெட்டிப்பட்டியில் துணை கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

8. மோகனூர் ஒன்றியம், குட்லாம்பாறை ஊராட்சி, புதுப்பாளையத்தில் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

**திரு. சபா. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வருவாய் மாவட்டம் அமைப்பது குறித்தும்;

2. கும்பகோணத்தில் சாக்கோட்டை–மருதாநல்லூர்–தாராசுரம் பகுதிகளில் புறவழிச் சாலைப் பணி தொடங்குவது குறித்தும்;

3. கும்பகோணம்–மன்னார்குடி சாலையில் திப்பிராஜபுரம் திருமலைராசனாற்றுப் பாலம் புதியதாகக் கட்டுவது குறித்தும்;

4. கும்பகோணம், கொட்டையூரில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

5. கும்பகோணம், மாவட்ட தலைமை மருத்துவமனையில் C.T. Scan அமைப்பது குறித்தும்;

6. கும்பகோணத்தில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக கிளை பணிமனைக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது அமைப்பது குறித்தும்;

7. கும்பகோணம் நகரில் மின் கம்பிகளை புதைவடம் மூலம் மாற்றி அமைப்பது குறித்தும்;

8. திருநாகேஸ்வரத்தில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

9. சோழபுரத்தில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

10. திருநாகேஸ்வரம், தாராசுரம் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. 'திருவையாறு தொகுதி, விண்ணமங்கலம் அருகே வெண்ணாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

2. திருவையாறு தொகுதி, தென்பெரமூர் அருகே வெண்ணாற்றின் குறுக்கே புதிய உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

3. திருவையாறு தொகுதி, திருவையாறு பேரூராட்சியில் புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

4. திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சியில் புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

5. திருவையாறு தொகுதி, தஞ்சாவூர் ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது குறித்தும்;

*6. திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியத்தில் உள்ள 42 ஊராட்சிகளுக்கும் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

*“1. மேல்செங்கம் மத்திய மாநில பண்ணையில் வேளாண்மை ஆராய்ச்சி மையம் மற்றும் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைப்பது குறித்தும்;*

*2. செங்கம் நகரில் புதிய புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;*

*3. செங்கம் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்தி போதுமான மருத்துவர்கள் நியமிப்பது, மருத்துவ உபகரணங்கள், அவசர ஊர்தி போன்ற வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;*

*4. தானிப்பாடி அரசு மருத்துவமனைக்குப் போதிய கட்டடம், மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட வசதியை ஏற்படுத்தி போதிய மருத்துவர்களை நியமிப்பது குறித்தும்;*

*5. செங்கம் கட்டமடு ஊராட்சியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;*

*6. தானிப்பாடி பகுதியில் சிட்கோ அமைப்பது குறித்தும்;*

*7. தென்பெண்ணை ஆறு–செய்யாறு இணைப்பு குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

2016 ஜுன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

**திரு. நா. கார்த்திக்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

**டாக்டர் ஆர்.டி. அரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. செய்யூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவங்குவது குறித்தும்;*

*2. செய்யூர் தொகுதியில் மாம்பழச் சாறு தொழிற்சாலை துவங்குவது குறித்தும்;*

*3. செய்யூர் அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தி, அதற்குண்டான உட்கட்டமைப்பு வசதிகள் செய்வது குறித்தும்;*

*4. செய்யூர் தொகுதியில் 3 கிராமங்களுக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;*

*5. செய்யூர் தொகுதியில் அனைத்து கிராமங்களிலும் நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து போதுமான குடிநீர் வசதி, செய்வது குறித்தும்;*

*6. செய்யூர் தொகுதியில் பெரும்பாலான கிராமங்களில் சாலைகள் சீரமைப்பது குறித்தும், மேம்பாலங்கள் அமைப்பது குறித்தும்;*

*7. செய்யூர் தொகுதியில் பெரும்பாலான கிராமங்களில் போதிய பேருந்து வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;*

*8. செய்யூர் தொகுதியில் தென்னை கொப்பரை கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;*

*9. செய்யூர் தொகுதியில் பாதுகாப்பான ஒரு தானியக் கிடங்கு அமைப்பது குறித்தும்;*

[டாக்டர் ஆர்.டி. அரசு] [2016 ஜுன் 22

10. செய்யூர் தொகுதியில் சித்தாமூர் ஒன்றியத்திற்குட்பட்ட வெள்ளகொண்ட அகரம் பகுதியில் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

11. செய்யூர் தொகுதியில் நீலமங்கலம், இடையாத்தூர் விளாகம், ஈசூர், நெல்வாய் ஆகிய கிராமங்கள் பயன்பெறும் வகையில் நீலமங்கலம்–இடையாத்தூர் இடையில் ஒரு தடுப்பணை அமைப்பது குறித்தும்;

12. செய்யூர் தொகுதியிலுள்ள கிராமங்கள்தோறும் இலவச கழிப்பறைகள் ஏற்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

**திரு. பி. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. வேப்பனஹள்ளி ஒன்றியம், என்னேகெல்தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, படேதலா ஏரிக்கு குப்பச்பாறை, மாரசந்திரம் வழியாக தண்ணீர் கொண்டு சென்று, விவசாயத்திற்குப் பயன்படுகின்ற வகையில் திட்டம் நிறைவேற்றுவது குறித்தும்;

2. கெலமங்கலம் ஒன்றியம், அலியாலம் தடுப்பணை கட்டி, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள தடுப்பணையிலிருந்து நாகமங்கலம் ஏரி மற்றும் கொப்பகரை ஏரி வரை கால்வாய் வெட்டி தண்ணீர் கொண்டு சென்று விவசாயத்திற்குப் பயன்படுகின்ற வகையில் திட்டம் நிறைவேற்றுவது குறித்தும்;

3. சூளகிரி ஒன்றியம், கெலவரப்பள்ளி அணையிலிருந்து கால்வாய்த் திட்டத்தினை நிறைவேற்றுவது குறித்தும்;

4. சூளகிரி துரை ஏரியிலிருந்து வேம்பள்ளி அணைக்கு தண்ணீர் கொண்டு செல்கின்ற திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

5. சிங்கிரிப்பள்ளி அணைத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

6. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரியில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

7. வேப்பனஹள்ளி தொகுதியில் தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

8. வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, சூளகிரி ஊராட்சியை பேரூராட்சியாக மாற்றி தரம் உயர்த்துவது குறித்தும்;

9. ராயக்கோட்டை ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

10. வேப்பனஹள்ளி ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

11. வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டையில் குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

**டாக்டர் இரா. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.

[2016 ஜூன் 22

**திரு. ஒய். பிரகாஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. தளி தொகுதி, அஞ்செட்டியில் பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

2. தேன்கனிக்கோட்டையில் தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

3. தளி தொகுதியில் பொறியியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

4. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அலியாலம் பகுதியில் கட்டப்பட்டுள்ள தடுப்பணையை விரிவுபடுத்தி, அங்கிருந்து சானமடுவு, பென்னிக்கல், பைரமங்கலம், டி. கொத்தப்பள்ளி, தம்மண்டரப்பள்ளி, நாகமங்கலம் வழியாக ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு சென்று, விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் உரிய திட்டத்தை அமைப்பது குறித்தும்;

5. தளி தொகுதிக்குட்பட்ட மல்லசந்திரம் ஊராட்சி, அட்டிகலபுரம் முதல் பேலுர் செல்லும் சாலையில் சனத்குமார் ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பது குறித்தும், அஞ்செட்டி ஊராட்சி, பைல்காடு முதல் ஏழுமலையான் தொட்டி செல்லும் சாலையில் பாலம் அமைப்பது குறித்தும், அண்ணியாலம் ஊராட்சி, சிரதிம்மனட்டி முதல் கல்லிக்கேரி செல்லும் சாலையில் பாலம் அமைப்பது குறித்தும்;

6. தளி தொகுதிக்குட்பட்ட குந்து கோட்ட ஊராட்சி, குடிசல பைலு முதல் செப்புகுட்ட வரையும்; மாடக்கல் ஊராட்சி, சூளகுண்ட முதல் உளிபொன்டதார் வரையும்; சாரக்கப்பள்ளி ஊராட்சி, செல்லேபுரம் முதல் ஓசட்டி வரையும்; உரிகம் ஊராட்சி, உரிகம் முதல் உருபராணி வரையும்; உரிகம் ஊராட்சி, உரிகம் முதல் பிலிக்கல் வரையும்; கோட்டையூர் ஊராட்சி, அத்தி நத்தம் முதல் நூருந்து சாமி மலை வரையும்; பெட்டமுகிலாளம் ஊராட்சி, கெத்தல்லி முதல் துளுவபெட்ட வரையிலும் தார்ச் சாலைகள் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

2016 ஜுன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.*

**திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் (என்கிற) தாயகம் கவி அவர்கள்.*

**திரு. ப. சிவகுமார் (என்கிற) தாயகம் கவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

1. *“திரு.வி.க. நகர் தொகுதியில் கணேசபுரம் இரயில்வே மேம்பாலத் திட்டத்தை விரைவில் தொடங்குவது குறித்தும்;*
2. *திரு.வி.க. நகர் தொகுதியில் உள்ள காந்திநகர் பகுதியில் பட்டா குடிநீர் இணைப்பு மற்றும் கழிவுநீர் இணைப்பு வழங்குவது குறித்தும்;*
3. *திரு.வி.க. நகர் தொகுதியில் சமுதாயக் கல்லூரி,* I.T.I. *மூலிகைப் பூங்கா ஆகியவற்றின் பராமரிப்பு குறித்தும்;*
4. *திரு.வி.க. நகர் தொகுதியில் சத்தியவாணிமுத்து நகரில் உள்ள குப்பை சேகரிக்கும் மையத்தை அகற்றிவிட்டு விளையாட்டுத் திடலை அமைப்பது குறித்தும்;*
5. *திரு.வி.க. நகர் தொகுதியில் கன்னிகாபுரம் கால்பந்து விளையாட்டு மைதானத்தை சீர்படுத்தித் தருவது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

***திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் தொகுதி உறுப்பினர் மாண்புமிகு திரு. ப. சிவகுமார் (என்கிற) தாயகம் கவி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையோடு. . . (குறுக்கீடு) அதையெல்லாம் சேர்க்கலாம், தவறில்லை.*

[2016 ஜூன் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதெல்லாம் வேண்டாம். திருத்தத்தை வழிமொழிகிறேன் என்று சொல்லுங்கள். நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) செய்யலாம், அதில் ஒன்றும் தப்பில்லை.*

**திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் (என்கிற) தாயகம் கவி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையோடு வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

**திரு. கே.எஸ். மஸ்தான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. செஞ்சிக்கோட்டையை சுற்றுலாத் தலமாக அறிவித்து, கோட்டையில் உள்ள அகழியை தூர் வாரி படகு சவாரி ஏற்படுத்துவது குறித்தும்;*

*2. செஞ்சிக்கோட்டையை ஆண்ட மன்னர் ராஜா தேசிங்கு மற்றும் அவரது நண்பர் முகமதுகான் ஆகிய இருவருக்கும் நீலாம்பூண்டியில் மணிமண்டபம் அமைப்பது குறித்தும்;*

*3. மேல்மலையனூர் ஸ்ரீ அங்காளம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி அமைப்பது குறித்தும்;*

*4. சாத்தனூர் அணையிலிருந்து வெளியேறும் நீரை "நந்தன் கால்வாய்" வரத்துக் கால்வாயுடன் இணைப்பது குறித்தும்;*

*5. செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் புதியதாக அரசு கலைக் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது குறித்தும்;*

*6. அனந்தபுரம் பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;*

*7. செஞ்சி, வடபாலை சாலையில் மேல்மலையனூர் செல்லும் வழியில் உள்ள "வராக நதி" தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றுவது குறித்தும்;*

8. செஞ்சி, மேல்களவாய் சாலை இடையில் உள்ள சங்கராபரணி ஆற்று தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றுவது குறித்தும்;

9. மேல்மலையனூர் வட்டம், அவலூர்பேட்டையில் புதியதாக பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

10. மேல்மலையனூர் ஊராட்சியில் புதியதாக பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

11. மேல்மலையனூர் வட்டத்தில், புதிய அவசர மருத்துவ ஊர்தி (108 வாகன வசதி) ஏற்படுத்துவது குறித்தும்;

12. செஞ்சி பேரூராட்சியில் மின் தகன மேடை அமைப்பது குறித்தும்;

13. செஞ்சி பேருந்து நிலையம் மேம்படுத்துவது குறித்தும்;

14. செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், தரமான தானிய சேமிப்புத் தளம் அமைப்பது குறித்தும்;

15. மேல்மலையனூர் வட்டம், அவலூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், தரமான தானிய சேமிப்புத் தளம் அமைப்பது குறித்தும்;

16. செஞ்சி தொகுதியில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பயணியர் விடுதி அருகில் தடுப்பணை அமைப்பது குறித்தும்;

17. செஞ்சி வட்டம், அனந்தபுரம் பேரூராட்சியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

18. மேல்மலையனூர் வட்டம், அவலூர்பேட்டை ஊராட்சியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

19. செஞ்சி பேரூராட்சியில் உள்ள அருணாச்சலேஸ்வரர் குளம், நவாப் குளம், சக்கராபுரம் குளம், ஈஸ்வரன் கோயில் குளம் ஆகியவற்றைத் தூர் வாருவது குறித்தும்;

20. அனந்தபுரம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

21. செஞ்சி நகரத்தில் உள்ள “B” ஏரியை தூர் வாரி, கரையை வலுப்படுத்துவது குறித்தும்;

*22. செஞ்சி வட்டம், துத்திப்பட்டு ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;*

*23. அனந்தபுரம் பேரூராட்சியில் அரசு போக்குவரத்துப் பணிமனை அமைப்பது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.*

**டாக்டர் இரா. மாசிலாமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.*

**திருமதி பெ. சீத்தாபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*“1. திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;*

*2. திண்டிவனம் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்துவது குறித்தும்;*

*3. திண்டிவனம் தொகுதி, மரக்காணம் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;*

*4. திண்டிவனம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியத்திற்குட்பட்ட ஒலக்கூர் இரயில்வே பாதையில் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

**திருமதி ம. வரலட்சுமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

2016 ஜூன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

***திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. ஒட்டன்சத்திரம் தொகுதியில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்து, அனைத்துப் பகுதிகளிலும் விரிவுபடுத்துவது குறித்தும்;*

*2. ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் கீரனூர் பேரூராட்சிக்கு தனி காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்துத் தருவது குறித்தும்;*

*3. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பாலாறு–பொருந்தலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;*

*4. ஒட்டன்சத்திரம் தொகுதியில் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கொத்தயம் கிராமத்தில் நல்லதங்காள் அணை திட்டப் பணிகளை முழுமையாக நிறைவேற்றுவது குறித்தும்;*

*5. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள வடகாடு ஊராட்சியில் பரப்பலாறு அணையைத் தூர் வாருவது குறித்தும்;*

*6. ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வருவது குறித்தும்;*

*7. ஒட்டன்சத்திரம் தொகுதியில் விவசாயிகளின் விளைபொருட்களை சேமித்து வைப்பதற்கு குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;*

*8. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள காய்கனி மார்க்கெட் கழிவுகளைக் கொட்டுவதற்கு அரசின் மூலம் இடம் ஒதுக்கி, குப்பைக் கிடங்கு அமைப்பது குறித்தும்;*

9. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய பகுதிகளில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

10. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு அரசு வேளாண் கல்லூரி அமைப்பது குறித்தும்;

11. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு மருத்துவக் கல்லூரியுடன்கூடிய மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

12. ஒட்டன்சத்திரம் தொகுதியில் சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட வேண்டியது குறித்தும்;

13. ஒட்டன்சத்திரம் தொகுதியில் வேலைவாய்ப்பை உருவாக்கும் விதமாக தொழிற்பேட்டைகள் ஏற்படுத்துவது குறித்தும்;

14. ஒட்டன்சத்திரம் தொகுதியில் வடமதுரை–ஒட்டன்சத்திரம் 41/8 உயர்மட்டப் பாலம் கட்டுவது குறித்தும்;

15. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அம்பிளிக்கை–குத்திலிப்பை 8/6 உயர்மட்டப் பாலம் கட்டுவது குறித்தும்;

16. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பொருளூர்–ஆயக்குடி 11/2 உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

17. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றியத்தில் வில்வாதம்பட்டி, மானூர், கோரிக்கடவு, தும்பலப்பட்டி, அக்கரைப்பட்டி ஆகிய பகுதிகளில் அதிகளவில் உற்பத்தி செய்யப்படும் நெல்லுக்கு அரசு கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

18. ஒட்டன்சத்திரம் தொகுதியில் கொத்தயம், சத்திரப்பட்டி ஆகிய இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

19. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம்–பழனி இடையே சத்திரப்பட்டி, ஆயக்குடி, தாளையூத்து ஆகிய இடங்களில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

2016 ஜூன் 22] [திரு. அர. சக்கரபாணி]

20. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அனைத்து ஊராட்சிப் பகுதிகளில் உள்ள உட்கடை கிராமங்களில் சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாக்கும் விதத்தில் சுகாதார வளாகம் கட்டுவது குறித்தும்;

21. ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு பகுதியில் மலைக் கிராமங்களில் உள்ள யானை மற்றும் வனவிலங்குகள், விளைநிலங்களை அழிப்பதிலிருந்தும் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கு வராமல் தடுக்கும் விதமாக அகழிகள் அமைப்பது குறித்தும்;

22. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் வட்டம், வடகாடு ஊராட்சி, மாட்டுப்பட்டிக்காடு கிராமத்தில் வசிப்பிடமின்றி உள்ள மக்களுக்கு அரசின் மூலம் இடம் ஒதுக்கி, வீடுகள் கட்டித் தருவது குறித்தும்;

23. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் குறு வட்டங்கள்தோறும் விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

24. ஒட்டன்சத்திரம் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் புதிய சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியது குறித்தும்;

25. ஒட்டன்சத்திரம் தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலையில் வனவிலங்குகளிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க சோலார் மின்வேலி அமைப்பது குறித்தும்;

26. ஒட்டன்சத்திரம் தொகுதியில், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை மக்கள் தொகை அடிப்படையில் பிரித்து, புதிதாக கள்ளிமந்தையத்தை தனிவட்டமாகப் பிரிக்க வேண்டியது குறித்தும்;

27. ஒட்டன்சத்திரம் தொகுதியில், ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்து கள்ளிமந்தையத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைப்பது குறித்தும்;

[திரு. அர. சக்கரபாணி] [2016 ஜூன் 22

28. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அதிகளவு பயிரிடப்படும் மருத்துவக் குணம் கொண்ட கண் வலி கிழங்கு (Gloriosa Superba) விதைகளை அரசே கொள்முதல் செய்யும் பொருட்டு, அரசு கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

29. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பருத்தி ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்தும்;

30. ஒட்டன்சத்திரம் தொகுதியில், கொழுமங்கொண்டான், சந்தன்செட்டி வலசு, நரிக்கல்பட்டி ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யும் பட்டுச் சேலையினை அரசே கொள்முதல் செய்து, விற்பனை செய்ய ஏதுவாக இப்பகுதியிலேயே அரசு விற்பனை நிலையம் அமைக்க வேண்டியது குறித்தும்;

31. ஒட்டன்சத்திரம் தொகுதியில் முருங்கைப் பொடி தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

32. ஒட்டன்சத்திரம் தொகுதியில், மானூர், வில்வாதம்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கிடையே சண்முகா நதி ஆற்றில் பாலம் கட்ட வேண்டியது குறித்தும்;

33. ஒட்டன்சத்திரம் தொகுதியில், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு புதிய சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

34. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பன்றிகள் தொல்லையால் ஏற்படும் சுகாதார சீர்கேட்டைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

35. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள சின்னக்குளத்தைத் தூர் வாரி குளத்தைச் சுற்றி கம்பிவேலி அமைத்து, பொதுமக்கள் நடைபயிற்சிக்குப் பயன்படும் வகையிலும், பொதுமக்கள் மற்றும் சிறுவர், சிறுமியர் பயன்படுத்தும் வகையிலும் சிறந்த பொழுதுபோக்குப் பூங்கா அமைப்பது குறித்தும்;

36. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் வார்டு 5, 6, 7 ஆகிய பகுதிகளில் இரண்டு இடங்களிலும், தொப்பம்பட்டி ஒன்றியம்–தாளையூத்து வடக்கு லட்சலப்பட்டியிலுள்ள இரயில்வே தரைப் பாலங்களுக்கு

இணைப்புச் சாலை ஏற்படுத்துவதற்கும், மழைக் காலத்தில் மழை நீரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

37. ஒட்டன்சத்திரம் தொகுதியில் திண்டுக்கல் முதல் கள்ளிமந்தையம், தொப்பம்பட்டி வழியாக பொள்ளாச்சி வரை பேருந்து வழித்தடம் அமைப்பது குறித்தும்;

38. ஒட்டன்சத்திரம் தொகுதியில், மிடாப்பாடி ஊராட்சி–வன்னியர்வலசு கிராமத்தில், தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்கள் தங்கி, பிரார்த்தனை செய்த இடத்தை காந்தி நினைவு மண்டபமாக அமைப்பது குறித்தும்;

39. ஒட்டன்சத்திரம் தொகுதி, விருப்பாட்சி ஊராட்சியிலுள்ள தளையூற்று மற்றும் சின்ன தளையூற்று இடங்களைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கவும்;

40. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அதிகமாகப் பயிரிடப்படும் பருத்தி, மக்காச்சோளம், சூரியகாந்தி, நிலக்கடலை ஆகிய பொருட்களை விற்பனை செய்வதற்கு, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பது குறித்தும்;

41. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உற்பத்தி செய்யும் மல்பரியை திண்டுக்கல் மாவட்டத்தில் விற்பனை செய்வதற்காக, அரசு கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

42. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் மாவட்ட உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களுடன் சேர்த்து சார்பு நீதிமன்றம் கொண்டு வந்து, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பது குறித்தும்;

43. ஒட்டன்சத்திரம் தொகுதியில், ஒட்டன்சத்திரம் நகராட்சி, கீரனூர் பேரூராட்சிப் பகுதிகளில் குடியிருக்க வீடு இல்லாத ஏழை, எளிய மக்களுக்கு தமிழ்நாடு அரசு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தர நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

44. ஒட்டன்சத்திரம் தொகுதியில் விருப்பாட்சி கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி கோபால்சாமி நாயக்கருக்கு மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது. அவரது

*பிறந்த நாளை அரசு விழாவாக அறிவிக்கவும், அவரது உருவம் பொறித்த தபால் தலை வெளியிடவும், அவரது வீரவாழ்க்கை வரலாற்றை பள்ளிப் பாடப் புத்தகத்தில் இடம்பெறச் செய்யவும் நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

**திரு. எம். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.*

**திரு. த. மனோ தங்கராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*“1. பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட பெரும்பான்மை மக்கள் தனியார் காடுகள் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசால் நியமிக்கப்பட்ட மூன்று குழுக்கள் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் பயிரிடப்படும் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கு இச்சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிப்பது குறித்தும்;*

*2. ரப்பர் விவசாயிகளுக்கு மானியம் வழங்கி, ரப்பருக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்வது குறித்தும்;*

*3. கச்சா முந்திரி இறக்குமதிக்கு மத்திய அரசு புதிதாக விதித்துள்ள 9.36 சதவிகிதம் வரியை ரத்து செய்ய தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்துவது குறித்தும்;*

*4. பேச்சிப்பாறை அணையைத் தூர் வாருவது குறித்தும்;*

*5. மாவட்ட அளவில் அரசுத் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சியர் தலைமையிலும், சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையிலும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் நடைபெறுவது குறித்தும்;*

*6. பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட கல்குளம் தாலுகா, குலசேகரம் அரசு மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும், அங்கு முழு நேர மகப்பேறு மருத்துவர்களை நியமித்து, அமரர் ஊர்தி வசதி ஏற்படுத்துவது குறித்தும்;*

*7. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிறுத்தப்பட்ட வழித்தடங்களில் பேருந்துகள் இயக்குவது குறித்தும் மற்றும் பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் இயக்குவது குறித்தும்;*

*8. பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட பத்மநாபபுரம் நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;*

*9. பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட உதயகிரி கோட்டையில் வன உயிரியல் பூங்கா அமைப்பது குறித்தும்;*

*10. நெகிழி பைகளை அரசு தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும்;*

*11. கடல் சீற்றம் உள்ளிட்ட இயற்கை இடர்களால் வீடுகள் இடிந்து பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க மாவட்ட அளவில் இயற்கை இடர் மேலாண்மைக்கு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும்;*

*12. பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட கோதையாறு பாசனத் திட்டக் கால்வாய்களைப் புனரமைப்பு செய்வது குறித்தும்;*

*13. பத்மநாபபுரம் தொகுதியில், பழுதடைந்துள்ள சாலைகளைச் சீரமைக்க வேண்டியது குறித்தும்;*

*14. பத்மநாபபுரம் தொகுதியை சூழியல் சுற்றுலாப் பகுதியாக அறிவிப்பு செய்வது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம், துறைமுகம் தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய 6 கோரிக்கைகள் அடங்கிய திருத்தத்தை நான் கொடுத்திருக்கின்றேன். அதை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையோடு கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

*"1. பிராட்வே பேருந்து நிலையத்தை தரம் உயர்த்துவது குறித்தும்;*

*2. மாநகரப் பேருந்து நிலையம் மற்றும் பழைய திருவள்ளுவர் பேருந்து நிலையம் ஆகியவற்றைத் தரம் உயர்த்துவது குறித்தும்;*

*3. துறைமுகம் பகுதியில் பல ஆண்டு காலமாக சாலையோரம் வசிக்கும் குடும்பங்களுக்கு நிரந்தர குடியிருப்பு ஏற்படுத்தித் தருவது குறித்தும்;*

*4. துறைமுகம் பகுதியிலுள்ள அன்னை சத்தியா நகரில் பாதுகாப்பற்ற நிலையில் குடிசையில் வசிக்கும் குடும்பங்களுக்கு நிரந்தர குடியிருப்பு ஏற்படுத்தித் தருவது குறித்தும்;*

*5. துறைமுகம் பகுதியில் குடிசை மாற்று வாரிய பழைய குடியிருப்புகளை மாற்றி புதிதாக குடியிருப்புகளைக் கட்டித் தருவது குறித்தும்;*

*6. சென்னை பாரதி மகளிர் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவிகளின் எண்ணிக்கைக்கேற்ப போதிய வகுப்பறைகள் கட்டித் தருவது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் (என்கிற) தாயகம் கவி அவர்கள்.

2016 ஜுன் 22]

**திரு. ப. சிவகுமார் (என்கிற) தாயகம் கவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

**திரு. ஐ.பி. செந்தில்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. பழனி சட்டமன்றத் தொகுதியில் பச்சையாறு அணைத் திட்டம் அறிவிப்பது குறித்தும்;*

*2. பழனி நகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிட கோடைக்கால நீர்த்தேக்கத்தில் அதிக நீர் தேக்கி வைத்து, அணையை ஆழப்படுத்தி, விரிவுபடுத்துவது குறித்தும்;*

*3. பழனியில் அரசு வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;*

*4. ஆயக்குடி பேரூராட்சியில் குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;*

*5. கொடைக்கானல் மலைவாழ் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;*

*6. கொடைக்கானல்—பழனி, மாற்று வழிப்பாதைத் திட்டம் அமைப்பது குறித்தும்;*

*7. பழனி ஒன்றியப் பகுதிகள் முழுவதும் பாலாறு—பொருந்தலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்துவது குறித்தும்;*

*8. பழனியில் மாவட்ட மருத்துவமனைக்கு நிகரான மருத்துவமனை அமைப்பது குறித்தும்;*

*9. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் இரண்டாவது ரோப் கார் அமைப்பது குறித்தும்;*

*10. கொடைக்கானலில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பது குறித்தும்;*

[திரு. ஐ.பி. செந்தில்குமார்] [2016 ஜூன் 22

11. கரும்பு மற்றும் நெல்லுக்கு உரிய விலை நிர்ணயம் செய்வது குறித்தும்;

12. கொடைக்கானல் மேல் மலை வழியாக மூணாறு செல்லும் சாலையைத் திறப்பது குறித்தும்;

13. கொடைக்கானல் மலைப் பகுதியில் நறுமணப் பயிர்கள் ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்தும்;

14. கொடைக்கானல் மேல் மலைப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளைப் பாதுகாத்திட குளிர்பதனக் கிட்டங்கி அமைப்பது குறித்தும்;

15. ஆயக்குடி, நெய்க்காரப்பட்டி, பாலசமுத்திரம் ஆகிய பேரூராட்சிகளில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம் அவர்கள்.

**திரு. கு.க. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. ஆலந்தூர் பகுதியில் ஆதம்பாக்கம்–தில்லைகங்காநகரில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

2. அடையாற்றின் குறுக்கே தரைப்பாக்கம்–அனகாபுத்தூர் மேம்பாலப் பணிகளை விரைந்து முடிப்பது குறித்தும்;

3. போரூர் ஏரியின் உபரி நீர் அடையாற்றினை சென்றடையும் வகையில் மணப்பாக்கத்தான் கால்வாய் பணிகளை துரிதப்படுத்த வேண்டியது குறித்தும்;

4. மௌலிவாக்கம் அடுக்குமாடிக் கட்டட விபத்தில் பாதிக்கப்பட்ட அரசு ஆதி திராவிடர் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தருவது குறித்தும்;

5. ஆலந்தூர் AJS நிதி மேல்நிலைப் பள்ளி அருகே இரயில்வே சுரங்கப் பாதை அமைப்பது குறித்தும்;

6. சென்னை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட நந்தம்பாக்கம், முகலிவாக்கம் மற்றும் மணப்பாக்கம் ஆகிய பகுதிகளில் பாதாளச் சாக்கடை அமைப்பது குறித்தும்;

7. சென்னை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட முகலிவாக்கம் மற்றும் மணப்பாக்கம் ஆகிய பகுதிகளில் மெட்ரோ குடிநீர் வழங்குவது குறித்தும்;

8. பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஆதம்பாக்கம் ஏரியைத் தூர் வாரி ஆதம்பாக்கம் பகுதியில் நீர் ஆதாரத்தைப் பெருக்குவது குறித்தும்;

9. கெருகம்பாக்கம்—கவுல்பஜார் இடையே அடையாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

முற்பகல் 10—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

*[திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி]* [2016 ஜூன் 22

*"1. திருவெறும்பூரில், திருச்சி பால் பண்ணை முதல் துவாக்குடி வரை அணுகு சாலை* (Service Road) *அமைப்பது குறித்தும்;*

*2. திருவெறும்பூரில் மகளிருக்கான அரசு பொறியியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;*

*3. திருவெறும்பூர் தொகுதியில் உள்ள ஒன்றியப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் புதுப்பிக்கப்பட வேண்டியது குறித்தும்;*

*4. திருவெறும்பூர் தாலூகா நீதிமன்றம் அமைக்க வேண்டியது குறித்தும்;*

*5. திருவெறும்பூரில் உள்ள வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகத்தை, வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக தரம் உயர்த்துவது குறித்தும்;*

*6. திருவெறும்பூர் தொகுதி முழுவதும் வீட்டுமனைப் பட்டா கிடைக்காத பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;*

*7. திருவெறும்பூர் உட்பட திருச்சி மாநகராட்சியோடு புதிதாக இணைக்கப்பட்டுள்ள 5–வது வார்டு பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு திட்ட அனுமதி வழங்கப்பட வேண்டியது குறித்தும்;*

*8. திருவெறும்பூர் தொகுதியில் சுகாதார சீர்கேடுகளைக் களைய நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்தும்;*

*9. திருவெறும்பூர் தொகுதியின் புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு பேருந்து வசதி அல்லது சிற்றுந்து வசதி* (Mini Bus) *செய்து தரப்பட வேண்டியது குறித்தும்;*

*10. திருவெறும்பூர் தொகுதியில் நிலவி வரும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

**திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

2016 ஜூன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. உடன்குடி அனல்மின் நிலையப் பணிகள் தொடங்குவது குறித்தும்;*

*2. திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் பேருந்து வசதியில்லாத கிராமங்களில் பேருந்து வசதி ஏற்படுத்தித் தருவது மற்றும் உடன்குடி பகுதியில் சிற்றுந்து இயக்குவது குறித்தும்;*

*3. கடம்பா குளம் மற்றும் கடம்பா குளத்திற்குக் கீழுள்ள, சீனிமாவடிகுளம், அம்மன்புரம் பெரியகுளம், நல்லூர் கீழக்குளம், நல்லூர் மேலக்குளம், ஓய்யான்குளம், வண்ணாங்குளம், நத்தக்குளம், நாலாயிரமுடையார் குளம், கானம்குளம், துலுக்கன்குளம், எல்லப்ப நாயக்கன்குளம், ஆவுடையார் குளம் மற்றும் நாலுமாவடி வாய்க்கால் குளம் போன்ற குளங்களைத் தூர் வாரி பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது குறித்தும்;*

*4. திருச்செந்தூர் தொகுதியில் உள்ள மீனவ கிராமங்களான மணப்பாடு, கல்லாமொழி, ஆலந்தலை, அமலிநகர் மற்றும் வீரபாண்டியன் பட்டணம் ஆகிய இடங்களில் தூண்டில் வளைவு அமைப்பது குறித்தும்;*

*5. திருச்செந்தூர் அரசு மருத்துவமனையை மாவட்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;*

*6. திருச்செந்தூரில் அனைத்து விளையாட்டு வீரர்களும் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;*

*7. காயல்பட்டணம் நகராட்சியில் 2–வது பைப் லைன் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்படுவது குறித்தும்;*

*8. திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி அமைப்பது குறித்தும்;*

9. நாசரேத் நூற்பாலையை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;

10. திருச்செந்தூர் செந்தில்முருகன் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

11. கடம்பா வடிகாலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்தும்;

12. திருச்செந்தூர் கோயிலுக்கு தனியாக புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

**திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. எழும்பூர் தொகுதியில் குடிநீரில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க ஏதுவாக பூமிக்கு அடியில் புதிய குடிநீர்க் குழாய்களை அமைப்பது குறித்தும்;

2. எழும்பூர் தொகுதியில் புதிய நீரேற்று நிலையம் (Pumping Staion) அமைப்பது குறித்தும்;

3. எழும்பூர் தொகுதியில் உள்ளடங்கிய நரியாங்காடு காவலர் குடியிருப்பு, கீழ்ப்பாக்கம் காவலர் குடியிருப்பு, கொய்யாதோப்பு காவலர் குடியிருப்பு மற்றும் புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் கோயில் காவலர் குடியிருப்பு ஆகிய காவலர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் செய்வது குறித்தும்;

4. எழும்பூர் தொகுதியில் பழுதடைந்துள்ள மின்மாற்றிகளுக்குப் பதிலாக புதிய கருவிகளை மாற்றுவது குறித்தும்;

*5. எழும்பூர் தொகுதியில் மூன்று தலைமுறைக்கு மேல் வசிப்போரின் வீடுகளுக்கு இலவசப் பட்டா வழங்குவது குறித்தும்;*

*6. எழும்பூர் தொகுதியில் உள்ள ஆர்.கே. காலனி, டாக்டர் சந்தோஷ் நகர், R.K. புரம், ஒசங்குளம், புதிய பூபதி நகர் குடிசை மாற்று வாரிய வீடுகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தருவது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.*

**திரு. எஸ். ஆஸ்டின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.*

**திரு. ப. ரங்கநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னால் கொடுக்கப்பட்ட திருத்தங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், திருத்தத்தை முன்மொழிகிறேன் என்று சொல்லுங்கள்.*

**திரு. ப. ரங்கநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. வில்லிவாக்கம் ஜி.கே.எம் காலனி, பட்மேடு இரயில் கடவு பாதை–1 மேம்பாலம் கட்டுவது குறித்தும்;*

*2. வில்லிவாக்கம் தொகுதியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்தும்;*

*3. சென்னை துறைமுகம்–மதுரவாயல் பறக்கும் சாலை திட்டப் பணிகளை மீண்டும் துவங்குவது குறித்தும்;*

*4. சென்னை பெருநகரத்தில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களில் நீண்டகாலமாக வசித்து*

[திரு. ப. ரங்கநாதன்] [2016 ஜூன் 22

வருகின்றவர்களுக்கு அவ்விடங்களை உரிமையாக்குவது குறித்தும்;

5. சென்னை மாநகரத்தில் பெருமழைக் காலங்களில் ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்கைத் தடுப்பது குறித்தும்;

6. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவரவர் தொகுதியில் அலுவலகங்கள் கட்டித் தருவது குறித்தும்;

7. சென்னை பெருநகரத்தில் புதிய மேம்பாலங்கள் உருவாக்குகின்ற செயற்குறிப்பு வெளியிடுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.

**திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. திருவொற்றியூர் தொகுதி, மணலி–திருவொற்றியூர் மாட்டு மந்தை இரயில்வே மேம்பாலம் மற்றும் சடையங்குப்பம் மேம்பாலப் பணிகளைத் துவங்குவது குறித்தும்;

2. திருவொற்றியூர் தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் குடிநீர்த் திட்டப் பணிகளை முடித்து, செயல்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;

3. திருவொற்றியூரில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் நிருவாக அதிகாரிகள் பணி நியமனம் செய்வது குறித்தும்;

4. திருவொற்றியூரில் உள்ள பாரதியார் நகர் முதல் நெட்டுக்குப்பம் மீனவர் கிராமம் வரையுள்ள நீண்ட கடற்கரைப் பகுதியில் கடல் அரிப்பைத் தடுக்க தூண்டில் வளைவுப் பணிகள் துவங்குவது குறித்தும்;

*5. திருவொற்றியூர் தொகுதி, எண்ணூர் ஆற்று முகத்துவாரப் பகுதியைத் தூர் வாரி, ஆழப்படுத்தி மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது குறித்தும்;*

*6. திருவொற்றியூர் தொகுதியில் உள்ள மீனவ மக்களுக்காக மீன்பிடித் துறைமுகப் பணிகள் துவக்கப்படுவது குறித்தும்;*

*7. மீனவ மக்களுக்காக வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தி வழங்குவது குறித்தும்;*

*8. தமிழகத்தில் உள்ள மீனவர்கள் பயன்படுத்தும் ஆறும் கடலும் சந்திக்கின்ற முகத்துவாரப் பகுதிகளை ஆழப்படுத்தி தூர்வாருவது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

**முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு அவர்கள்.*

**திரு. பெரியண்ணன் அரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*“1. புதுக்கோட்டை தொகுதியில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க தீர்வு காண்பது குறித்தும்;*

*2. புதுக்கோட்டை தொகுதியில் குண்டாறு, வெள்ளாறு நதிகளை இணைப்பது குறித்தும்;*

*3. புதுக்கோட்டை தொகுதியில் காவேரி உபரி நீரை அக்னி ஆற்றில் திருப்பிவிட்டு, பாசன வசதியைப் பெருக்குவதற்கான திட்டம் ஏற்படுத்துவது குறித்தும்;*

*4. புதுக்கோட்டை நகரின் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய காவேரி குடிநீர் இணைப்புக்கான திட்டம் ஏற்படுத்துவது குறித்தும்;*

5. புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலுள்ள கவிநாடு கண்மாய், வாராப்பூர் பெரிய கண்மாய், வாகவாசல் பெரிய கண்மாய், பெருங்களூர் பெரிய கண்மாய் ஆகிய நீர் நிலைகளைத் தூர்வாரி, நீர் நிலைகளில் நீரைத் தேக்கி பாசன வசதியையும், குடிநீர் வசதியையும் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

6. புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான தொண்டைமான் நகர், நரிமேடு, மாப்பிள்ளையார்குளம், காமராஜபுரம், போஸ் நகர், கோவில்பட்டி மற்றும் திருவள்ளுவர் நகர் ஆகிய பகுதிகளுக்கு பட்டா வழங்குவது குறித்தும்;

7. புதுக்கோட்டை நகர் மற்றும் நகரின் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைந்து துவக்குவது குறித்தும்;

8. புதுக்கோட்டை தொகுதியில் திருவப்பூர் முத்துமாரியம்மன் கோயில் புதிய தங்கத்தேரை பயன்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;

9. புதுக்கோட்டை தொகுதியில் ஸ்ரீபிரகதாம்பாள் கோயிலுக்கு குடமுழுக்கு செய்வது குறித்தும்;

10. புதுக்கோட்டை தொகுதியில் உள்ள இராணியார் அரசு மகப்பேறு மருத்துவமனையை சிறப்பு நிலை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

11. புதுக்கோட்டை நகரின் புறவழிச் சாலை அருகே ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

12. புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள கருக்காக்குறிச்சி, கரு.கீழத்தெரு, பொன்னன்விடுதி, வலங்கொண்டான்விடுதி, கணக்கன்காடு மற்றும் குரும்பிவயல் ஆகிய பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

13. புதுக்கோட்டை தொகுதியில் பெரிய ஊராட்சிகளான முள்ளங்குறிச்சி, வடவாளம், பெருங்களூர், 9A நத்தம்பண்ணை, பல்லவராயன்பத்தை மற்றும் வாகவாசல் ஆகியவற்றைப் பிரிப்பதற்கான அறிவிப்பு குறித்தும்;

14. புதுக்கோட்டை தொகுதி, மாந்தாங்குடி பெருங்கொண்டான்விடுதி, பெரியவாடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது, வாராப்பூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

15. புதுக்கோட்டையிலிருந்து வாகவாசல், இடையப்பட்டி, வடகன்வயல், பூங்குடி, வெள்ளனூர், காவேரி நகர் வழியாக கீரனூருக்கு புதிய நகரப் பேருந்து வழித்தடம் ஏற்படுத்துவது குறித்தும்;

16. புதுக்கோட்டை தொகுதியில் பேருந்து வசதி இல்லாத இடங்களுக்கு சிற்றுந்து இயக்குவது குறித்தும்;

17. புதுக்கோட்டை தொகுதியில் புறநகர்ப் பகுதி மக்களின் வசதிக்காக ஷேர் ஆட்டோ அல்லது சிற்றுந்து (Small Bus) வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

18 புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், திருமுருகப்பட்டிணம் மற்றும் ஆதி திராவிடர் குடியிருப்பு, முருங்கைக்கொல்லை பகுதியில் புதிதாக தொடக்கப் பள்ளி தொடங்குவது குறித்தும்;

19. புதுக்கோட்டை தொகுதியில் பெண்களுக்கென மேலும் ஓர் அரசு கலைக் கல்லூரி துவங்குவது குறித்தும்;

20. புதுக்கோட்டை நகரில் பிரகதாம்பாள் அரசு மேல்நிலைப் பள்ளியை இருபாலர் பள்ளியாக மாற்றுவது குறித்தும்;

21. புதுக்கோட்டை தொகுதியில் கணேஷ்நகர் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து பெரியார் நகர் பகுதியில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

22. புதுக்கோட்டை நகரில் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள அரசு போக்குவரத்துப் பணிமனையை சிப்காட் துணை மின் நிலையத்திற்கு அருகில் மாற்றி, பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவது குறித்தும்;

23. புதுக்கோட்டை தொகுதியில் சிப்காட் மற்றும் மச்சுவாடி தொழிற்பேட்டைகளைப் புதுப்பித்து வேலைவாய்ப்பு அதிகரிப்பது குறித்தும்;

*24. புதுக்கோட்டை தொகுதியில் கருவேப்பிலான் இரயில்வே கேட் மற்றும் திருவப்பூர் இரயில்வே கேட்டில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;*

*25. புதுக்கோட்டை நகரில் உள்ள குளங்கள் மற்றும் கால்வாய்களைத் தூர் வாரி நீர்வரத்தினை அதிகரிக்கச் செய்ய நிலத்தடி நீரை அதிகரிப்பதற்கான திட்டம் தீட்டுவது குறித்தும்;*

*26. புதுக்கோட்டை நகரில் காய்கறிகள், பழங்களைச் சேமித்து வைக்க குளிரூட்டப்பட்ட சேமிப்புக் கிடங்கு அமைப்பது குறித்தும்;*

*27. புதுக்கோட்டை கிராமங்களில் உள்ள மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றுவது குறித்தும்;*

*28. புதுக்கோட்டை நகரில் உள்ள பூங்காக்களைப் பராமரிப்பு செய்வது குறித்தும்;*

*29. புதுக்கோட்டை தொகுதியிலுள்ள சீமைக் கருவேல மரங்களை முற்றிலும் அகற்றுவது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.*

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. பாளையங்கோட்டை தொகுதி, பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் நகரப் பகுதிகளின் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள கழிவுநீர், குப்பைகள், கட்டடக் கழிவுகள், அமலைச்செடிகள் மற்றும் ஆகாயத் தாமரைகள் ஆகியவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

2. பாளையங்கோட்டை தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் ஏற்படுத்துவது குறித்தும்;

3. பாளையங்கோட்டை தொகுதியில் திருவனந்தபுரம் சாலையில் குழுவணிகாபுரம் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

4. பாளையங்கோட்டை தொகுதியில் மேலப்பாளையத்தில் அரசு கலைக் கல்லூரி துவக்குவது குறித்தும்;

5. திருநெல்வேலி மாநகரைச் சுற்றி வெளி சுற்று வட்டப் பாதை அமைப்பது குறித்தும்;

6. திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளுக்கு அரியநாயகபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றித் தருவது குறித்தும்;

7. தாமிரபரணி ஆற்றுப்படுகை ஆக்கிரமிப்புகளை அகற்றி துப்புரவுப் பணி மேற்கொள்வது குறித்தும்;

8. பாளையங்கால்வாயில் 43 கிலோ மீட்டர் சிமென்ட் லைனிங் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

***திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. சிங்காநல்லூர் தொகுதியில் ஜவுளித் தொழிலை மேம்படுத்துவதற்கு ஜவுளி ஆணையம் அமைப்பது குறித்தும்;

2. சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட ஹோப் காலேஜ் (பீளமேடு), பீளமேடு ராதாகிருஷ்ணா மில் சந்திப்பு, பாப்பநாயக்கன்பாளையம் லட்சுமி மில் சந்திப்பு,

[திரு. நா. கார்த்திக்] [2016 ஜூன் 22

*சிங்காநல்லூர் பேருந்து நிலையம், கோவை காந்திபுரம் பேருந்து நிலையம், கோவை இரயில் நிலையம், உக்கடம் பேருந்து நிலையம், அரசு மருத்துவமனை ஆகியவற்றுக்கு அருகில் சுரங்க நடைபாதைகள் அமைத்துத் தருவது குறித்தும்;*

3. *சிங்காநல்லூர் உழவர் சந்தை அருகில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்ட 30 ஆண்டுகள் பழமையான வீடுகளைப் புதுப்பிப்பது குறித்தும்;*

4. *சிங்காநல்லூர் தொகுதியில் மூன்று தினங்களுக்கு ஒரு முறை மாநகராட்சி நிருவாகம் குடிநீர் வழங்க வேண்டியது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

**திரு. ப. கார்த்திகேயன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

“1. *கரும்பிற்கான நிலுவைத் தொகையை, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை வழங்க வேண்டியது குறித்தும், தினக்கூலி தொழிலாளர்களை பணி நிரந்தரப்படுத்துவது குறித்தும்;*

2. *திருவாலங்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;*

3. *லட்சுமிவிலாசபுரம் கிராமப் பகுதியில் உள்ள கொசஸ்தலை ஆற்றில் தடுப்பணை கட்டுவது குறித்தும்;*

4. *திருவாலங்காடு துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;*

5. *சின்னமாபேட்டையில் அரசு தொழிற்கல்வி நிலையம் அமைப்பது குறித்தும்;*

2016 ஜூன் 22] [திரு. வி.ஜி. ராஜேந்திரன்]

6. திருவள்ளூரில் அரசு கலைக் கல்லூரி, அரசு மருத்துவக் கல்லூரி, அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி அமைப்பது குறித்தும், வேலைவாய்ப்புகளுக்காக தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;

7. கடம்பத்தூர் இரயில்வே மேம்பாலப் பணியை விரைந்து முடிப்பது குறித்தும்;

8. மாவட்ட தலைநகரமாகவும், புகழ் வாய்ந்த ஸ்ரீவீரராகவ பெருமாள் கோயில் உள்ள திருவள்ளூர் இரயில் நிலையத்தில் அனைத்து விரைவு இரயில்களும் நின்று செல்ல மத்திய அரசிடம் வலியுறுத்தி நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

9. திருவள்ளூர் நகராட்சியில் நடைபெறும் பாதாள சாக்கடைத் திட்டப் பணியை விரைந்து முடிக்கவும், தினமும் குடிநீர் வழங்க வசதியாக புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும், புதிய பைப் லைன் அமைக்கவும் நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

10. திருவள்ளூர் நகரில் சேவை ரோடு வழியாக புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

11. திருவள்ளூர் தொகுதியில், சுங்கச்சாவடி அருகே புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும், தொகுதியில் பழுதடைந்துள்ள அனைத்து சாலைகளையும் சீரமைப்பது குறித்தும்;

12. திருவள்ளூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் கூடுதல் படுக்கைகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்ட வேண்டியது குறித்தும்;

13. திருவள்ளூர், கடம்பத்தூர், திருவாலங்காடு மற்றும் பூண்டி ஒன்றியங்களில் உள்ள கிராமங்கள் வழியாக அரசு நகரப் பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

14. திருவள்ளூர் தொகுதியில் உள்ள கூவம், கொசஸ்தலை ஆகிய ஆறுகளில் மணல் திருட்டை முற்றிலும் தடுப்பது குறித்தும்;

15. திருவாலங்காட்டில் உள்ள சர்க்கரை ஆலையை மேலும் மேம்படுத்தி, காலம் தாழ்த்தாமல் கரும்புகளை வெட்டும் வகையில், கரும்பு அறுவடை இயந்திரத்தை அனைத்து சர்க்கரை ஆலைகளுக்கும் வழங்குவது குறித்தும், விவசாயிகளுக்கு ஆலை வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக அரசு வழங்குவது குறித்தும்;

[திரு. வி.ஜி. ராஜேந்திரன்] [2016 ஜூன் 22

16. பூண்டி ஏரியின் கரையைப் பலப்படுத்தி, ஏரியைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

**திரு. சு. புகழேந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

“1. மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அமராவதி அணையைத் தூர் வாருவது குறித்தும்;

2. மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள திருமூர்த்தி அணையைத் தூர் வாருவது குறித்தும்;

3. திருப்பூர் மாவட்டம், அமராவதி ஆற்றில் தேவையான இடத்தில் தடுப்பணை கட்டுவது குறித்தும்;

4. மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குடிநீர்த் திட்டங்களை புனரமைப்பது குறித்தும்;

5. மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மலைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

6. விவசாயக் கடனை முழுமையாக இரத்து செய்வது குறித்தும்;

7. மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முதியோர்களுக்கு ஓய்வூதியம் சீராக வழங்குவது குறித்தும்;

8. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் பணிக்கான ஊதியம் வாரம் ஒரு முறை வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

2016 ஜூன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

**திரு. வாகை சந்திரசேகர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.*

***திரு. பெ. சுப்ரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;*

*2. தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளியில் பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;*

*3. தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை நிறைவேற்றி அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவது குறித்தும்;*

*4. தருமபுரி தொகுதிக்குட்பட்ட மானியதள்ளி ஊராட்சியில் உள்ள அரசு துணை சுகாதார நிலையத்தை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;*

*5. தருமபுரி நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடைப் பணிகளை நிறைவேற்றுவது குறித்தும்;*

*6. தருமபுரி மாவட்டம், பாலக்கோடு மாரண்டஹள்ளி பகுதியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;*

*7. தருமபுரி தொகுதியில் தேவைப்படும் இடங்களில் பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் தனிநபர் கழிப்பிடங்கள் அமைத்துத் தருவது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

**திரு. மா. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*"1. கடையநல்லூர் தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவது குறித்தும்;*

*2. கடையநல்லூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவது குறித்தும்;*

*3. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான அரசு கலைக் கல்லூரியை கடையநல்லூர் நகராட்சி எல்லைக்குள்ளேயே அமைப்பது குறித்தும்;*

*4. கடையநல்லூர் தாலுகா அலுவலகத்திற்கு கடையநல்லூர் நகர எல்லைக்குள்ளேயே சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியது குறித்தும்;*

*5. கடையநல்லூர் நகரில் டெங்கு காய்ச்சல் பரவுவதைத் தடுத்திட நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*6. மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் அமைந்துள்ள விளைநிலங்களையும், விவசாயிகளையும் வனவிலங்குகளிடமிருந்து பாதுகாத்திட உரிய நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*7. செங்கோட்டை, குண்டாறு அணையினைத் தூர் வாரி, அணையின் உயரத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*8. செங்கோட்டை ஒன்றியத்தில் ஈத்தல் தொழில் தடை செய்யப்பட்டுள்ளதால் அத்தொழிலாளர்களை மாற்றுத் தொழிலில் ஈடுபடுத்துவது குறித்தும்;*

2016 ஜுன் 22] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

9. கடையநல்லூர் வட்டம், சொக்கம்பட்டி கிராமம், புனையாபுரம் கால்வாயில் பாலம் அமைப்பது குறித்தும்;

10. கடையநல்லூர் தொகுதியில், தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதுடன் அப்பகுதியிலேயே கொப்பரை உலர் கலன்கள் ஏற்படுத்துவது குறித்தும்;

11. கடையநல்லூரில் அனைத்து வசதிகளுடன்கூடிய உள்விளையாட்டரங்கத்துடன் விளையாட்டு மைதானம் ஏற்படுத்துவது குறித்தும்;

12. கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட செங்கோட்டை தவணை இணைப்புச் சாலையை சீரமைப்பது குறித்தும்;

13. கடையநல்லூர் தொகுதியில் வேலைவாய்ப்பைப் பெருக்கும் வகையில் தொழிற்சாலைகளை உருவாக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

14. கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் படுக்கை எண்ணிக்கையை உயர்த்தி, அறுவை சிகிச்சை நிபுணர், எலும்பு முறிவு நிபுணர் மற்றும் 24 மணி நேர காவலர் ஆகியோரை பணியமர்த்துவது குறித்தும்;

15. கடையநல்லூரில் புதிதாக கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்குவது மற்றும் கொசு ஒழிப்புப் பணி இடங்களை அதிகப்படுத்துவது குறித்தும்;

16. கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட அடவிநயினார் அணைக்கட்டுப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியது குறித்தும்;

17. செங்கோட்டை அரசு மருத்துவமனையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பவும், மருத்துவமனைக்குப் போதிய பாதுகாப்பு ஏற்படுத்தித் தருவது குறித்தும்;

18. கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட கருப்பாநதி அணையில் உள்ள கிணறுகளைத் தூர் வாரி கூடுதலாக புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பது குறித்தும்;

19. கருப்பாநதி அணைப் பகுதியில் கலைமான் நகரில் வாழும் பழங்குடியின மக்களின் குடியிருப்புகளைப் புதுப்பித்து

*மின்சாரம், குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் அம்மக்களின் குழந்தைகள் கல்வி கற்க சொக்கம்பட்டிக்குச் சென்று வர காலை, மாலை நேரங்களில் பேருந்து வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

**திரு. செ. ராஜேஷ் குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.*

**திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*“**1.** திருநெல்வேலி–மதுரை தேசிய நெடுஞ்சாலையிலிருந்து சங்கரன்கோவில், தென்காசி, சேரன்மகாதேவி வழியாக திருநெல்வேலி–கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் இணைப்பு ரோடு அமைப்பது குறித்தும்;*

*2. திருநெல்வேலி மாநகரப் பகுதியிலுள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தை அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்வது குறித்தும்;*

*3. திருநெல்வேலி நகரப் பகுதியில் புறநகர் பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;*

*4. திருநெல்வேலி தொகுதியில் உள்ள மானூர் பெரியகுளத்திற்கு ஆற்று உபரிநீர் வந்து சேருவதற்கு உபரி நீர் கால்வாய் சீரமைப்பது குறித்தும்;*

*5. திருநெல்வேலி தொகுதிக்குட்பட்ட மானூர் ஒன்றியத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;*

*6. கங்கைகொண்டான் தொழில்நுட்பப் பூங்கா திறப்பது குறித்தும்;*

7. பேட்டை நூற்பாலையை மீண்டும் திறப்பது குறித்தும்;

8. திருநெல்வேலி, நயினார்குளத்தில் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பூங்கா அமைப்பது குறித்தும்.

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

***திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திசைகள் எட்டு; இசை ஏழு; சுவை ஆறு; திணை ஐந்து; மறை நான்கு; தமிழ் மூன்று; இனம் இரண்டு; இறை ஒன்று; ஒன்றே குலம் ஒருவனே தேவன் என வகுத்து வாழ்கிற தமிழர்களின் இதயங்களில் தங்க சிம்மாசனம் போட்டு அமர்ந்து, தமிழ் இனத்தினுடைய முகமாக, முகவரியாக, மூச்சுக் காற்றாக, (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கடவுளாக விளங்குகிற எங்கள் இதய தெய்வம், கழகக் காவல் தெய்வம் மாட்சிமைகள் நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளைப் போற்றி! போற்றி!! எனப் பணிந்து வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைப் போன்று எளிமை; மழை நீரைப் போன்று தூய்மை; கண்ணில் என்றும் கருணை; கருணை நிறைந்த தாய்மை; பொது வாழ்வில் என்றும் எளிமை; எதிரிகளே அஞ்சுகிற ஆளுமை; எல்லோரும் வியக்கின்ற புதுமை; (மேசையைத் தட்டும் ஒலி) துயர்வரினும் கலங்காத பொறுமை; தொண்டுகளில் எப்பொழுதும் உண்மை; ஒருநாளும் தவறாத கடமை; உயிராக மதிக்கின்ற நேர்மை; அம்மா நீங்கள் தமிழகத்தை ஆள்வதோ தமிழ்நாட்டுக்குப் பெருமை (மேசையைத் தட்டும் ஒலி) எனச் சொல்லி தோளில் விழுந்த தோகை மயிலாய்;

*கோளில் சிறந்த குளிர்சாய் திங்களாய்; முறுக்கு உடைந்து மணக்கும் மலராய்; சிறகினில் தத்தும் செங்கால் அன்னமாய்; அமுதம் மொழிபகர் அழகின் பிம்பமாய்; குமுதம் மலர்விழி கமழும் கருங்குழல் வாழும் எளியார்; வசந்த பொழிலாய் வாழும் எங்கள் இதய தெய்வமே! எங்கள் அன்னையே!*

*கடலூர் மேற்கு மாவட்டத்தில் தங்கள் முகம் காண கொடிபிடித்து ஓடிவந்த பல்லாயிரக்கணக்கான தொண்டர்களில் எளியவன், சிறியவனான என்னை வளர்த்து, வார்த்தெடுத்து வழியாகவும், விழியாகவும் இருந்து வாழ்வளித்து, காட்டுமன்னார்கோவில் (தனி) தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து இரண்டாவது முறையாக வெற்றிபெற வைத்து, இம்மாமன்றத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த உயரிய உரைக்கு நன்றி சொல்லி உரையாற்றுகின்ற உயர்ந்ததோர் சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்த தாயே! தமிழே! தங்களின் திருவடிகளில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்கி மகிழ்கின்றேன். காட்டுமன்னார்கோவில் தொகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி தொடர வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆள்வலியும், தோள்வலியும், வாள்வலியும் கொண்டு போர்க்களம் சென்று போரிட்ட ஜான்சி நாட்டின் ராணி இலக்குமிபாய்; முகலாய ராணியாக தில்லி நிருவாகத்தை நடத்திய நூர்ஜஹான்; மன்னன் அகமது ஷாவை வென்ற ஆகோர் அரசி இலால்பாய்; அலாவுதீன் கில்ஜியை விரட்டியடித்த சித்தூர் ராணி பத்மினி; ஹைதர்அலி–திப்பு சுல்தானையே போரில் புறமுதுகிட்டு ஓட வைத்த மைசூர் ராணி லட்சுமிதேவி; தில்லி அரியணையின் முதல் பெண்ணரசி சுல்தானா; ஆங்கிலேயருடன் போரிட்ட கிட்டூர் ராணி சென்னம்மாள்; தமிழ்நாட்டில் கோலோச்சிய வீரமங்கை வேலுநாச்சியார் ஆகிய வீரப்பெண்களின் ஒத்த உருவாக, கருணையின் வடிவாக தென்னகத்தில், தமிழ் மண்ணில் தன்னந்தனியாக தனித்தே தேர்தல் களத்தில் நின்று, இறைபலம்கொண்டு தமிழக மக்களின் உள்ளங்களை உழைப்பால் வென்று, 32 ஆண்டுகளுக்குப் பிறகு, ஆள்கிற இயக்கமே மீண்டும் தொடர்ந்து ஆளும் என்கின்ற வரலாற்றை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் படைத்து, பெண் இனத்தின் பேரொளியாக,*

2016 ஜூன் 22] [திரு. என். முருகுமாறன்]

தமிழகத்தின் வெற்றித் திருமகளாய் திகழ்கின்றார் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைப் பெருமையோடு இந்தப் பேரவையில் எடுத்துச் சொல்வதில் மகிழ்வு காண்கின்றேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 முத்தான கோரிக்கைகளை முதலில் நான் முன்வைக்கின்றேன். கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில், காட்டுமன்னார்கோவில் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஸ்ரீமுஷ்ணத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய் வட்டத்தினை அமைத்துத் தந்திடவும், காட்டுமன்னார்கோவில் தொகுதியில், அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தந்திடவும், வெள்ளாற்றின் குறுக்கே காட்டுமன்னார்கோவில் தொகுதி, கள்ளிப்பாடிக்கும், புவனகிரி தொகுதி, காவனூருக்கும் இடையே புதிய உயர்மட்டப் பாலம் அமைத்துத் தந்திடவும் வேண்டும் என்ற முத்தான மூன்று கோரிக்கைகளை முத்தமிழ் நாட்டின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரை, அன்னைத் தமிழில், அழகு தமிழில் 38 பக்கங்களிலும், ஆங்கிலத்தில் 36 பக்கங்களிலுமாக 41 பத்திகளில், சந்தனமாய், ஜவ்வாதாய், மல்லிகையாய் மணக்கின்றது. நிதித் துறை, கல்வித் துறை, காவல் துறை, பொதுத் துறை, நீதித் துறை, வேளாண் துறை, மின்சாரம், சுகாதாரம், நீர்ப்பாசனம், கிராமப்புற மேம்பாடு, பொருளாதார முன்னேற்றம், பெண்கள் பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, தகவல் தொழில்நுட்பம் என எட்டுத் திக்கும் மின்னி மிளிர்கின்ற ஆளுநர் உரை, நமது ஆளுநர் உரை என்பதை மகிழ்ச்சியோடு இந்தப் பேரவையிலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசின் திட்டங்களை, மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ண ஓட்டங்களை, அப்படியே பிரதிபலிக்கும் அழகான உரை, ஆளுநர் உரை. (மேசையைத் தட்டும் ஒலி) “யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே” என்ற முதுமொழிக்கு ஏற்ப, நாளைவரும் நிதிநிலை அறிக்கைக்கு அச்சாரமாய், ஆதாரமாய், ஆணிவேராய் மேதகு ஆளுநர் உரை அமைந்திருக்கின்றது என்பதைப் பெருமையோடு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

*தமிழகத்தின் பொற்காலத்தை பொன்னெழுத்துக்களால் பொறிக்கின்ற பொன்மனத் தலைவி புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் கல்வெட்டுகளாய் காட்சி தருகின்றது மேதகு ஆளுநர் உரை.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் இரண்டு கை; அனைவரும் அறிந்ததே. மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மூன்று கை. ஒன்று வலது கை, மற்றொன்று இடது கை, மூன்றாவது தமிழக மக்கள் அவர்மீது கொண்டுள்ள அசைக்க முடியாத 'நம்பிக்கை'. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையின் இரண்டாம் பக்கத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையின்மீது கொண்டிருந்த நம்பிக்கையை தமிழக மக்கள் மீண்டும் நிலை நிறுத்தி, அவர்களின் தலைமையிலான அரசைத் தொடர்ந்து ஆட்சியில் அமர வைத்துள்ளனர் எனப் பெருமிதத்தோடு கோடிட்டுக் காட்டியிருக்கின்றார் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளராத நம்பிக்கை மக்களுக்கு உண்டு. அம்மா, உங்கள் உழைப்பால் தமிழகம் முதல் மாநிலமாக முன்னேறுமென்ற அசைக்கமுடியாத நம்பிக்கை மக்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, உங்கள் வரலாறு கல்வெட்டுக்களாய் காட்சியளிக்குமென்ற அசைக்க முடியாத நம்பிக்கை மக்களுக்கு உண்டு. அம்மா, உலக அரங்கில் உங்கள் பெயர் மட்டுமே தமிழினத்தின் முகவரியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) யானைக்கு பலம் அதன் தும்பிக்கை; யாதுமாகி நிற்கும் அம்மாவின் பலம் தமிழக மக்களின் நம்பிக்கை என்பதை நான் இந்தப் பேரவையிலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் துறையில், "உணவு தானியங்கள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் பயறு வகைகள் உற்பத்தியில் தன்னிறைவு அடையப்படும்; வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் உயரவும் விவசாயிகளின் வருவாய் பெருகவும், வழிவகை செய்யப்படும்" என மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருப்பது உழவர் பெருமக்களுக்கு உற்சாகத்தை அளிக்கின்றது. சொன்னதைச் செய்கின்ற முதல்வராக, முன்னுதாரணமாக, தமிழக வேளாண் துறையில் 2011–2012 ஆம் ஆண்டில், உணவு தானிய உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம்தான்*

2016 ஜூன் 22] [திரு. என். முருகுமாறன்]

*முதலிடம் என்ற அந்தஸ்தைத் தேடித் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) 2 கோடி ரூபாய் ரொக்கப் பரிசும், மத்திய அரசின் 'கிருஷி கர்மான்' விருதையும் பெற்றது தமிழகம் என்பதையும், 2013–2014 ஆம் ஆண்டில் சிறு தானிய உற்பத்தியில், இந்தியாவில் தமிழகம் முதலிடம் பெற்றதோடு, 2 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் 'கிருஷி கர்மான்' விருதையும் பெற்றது என்பதையும், 2014–2015 ஆம் ஆண்டில் பயறு வகை உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் முதலிடம் பெற்றதோடு, 2 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் 'கிருஷி கர்மான்' விருது பெற்றது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ஆக, கடந்த 5 ஆண்டுகளில் மூன்று முறை 'கிருஷி கர்மான்' விருதினைப் பெற்ற, இந்தியத் திருநாட்டின் ஒப்பற்ற மாநிலம் தமிழ் மாநிலம் என்கின்ற பெருமையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆள்கின்ற தமிழ்நாடு பெற்றிருக்கின்றது என்கின்ற பெருமையை எடுத்துச் சொல்ல விழைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*2013–2014 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள 29 மாநிலங்களில் தமிழகத்தில் வேளாண்மைத் துறையை சிறப்பாகத் தலைமையேற்று உணவு தானிய உற்பத்தியை அதிகப்படுத்தியதற்கு, 'இந்தியா டுடே' பத்திரிகையின் சிறந்த தலைமைக்கான தேசிய விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு வழங்கப்பட்டது என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–35*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014–2015 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையில் வலைதளம் மற்றும் கைபேசிமூலம் உடனுக்குடன் விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்திட கொண்டுவரப்பட்ட* e–Governance *இந்தியாவிலேயே முதன்மையாக, சிறப்பாகச் செயல்பட்டதற்கு 'தங்கப்பதக்கம்' பெற்றது தங்கத்தாரகை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆள்கின்ற தமிழகம் என்பதை நான் இங்கே பெருமையோடு கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பது அம்மாவின் மேலாண்மை; அதனால் வளர்ந்தது வேளாண்மை; இப்பொழுது நன்றாக உள்ளது வெள்ளாமை; இனி தொலைந்தது தமிழர்களுக்கு இல்லாமை என உரக்கச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி)*

அம்மா! காவேரி மக்களின் கண்ணீர் துடைத்தாய்! காலங்காலமாய் வரலாறு படைத்தாய்! முல்லைப் பெரியாறை உயர்த்தித் தந்தாய்! கெயில், மீத்தேனை விரட்டியடித்தாய்! எது செய்தாலும் நீங்கள் வீரத்தாய்! எப்பொழுதும் நீங்கள் ஒருவர்தான் தமிழர்களுக்கு வேளாண்தாய் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழுக்கும் அமுதென்று பேர்-அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்றான் பாவேந்தர் பாரதிதாசன். உயிருக்கு நேராய் உள்ள தமிழை உலகுக்கு அளித்திட தமிழுக்கு உண்மையாக உழைத்திட்ட உன்னதத் தலைவர்கள் மூவர். இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக்காட்டியவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்; தமிழ் உரிமையை, தமிழ் வளத்தின் பெருமைகளையெல்லாம் பேசுவதற்கு தகுதியும், மிகுதியும் படைத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை அங்கையற்கண்ணி குடியிருக்கின்ற மதுரையம்பதியில் நடத்திக் காட்டினார் இதய தெய்வம் பொன்மனத் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, எட்டாத உயரத்திற்கு தமிழகத்தைக் கொண்டு சென்ற நான்காம் தமிழாக வாழ்கிறார் சித்திரை மாதத்தை மீட்ட பத்தரை மாத்துத் தங்கம்! தமிழர்களின் அங்கம்! தீய சக்தியை வீழ்த்திய திராவிடச் சிங்கம் நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேதகு ஆளுநர் அவர்கள் உரையில், மத்திய அரசின் ஆட்சி மொழியாகவும், சென்னை உயர் நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாகவும் தாய் மொழியினை அறிவிக்க இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று கூறியிருப்பது தமிழர்களின் செவிகளில் தேனாய்ப் பாய்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் ஏகோபித்த பேராதரவோடு ஆறாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாழ்நாள் பொதுச் செயலாளர், மாட்சிமைகள் தங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பதவியேற்ற முதல் நாளே மகத்தான

2016 ஜூன் 22] [திரு. என். முருகுமாறன்]

ஐம்பெருந்திட்டங்களில் முதல் கையெழுத்திட்டு, மக்களைக் காப்பதில் தானே என்றும் இந்தியாவிற்கே முதன்மையான முதல்வர் என்பதைப் பறைசாற்றியுள்ளார் என்பதை நான் இங்கே பெருமிதத்தோடு கோடிட்டுக் காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வாக்களித்த தமிழக மக்களின் வாழ்வில் ஏற்றத்தைத் தந்துள்ளார். ஐம்பெருங்காப்பியங்களைப்போல தமிழர்தம் நெஞ்சில் இந்த ஐம்பெருந்திட்டங்களும் நிலைத்து நிற்கும் என மேதகு ஆளுநர் அவர்கள் உரை உணர்த்துகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதிப் பூசல்களற்ற, சமய சண்டைகளற்ற, சமரச உணர்வு மிகுந்த, நில அபகரிப்பற்ற, கட்ட பஞ்சாயத்துகளற்ற, கள்ளச்சாராயமற்ற, கலப்படமற்ற, கந்துவட்டியில்லாத, ஒழுக்கமான சட்டம்—ஒழுங்கு நிறைந்த, ஒரே பண்பாட்டுக் களமாக, இன்றைக்கு இந்தியாவில் அமைதிப் பூங்காவாக தமிழ்நாடு விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலத்தில் உள்ள அவலங்களை மாற்றி, அரசியல் குறுக்கீடுகளை அகற்றி, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் தமிழகக் காவல் துறை நவீனப்படுத்தப்பட்டு, கட்டமைப்புப் பணிகள் மேம்படுத்தப்பட்டு, Scotland Yard காவல் துறைக்கு இணையாக, வரலாறு காணாத அளவிற்கு சாதனை படைத்து, சரித்திரம் படைக்கிறது தமிழகக் காவல் துறை என்பதை நான் பெருமையோடு இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாதாரண அரசியல்வாதி அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பார், ஓர் அரசியல் ஞானி அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திப்பார், அப்படித்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய நுண்ணறிவால், விசாலப் பார்வையால் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023—ஐ உருவாக்கி, ஆவணத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இலட்சிய இலக்குகளை நோக்கி, தமிழ்நாட்டை இட்டுச்செல்ல, இந்தியாவில் முதன்முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, ஒருங்கிணைத்து, திட்டங்களுக்குப் பயன்படுத்த அமைப்பு சார்ந்த வரையறைகளை உருவாக்கியுள்ளார்கள். இந்தத் திட்டம் இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டம். மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தையிலே உதித்த திட்டம் என்பதை நான் பெருமையோடு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. என். முருகுமாறன்] [2016 ஜூன் 22

*முற்பகல் 10–40*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் என்றால் மகிழ்ச்சி, பெண் சிசு என்றால் அதிர்ச்சி. அம்மா, உங்கள் சிந்தனையில்தான் எத்தனை அழுத்தம்! உங்கள் மனதில்தான் எத்தனை வருத்தம்! தாய்ப்பால் கொடுக்கும் தாய்மை இனத்திற்கே கள்ளிப்பாலா! அன்பால் வளர்க்கும் அன்னை இனத்தையே அறுத்துப்போட ஐ.ஆர். 8 நெல்லா! துடித்துப் போனது உங்கள் உள்ளம். இப்போது நீங்கள் துவக்கி வைத்த திட்டத்தால் நிம்மதி கொள்கிறது பல மழலைச் செல்வங்கள். ஆம்! தொட்டில் குழந்தைத் திட்டம், வரலாற்று ஏடுகளில் எந்த அரசனும் தொட்டு வளர்க்காத திட்டம், மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட, உலகம் போற்றும் உன்னதத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) கருணையின் வடிவான அன்னை தெரசா அவர்கள் தமிழகம் வந்து கருணையும், வீரமும், விவேகமும், அறிவும், ஆற்றலும், திறமையும் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களை இல்லத்தில் சந்தித்து, வாழ்த்தி, பெருமை சேர்த்த பெரும்புகழ் கொண்ட திட்டம், இந்தத் திட்டம் என்பதை இங்கே நான் பெருமையோடு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முதியோர் உதவித் தொகை, முதல் மகள் அம்மா தந்த கருணைத் தொகை. தளர்ந்து போன மனதுக்கு தமிழக முதல்வரின் காணிக்கை. வளைந்து போன உடலுக்கு வாழும் வள்ளல் மாண்புமிகு அம்மா ஊட்டிய நம்பிக்கை. இந்தியாவில் தமிழகத்தில் முதியோர் உதவித் தொகை ஓராயிரம் ரூபாய், இனிமேல் ஓராயிரத்து ஐநூறு ரூபாய். முதியோரின் வருமானத்தை மட்டுமல்ல, அவர்களின் தன்மானத்தையும் காத்திட்ட முத்தமிழ் நாட்டின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “பெண்ணுக்கு பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ? மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை” என பொங்கி எழுந்தான் பாவேந்தன் பாரதிதாசன். அதனால் அவன் புரட்சிக் கவிஞன். இந்தியாவிற்கே தமிழ்நாடு வழிகாட்டியாக, பெண்களுக்கு ஒரு முன்னோடி முயற்சியாக, உள்ளாட்சி அமைப்புகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளில் 50 சதவிகித இட ஒதுக்கீட்டை*

2016 ஜூன் 22] [திரு. என். முருகுமாறன்]

உயர்த்தித் தந்தார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அவர் புரட்சித் தலைவி. புரட்சிக் கவிஞரின் கனவை நனவாக்கிய தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த ஆளுநர் உரை அழகாக எடுத்துச் சொல்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாடாய் உழைப்போருக்கு வீடில்லை, சோறில்லை" என்றார் புரட்சிக் கவிஞன். அது அந்தக் காலம். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், இருப்பதற்கு இடம்—பசுமை வீடு; உடுப்பதற்கு உடை—விலையில்லா வேட்டி, சேலை; உண்ணுவதற்கு உணவு—மாதந்தோறும் விலையில்லா 20 கிலோ அரிசி. இம்மூன்றிற்கும் உத்தரவாதம் தருகின்ற இந்தியாவின் முதல் மாநிலம் முத்தமிழ் நாட்டின் முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆள்கின்ற தமிழ் மாநிலம் என்பதைப் பெருமையோடு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் காவல் துறை துணை ஆய்வாளர் வெற்றிவேல் அவர்கள் பட்டப் பகலிலே வெட்டப்பட்டு குத்துயிரும், குலை உயிருமாக இரண்டு அமைச்சர்களின் முன்னிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். தண்ணீர், தண்ணீர் என்று கண்ணீர் மல்க வெற்றிவேல் கத்தினார், கதறினார். அவர்களின் செவிகளுக்குக் கேட்கவில்லை. அவருக்கு தண்ணீர்கூட தர முன்வரவில்லை. ஆனால், கிருஷ்ணகிரி மாவட்டம், யு. சிங்கிரிப்பள்ளி என்னும் இடத்தில் சங்கிலிப் பறிப்பு சம்பவம் தொடர்பாக ஓசூர் நகர காவல் நிலையத்தைச் சேர்ந்த தலைமைக் காவலர் முனுசாமி, காவல் உதவி ஆய்வாளர் குழுவினருடன் சென்று சந்தேகிக்கப்பட்ட நபர்களைப் பிடிக்க முற்படும்போது, அவர்கள் கத்தியால் தாக்கியதில் படுகாயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்தத் துயரச் சம்பவத்தால் உயிரிழந்த தலைமைக் காவலர் முனுசாமி குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்து 5 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்க மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள். 5 இலட்சம் ரூபாய் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருந்தாலும், கொள்ளையரைப் பிடிக்கும் முயற்சியில் உயிரிழந்த முனுசாமியின் குடும்பத்தினருக்கு இது போதுமான நிவாரணம் ஆகாது என எண்ணிக்கொண்டிருந்த

*வேளையில், தலைமைக் காவலர் முனுசாமியின் மகள் செல்வி ரக்ஷனா அவர்கள் பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சிபெற்று தன் தந்தையோடு மருத்துவக் கல்லூரி கலந்தாய்வில் கலந்துகொள்ள வேண்டுமென்ற கனவுகளோடு காத்திருந்த அந்தப் பொன்வேளையில் தனது தந்தை உயிரிழந்தார் என்பதை எண்ணி, மனமுருகி, கண்ணீர் சிந்தினார், கதறினார். ஓசூரில் அவர் ஓலமிட்ட சத்தம் கோட்டையிலே உள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் செவிகளுக்கு எட்டியதால், கருணையும், காருண்யமும், மனித நேயமும், மானுடப் பற்றும் கொண்ட மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், சட்டப் பேரவையில் விதி 110—ன்கீழ் வீர மரணம் அடைந்த தலைமைக் காவலர் குடும்பத்திற்கு இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் வழங்காத தொகையாக ரூபாய் ஒரு கோடி வழங்கியும், (மேசையைத் தட்டும் ஒலி) தலைமைக் காவலர் மகளின் உயர் கல்விச் செலவை அரசே ஏற்கும் என்கின்ற அறிவிப்பையும் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், காவலருக்கெல்லாம் காவலராக, முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக வள்ளல் மனத்தாய் மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10—45*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “இலங்கையில் வாழும் தமிழர்களுக்கும் பிற குடிமக்களைப் போன்று, சம உரிமைகளும், வசதி வாய்ப்புகளும் கிடைப்பதை உறுதிசெய்ய முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்” என ஆளுநர் அவர்கள் உரையில் கூறியிருப்பது, மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்ட கொள்கையில் உறுதியையும், உலகத் தமிழர்களின் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத ஒரே தலைவராக, உரிமைக் குரலாக, மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குவதையும் உணர முடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலத்தில் இதே அவையில், 2011—லிருந்து 2016 ஆம் ஆண்டுவரை தனது பொற்கால ஆட்சியில் இலங்கை நாட்டின்மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும், இந்தியா, இலங்கையை நட்பு நாடாகக் கருதக் கூடாது என்றும், இராஜபக்ஷே மீது போர்க் குற்றவாளி என குற்றம் சாட்டி, சர்வதேச நீதி விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைத் தந்த தமிழினத்தின் ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே*

நான் பேராண்மையோடு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்பது வெறும் ஒற்றைச் சொல் அல்ல, அது ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுடைய உயிர். அம்மா என்பது வெறும் ஒற்றைச் சொல் அல்ல, அது ஏழரைக் கோடி தமிழர்களுடைய முகவரி. அம்மா என்பது வெறும் ஒற்றைச் சொல் அல்ல, அது பன்னிரெண்டரை கோடி உலகத் தமிழர்களுடைய முகம். அம்மா என்பது வரலாறு. அம்மா மருந்தகங்கள், அம்மா உணவகங்கள், அம்மா குடிநீர், அம்மா சிமென்ட், அம்மா உப்பு என பல்வேறு திட்டங்கள் நடுத்தரக் குடும்பங்களை விலைவாசி உயர்விலிருந்து பாதுகாத்துக்கொள்ள கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த முயற்சிகள் தொடரும் என ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது; தமிழர் நலனைப் பேணுவதில், கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நிகர் அம்மாதான் என்பதை ஆளுநர் அவர்கள் பேருரை காட்டுகிறது என்பதை நான் இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால், நற்கரும்பின் சாற்றினிலே, தேன் கலந்து, பால் கலந்து, தெவிட்டாத தேன் சுவை கலந்து, ஊன் கலந்து, உவர்க்காமல் இனிப்பதைப்போல மேதகு ஆளுநர் அவர்கள் உரை உள்ளது என உரக்கச் சொல்லி, கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளிக்கும் பரமனைப்போல, கடைக்கோடி தொண்டனான எனக்கும், இந்த அவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரைமீது நன்றி சொல்லி உரையாற்றுகிற உயர்ந்ததொரு வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைச் சொல்லி அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகுமாறன் அவர்கள் பேசுகிறபோது, முதியோர் உதவித் தொகை ரூ.1,000/– என்று வழங்கப்படுவது இனி ரூ.1,500/– என்று சொன்னார்கள்.

*மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையிலே, முதியோர் உதவித் தொகை திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ரூ.1500/– என்பது உலாமாக்களுக்கான ஓய்வூதியம் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

**திரு. நா. கார்த்திக்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கியிருக்கின்ற உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழ் அறிஞர், செம்மொழிக் காவலர், எங்களுடைய உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இளைஞர்களின் எழுச்சி நாயகன், இளைய சமுதாயத்தின் இதய ஏந்தல், நாளைய தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், இளைய வானம்பாடிகளின் இதயக்கூட்டில் சிறகடித்துப் பறக்கிற, எங்களுடைய வணக்கத்திற்குரிய இலட்சியத் தளபதி, அன்பிற்குரிய அண்ணன் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவன்பான வணக்கத்தை முதலிலே தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று புகழப்படுகின்ற கொங்கு நாட்டின் தலைநகரமாம் கோவை மாவட்டத்திற்குட்பட்ட சிங்காநல்லூர் தொகுதியிலிருந்து என்னைத் தேர்வு செய்த பொதுமக்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பணிவன்பான நன்றியினை இந்த மன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*முற்பகல் 10–50*

*பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களும் மற்றும் பல்வேறு அரசியல் பேரறிஞர்களும் உரையாற்றிய இந்த மன்றத்தில் உரையாற்றுகிற நல்ல வாய்ப்பினை எனக்கு வழங்கியமைக்காக என்னுடைய உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்களுக்கும், என்னுடைய அரசியல் வழிகாட்டியாக, தமிழக இளைஞர்களுக்கெல்லாம் முன்னோடியாக திகழ்ந்து கொண்டிருக்கின்ற தளபதி அவர்களுக்கும் நான் இந்த நேரத்திலே நன்றியினை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2016 ஜூன் 22] [திரு. நா. கார்த்திக்]

கடந்த 16–6–2016 அன்று இந்த மாமன்றத்தில் ஆளுநர் அவர்கள் உரையினை நிகழ்த்தினார்கள். பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதற்காக இந்த அரசுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் விதமாக ஆளுநர் அவர்கள் உரை இருந்தது.

ஆளுநர் அவர்கள் உரையிலே பாலங்கள், சாலைகள், புறவழிச் சாலைகள் என்று பல்வேறு திட்டங்கள் குறித்து சொல்லியிருந்தார்கள். நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒண்டிப்புதூர், எஸ்.ஐ.எச்.எஸ். காலனி பகுதியிலே இரயில்வே உயர்மட்ட மேம்பாலப் பணி தொடர்ந்து நடைபெறாமல் இப்பொழுது மொத்தமாக அந்தப் பணிகள் நடைபெறாமல் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. அந்த எஸ்.ஐ.எச்.எஸ். காலனி பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் வசித்து வருகிறார்கள். சிறு, குறு, பெரிய தொழிற்சாலைகள் அங்கு நிறைய இருக்கின்றன. அந்தப் பாலம் வழியாகத்தான் இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்கிறார்கள். அந்த மக்களுடைய வசதிக்காகத்தான், 2010 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் புதல்வராகவும், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராகவும் அன்பிற்குரிய தளபதி அவர்கள் இருந்த நேரத்தில் 10–11–2010 ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு, அந்த இரயில்வே உயர்மட்டப் பாலத்தைக் கட்டுவதற்குண்டான அடிப்படைப் பணிகள் துவக்கப்பட்டன. இடையிலே நடந்த ஆட்சி மாற்றத்தின் காரணமாக காலதாமதமாக அந்தக் கட்டுமானப் பணிகள் துவக்கப்பட்டன. இன்றளவும் அந்த எஸ்.ஐ.எச்.எஸ். காலனி பகுதியில் கட்டுமானப் பணிகள் நடைபெறாமல் அந்தப் பகுதி மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணிகள் எந்தக் காரணத்திற்காக நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, உடனடியாக அந்த மக்களுடைய பயன்பாட்டிற்கு அந்தப் பாலத்தைத் திறந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்

ஆய்வு செய்து சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். அதற்குப் பதில் சொல்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகள் தொடர்பாக நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது; அதனால்தான் காலதாமதமாகின்றது. நீதிமன்றத்திலே வழக்கு முடிந்தபிறகு அந்தப் பணி துவங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்குண்டான நிதி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் ஒதுக்கப்பட்டது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

**திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி.

அதுமட்டுமன்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே திட்டங்களாகத் தீட்டப்பட்டு, துவக்கப்பட்ட சிங்காநல்லூர்—வெள்ளலூர் இணைப்பு இரயில்வே மேம்பாலத் திட்டப் பணிகளும் இந்த ஆட்சியிலே, கடந்த மூன்று ஆண்டுகாலமாக ஆமை வேகத்திலே மெதுவாக நடப்பதால், பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கு அந்தப் பாலம் திறந்துவிடப்படாமல் இருக்கிறது.

பீளமேடு இரயில்வே உயர்மட்ட மேம்பாலம்; அதைப்போலவே காந்திபுரம் பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, 2010 ஆம் ஆண்டு உலகத் தமிழ் செம்மொழி மாநாடு கோவையிலே நடைபெற்ற நேரத்தில், அந்த மாநாட்டினுடைய இறுதி நாளில் தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சராக இருந்த முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், மேம்பாலம் ஒன்று கட்டுவதற்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கி, அதற்குண்டான அடிப்படைப் பணிகளெல்லாம் அன்றைக்கு அந்த ஆட்சியிலே தொடங்கப்பட்டன.

முற்பகல் 10—55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஜூன் 22]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் அவர்களுக்கு அங்கு என்ன நடந்தது என்று எல்லாமே தெரியும். உண்மைக்கு மாறான தகவல் இந்த மன்றத்திலே பதிய கூடாது என்பதற்காக குறுக்கிட்டுப் பதில் சொல்கிறேன். அப்போது, செம்மொழி மாநாடு நடத்தி, அங்கு என்னென்ன நடந்தது என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். அந்த செம்மொழி மாநாட்டிலே அறிவிக்கப்பட்டது வெறும் அறிவிப்புகள்தான். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் காந்திபுரம் மேம்பாலத்திற்காக ரூபாய் 162 கோடி நிதி ஒதுக்கி இன்றைக்கு அந்தப் பாலப் பணிகள் புயல் வேகத்தில் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தப் பாலமும் அவ்வளவு வேகத்தில் நடக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினால் புயல் வேகத்தில் காந்திபுரம் மேம்பாலப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இவையெல்லாம் கோவை மாவட்ட மக்களுக்கு நன்றாகவே தெரியும்; திரு. கார்த்திக் அவர்களுக்கும் நன்றாகவே தெரியும்.

அதேபோல, எஸ்.ஐ.எச்.எஸ். காலனி பாலம் மற்றும் ஒண்டிப்புதூர் பாலங்களைப் பொறுத்தவரையில், ஒன்றில் நில எடுப்புப் பணி நடைபெற்று வருகிறது. மற்றொன்றில் நீதிமன்றத் தடை இருக்கிறது. அந்தப் பணிகளை எவ்வளவு வேகத்தில் முடிக்க முடியுமோ அவ்வளவு வேகத்தில் முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், காந்திபுரம் பாலம் மட்டுமல்ல, இன்றைக்கு அரசு மருத்துவமனை, குடிநீர்த் திட்டம், பாலங்கள், சாலைகள் என்று எந்தத் திட்டங்களாக இருந்தாலும் அவற்றிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியொதுக்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர், நடைபெறுகின்ற பணிகளைப் பற்றி அப்பட்டமாக மாற்றிச் சொன்னதால்தான் குறுக்கிட்டுப் பேச வேண்டியிருந்தது. அப்பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டதும், டெண்டர் விடப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும்

*கொஞ்சம் அமைதியாக உட்கார்ந்து நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதாவது, கன்னிப் பேச்சு பேசும்போது குறுக்கிடக் கூடாது என்பது ஒரு மரபாக இருந்தாலும், கன்னிப் பேச்சு பேசுகின்றவர்கள் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். கன்னிப் பேச்சு பேசுகிற உறுப்பினர் குற்றச்சாட்டு ஏதும் இல்லாமல் பேசினால் தவறில்லை. (குறுக்கீடுகள்) குறுக்கிட மாட்டார்கள். ஆனால், அவர் ஒரு குற்றச்சாட்டு சொல்கின்றபோது மாண்புமிகு அமைச்சர்கள் அதற்கான விளக்கங்களைச் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். குற்றச்சாட்டு சொன்னதால்தான் மாண்புமிகு அமைச்சர் பதில் சொன்னார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம்தான் தந்தார். இதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது கேள்வி கேட்டார். அதற்குண்டான பதிலைச் சொன்னோம். (குறுக்கீடுகள்) இதில் என்ன பிரச்சினை இருக்கிறது? ஏன் நீங்கள் எழுந்து நிற்கிறீர்கள் என்று புரியவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் கேள்வி கேட்கும்போது பதில் சொல்ல வேண்டியது எங்கள் கடமை. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், என்ன? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் கொஞ்சம் அமைதியாக உட்காருங்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. முருகுமாறன் அவர்கள் முழுமையாகப் பேசி முடித்தார்கள். அவர் பேச்சில் ஒரு விளக்கம் சொல்ல வேண்டியிருந்தது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மிகப் பெருந்தன்மையோடு உட்கார்ந்திருந்து, அவர் பேசி முடித்தவுடன் பதில் அளித்தார்.* He is a gentleman. I really appreciate him. *(மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பெருந்தன்மையோடு, நாகரிகத்தோடு பேசி முடித்தார். ஆனால், நீங்கள் நடுவில், நடுவில் எழுந்தால் எப்படி? அதையெல்லாம்*

2016 ஜூன் 22] [திரு. துரைமுருகன்]

*நான் ஏற்றுக்கொள்ள முடியாது. கன்னிப் பேச்சில் குறுக்கிட்டால் நாங்கள் அத்துணை பேரும் குறுக்கிடுவோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11—00*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு மூத்த உறுப்பினர், ஏற்கெனவே பல முறை அமைச்சராக இந்த அவையில் வீற்றிருந்தவர். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர், கருத்துகளைச் சொல்லாமல் குற்றச்சாட்டாகவே சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) சுருக்கமாக பத்து வினாடியில் நாங்கள் பதிலைச் சொல்லி உட்கார்ந்துவிட்டோம். (குறுக்கீடுகள்) ஆனால், அவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் போடப்பட்ட பாலங்களைப் பற்றி தொடர்ந்து குறை சொல்லிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் அதற்கு விளக்கம் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. (குறுக்கீடுகள்) இதில் வேறு ஒன்றும் கிடையாது. (குறுக்கீடுகள்) நாங்கள் வேறு ஒன்றும் சொல்லவில்லையே! நீங்கள் என்னென்ன பாலங்கள் நிலுவையில் உள்ளன என்று இங்கே சொன்னீர்கள். அதற்கு விளக்கம் கொடுத்திருக்கின்றோம். (குறுக்கீடுகள்) இதில் வேறு ஒன்றும் நாங்கள் சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்) நீங்கள் காந்திபுரம் பாலம் பற்றிப் பேசினீர்கள். நீங்கள் வெறும் அறிவிப்புதான் கொடுத்தீர்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் அதற்கு நிதியொதுக்கீடு செய்து, டெண்டர் விடப்பட்டு, பாலப் பணிகள் விரைந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சென்னை, போரூர் பாலம் சம்பந்தமாக அறிவித்தீர்கள். வெறும் அறிவிப்பு கொடுத்தீர்கள், டெண்டர் விட்டீர்கள், அடிக்கல் நாட்டினீர்கள்; அதோடு நின்றுபோய்விட்டது. இரண்டாவது, அதற்குத் தேவையான நிலத்தை எடுக்கவில்லை. நீதிமன்றத்திற்குப் போய் 4 ஆண்டு காலம் போராடி, நீதிமன்றத்திலே தீர்ப்பைப் பெற்று, பிறகு அந்தப் பாலப் பணியைத் துவங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அப்படி இல்லை. திட்டமிட்டு பணிகள் துவங்கப்படுகின்றன. பாலப் பணிக்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்திய பிறகுதான் பாலப் பணியைத் துவக்குகிறோம். ஆகவே, சிறப்பான*

முறையில் அம்மா அவர்களுடைய ஆட்சி நடைபெற்று வருகின்றது. உங்கள் காலத்திலே, பாலப் பணிகளுக்குத் தேவையான நிலத்தை கையகப்படுத்தாத காரணத்தினால் பாலப் பணிகள் தற்போது காலதாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்பு இல்லை. ஏற்கெனவே இந்த அவையில் இதைப்பற்றியெல்லாம் விவாதித்திருக்கின்றோம். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதியினுடைய கோரிக்கையை வைத்தால் அதை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கேட்கும், நாங்களும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருப்போம். ஆனால், நிதி ஒதுக்கியது அவருடைய தலைவர், அவர்களுடைய அரசு என்று தவறான புள்ளிவிவரத்தை அவர் கூறும்போது நாங்கள் எப்படி பார்த்துக்கொண்டிருக்க முடியும்? அதைப்போல மூத்த உறுப்பினர்கள் திரு. துரைமுருகன், திரு. பொன்முடி போன்றவர்கள் இருக்கின்றார்கள். நாங்களும் 2006–ல் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்திருக்கின்றோம். நாங்கள் பேசும்போது, அவர்கள் எப்படிப் பதில் சொன்னார்கள் என்பதை நாங்களும் பார்த்துக்கொண்டுதான் இருந்தோம். ஆகவே, அவசியமான நேரத்தில், தவறான புள்ளிவிவரத்தைச் சொல்லும்போது அதற்குப் பதில் சொல்லத்தான் நாங்கள் இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனைத் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கியது புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இவருடைய தலைவர்தான் நிதியை ஒதுக்கினார்கள் என்று சொன்னால் நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? ஒவ்வொரு திட்டத்திற்கும் சரியான புள்ளிவிவரங்களை நாங்கள் கையில் வைத்திருக்கின்றோம். ஆகவே, பேசும்போது கோரிக்கை வைத்தால், நாங்கள் அதைக் கேட்கின்றோம். ஆனால், தவறான புள்ளிவிவரங்களை அளித்தால், நாங்கள் பதில் சொல்லத்தான் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

2016 ஜூன் 22]

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு அமைச்சர்கள் குறுக்கிடுவதையோ, விளக்கம் சொல்வதையோ நான் குறிப்பிடவில்லை. காரணம், அதற்காகத்தான் அமைச்சர்களாக இருக்கின்றீர்கள். ஆனால், நாங்கள் ஒன்றே ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்கின்றோம். இங்கு புதியதாக வந்து கன்னிப் பேச்சு பேசுகின்றவர்களுக்கு மட்டும் நீங்கள் அனுசரணையாக இருந்து, அவர்கள் பேசி முடித்தவுடன் என்ன விளக்கம் சொல்ல வேண்டுமோ, என்ன கருத்தைச் சொல்ல வேண்டுமோ அவற்றைக் கூறுங்கள், நாங்கள் குறுக்கிடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் அமைதியாகத்தான் அமர்ந்து கொண்டிருந்தோம். உங்களுக்கே தெரியும், நீங்கள் எங்களை நேரடியாகத்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். உறுப்பினர் குற்றச்சாட்டை தொடர்ந்து கூறிக்கொண்டிருந்த காரணத்தினால்தான், அதற்குப் பதில் சொல்லக்கூடிய நிலை ஏற்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், நீங்கள் கன்னிப் பேச்சு பேசுகின்றீர்கள். நீங்கள் குற்றச்சாட்டு இல்லாமல் நன்றாகப் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூத்த உறுப்பினர்கள் அமைச்சர்களாக இருந்தவர்கள்; 2006—ஐ சற்று நினைவுகூர்ந்து பார்க்க வேண்டும். 2006—ல் ஒட்டுமொத்தமாக எங்கள் அனைவரையும் நீங்கள் ஜனநாயகத்திற்கு விரோதமான அடிப்படையில் வெளியேற்றினீர்கள். ஆனால், தன்னந்தனியாக மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றத்திற்கு வருகை தந்து உரையாற்றியபோது எல்லா அமைச்சர்களும் 65 முறை குறுக்கீடு செய்தீர்களா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. கார்த்திக், நீங்கள் பேசுங்கள்.*

[2016 ஜுன் 22

**திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கக்கூடிய கருத்துகள் தொடர்பாகத்தான் நான் பேசுகின்றேன். சிங்காநல்லூர் தொகுதி, என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த தொகுதி. அந்தத் தொகுதியில் 3 பாலங்கள் பல வருட காலமாகக் கட்டப்படாமல் இருப்பதால், உடனடியாக இந்த அரசு தலையிட்டு அந்தப் பணிகளை விரைவுபடுத்தி கட்டித் தர வேண்டும் என்பதற்காகத்தான் நான் அதைக் குறிப்பிட்டேனே தவிர குற்றச்சாட்டுகள் சொல்லவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே நீலிக்கோனாம்பாளையம் பகுதி எல்.சி.5 என்ற இரயில்வே உயர்மட்ட மேம்பாலப் பணி, தண்ணீர்பந்தல் எல்.சி.6 என்கின்ற இரயில்வே உயர்மட்ட மேம்பாலப் பணி இவற்றுக்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்கி அந்தப் பகுதிகளிலே போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–05*

அதைப்போலவே, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட பல்வேறு இடங்கள், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சிங்காநல்லூர் தொகுதி, கோவை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 37–வது வட்டம், 38–வது வட்டம், 39–வது வட்டம், 40–வது வட்டம், அதைப்போலவே 55 முதல் 66 வரை 74, 75 இந்த அனைத்து வட்டங்களிலும் பில்லூர் முதலாம் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகவும், பில்லூர் இரண்டாம் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகவும் குடிநீர் வழங்கப்படுகிறது. குடிநீர் எப்படி வழங்கப்படுகிறது என்று சொன்னால், இந்த மாநகரத்தை ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டால், கோவை மாநகராட்சி 100 வட்டங்களைக் கொண்ட மாநகராட்சி. அந்த 100 வட்டங்களில், நான் குறிப்பிட்டுச் சொன்ன ** நாங்கள் தவறாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** தவறான குற்றச்சாட்டு. அதற்குப் பதிலாக ** அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜூன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள், பார்த்துக்கொள்ளலாம். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடுகள்) ** என்பது தவறான குற்றச்சாட்டு. அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *விளக்கம்தானே? (குறுக்கீடுகள்) இல்லை. அவர் அதைப் பேசாதிருந்தால் விளக்கமளிக்க வேண்டியதில்லை.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *அவர் கோரிக்கை வைத்தால் பரவாயில்லை. ** என்ன ஆதாரம் இருக்கின்றது? அவர் ஆதாரம் ஏதேனும் வைத்திருக்கின்றாரா? அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள். இப்படி எல்லாம் எழுந்திருக்காதீர்கள், உட்காருங்கள். சொல்வதைக் கேளுங்கள். அவர் ** என்று சொல்கிறார். அதற்குப் பதில் சொல்ல வேண்டியது உள்ளாட்சித் துறை அமைச்சருடைய கடமை. அது தவறா? (குறுக்கீடுகள்) உறுப்பினர் அவையை மேற்கொண்டும்* Mislead *செய்யக் கூடாது என்பதற்காகத்தான் அமைச்சர் எழுந்திருந்து பதில் சொல்கிறார். அதனை நான்* allow *பண்ண வேண்டிய நிலையில் இருக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் சாதாரணமாகப் பேசினால், அமைச்சர் குறுக்கிட்டால் கூட, இருங்கள், கடைசியில் சொல்லலாம் என்று நான் சொல்வேன். ஆனால், அவையை* mislead *செய்வது போலப் பேசினார். (குறுக்கீடுகள்) இல்லை.* Mislead *செய்வது போல் பேசக் கூடாது. பேசினால் அவர் பதில் சொல்லத்தானே வேண்டும்? உட்காருங்கள். இது ஒரு பெரிய விஷயமே இல்லை. (குறுக்கீடுகள்) அதற்குத்தான் பதில் சொல்கிறார். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) தீர்த்து வைப்பதற்குத்தான் அவர் பதில் சொன்னார். திரு. கார்த்திக், பேசுங்கள்.*

**திரு. நா. கார்த்திக்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றச்சாட்டுகளாகச் சொல்லவில்லை. நான் சொல்கிற அந்தக் குறைகளை எல்லாம் பொதுமக்களுக்குத் தேவையான முறையிலே இந்த மன்றம் செய்து தர வேண்டும் என்பதற்காக உங்களுக்கு நான்*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. நா. கார்த்திக்] [2016 ஜூன் 22

சொல்கிறேன். அந்த வேண்டுகோள்களை எல்லாம் நான் சொல்லி முடித்தவுடன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ** நான் இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போலவே குடிசை. . . (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவர் பேசட்டும் என்று இருந்தேன். (குறுக்கீடுகள்) அவர் கோரிக்கையாக வைத்தால் சரி. திரும்பவும் அதே கருத்தைப் பதிவு செய்கிறார். (குறுக்கீடுகள்) ** சொல்கிறார். தவறான குற்றச்சாட்டை சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று சொல்வதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் எப்படிப் பதில் சொல்லாமல் இருப்பது? அவையை* mislead *செய்வது போன்று உறுப்பினர் பேச்சு இருக்கிறது. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவர் முழுமையாக* House–ஐ mislead *செய்த பிறகு, நேரம் கடந்து மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்வதில் பிரயோஜனம் இல்லை. (குறுக்கீடுகள்) அவர்* mislead *செய்யக் கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு இல்லாமல் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்குப் புறம்பான தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2016 ஜூன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்களே இப்படிச் செய்கிறீர்களே! (குறுக்கீடுகள்) நீங்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவர். நீங்கள் உங்கள் கட்சி உறுப்பினர்கள் எல்லோரையும் அடக்க வேண்டியவர். நீங்களே எல்லோரையும் எழுந்திருங்கள், எழுந்திருங்கள் என்று எழுப்பிவிட்டுக் கொண்டிருக்கிறீர்களே! இது என்ன முறை? (குறுக்கீடுகள்) எப்படி நான் சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்) நீங்கள் எனக்கு உதவி செய்வதை விட்டு விட்டு, எல்லோரையும் நீங்களே எழுப்பிவிட்டுக் கொண்டிருக்கிறீர்களே! இது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) திரு. கார்த்திக், நீங்கள் பேசுங்கள்.*

**திரு. நா. கார்த்திக்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை வீடுகள் கட்டித் தருவது சம்பந்தமாக ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோவை, சிங்காநல்லூர் மற்றும் கோவை மாநகராட்சிப் பகுதிகளில் நீர்வழித் தடங்களிலும், குளக்கரைகளிலும், சாலையோர ஆக்கிரமிப்புகளிலும் சாதாரணமான ஏழையெளிய மக்கள் வசித்து வருகிறார்கள். அந்த ஏழையெளிய மக்களுக்கெல்லாம் மாற்று இடங்கள் கட்டித் தரக்கூடிய திட்டத்தை, 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும், தமிழகத்தின் துணை முதலமைச்சராக இருந்த அன்பிற்குரிய அண்ணன் தளபதி அவர்களும் ஜவஹர்லால் நேரு குடிசைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரக்கூடிய அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து, அவர்களுக்கு உக்கடம் போன்ற பகுதிகளிலே மாற்று வீடுகள் கட்டப்பட்டன. ஆனால், ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு நீர் வழித் தடங்களிலே தொடர்ந்து வசிக்கக்கூடிய அந்த மக்களுக்கு, சாலைகளிலே வசிக்கக்கூடிய அந்த மக்களுக்கு, குளக்கரைகளிலே வசிக்கின்ற அந்த மக்களுக்கு இன்னும் அந்த வீடுகளை மாற்றித் தரவில்லை. ஆகவே, அந்த நீர் வழித் தடங்களிலே எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல், சுகாதாரச் சீர்கேட்டோடு வாழ்ந்து வருகின்ற சாதாரண மக்களுக்கு அந்த வீடுகளையெல்லாம் மாற்றிக் கொடுக்கின்ற திட்டத்தை இந்த அரசு உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

*அதைப்போலவே, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட, சிங்காநல்லூர் உழவர் சந்தையருகில்* Housing Units, *அடுக்குமாடிக்*

குடியிருப்புகள் இருக்கின்றன. அந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் பழுதடைந்த நிலையிலிருக்கின்றன. அவற்றில் இருக்கக்கூடிய மக்கள், சாதாரண மக்கள். அந்த மக்களுடைய பழுதடைந்த வீடுகளையெல்லாம் மாற்றி கட்டித் தரக்கூடிய அந்தத் திட்டத்தை இந்த அரசு உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேச ஆரம்பித்து 25 நிமிடங்கள் ஆகின்றன.

**திரு. நா. கார்த்திக்:** கோவை மாநகரத்திலே போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக மெட்ரோ இரயில் திட்டத்தை கோவைக்குக் கொண்டு வருவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போலவே, கோவை நகரத்திற்குள் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே கொண்டுவரப்பட்ட மேற்கு புறவழிச் சாலைத் திட்டத்தை உடனடியாக இந்த அரசு செயல்படுத்துவதற்கு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–15*

கோவை மாநகரத்திலே பல்வேறு இடங்களிலே சாலைகளைக் கடப்பதற்கு பொதுமக்கள் மிகவும் பயப்படுகிறார்கள், அச்சப்படுகிறார்கள். அந்த அளவுக்கு சாலைப் போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஹோப் காலேஜ் பகுதியிலே சுரங்க நடைபாதை அமைக்க வேண்டும். சிங்காநல்லூர் பேருந்து நிலையம், பீளமேடு ராதாகிருஷ்ணா மில்ஸ் சந்திப்பு, பாப்பநாயக்கன்பாளையம்—லட்சுமி மில் ஆலை சந்திப்பு, இராமநாதபுரம் நான்கு முனை சந்திப்பு, கோவை அரசு மருத்துவமனை அருகில், இரயில் நிலையம் அருகில் இப்படி நான் குறிப்பிட்ட இந்த இடங்களில் மக்கள் சாலையைக் கடப்பதற்கு உடனடியாக சுரங்க நடைபாதைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, மழைக் காலங்களிலே பார்த்தீர்களென்றால், கடந்த 5 ஆண்டுக் காலமாக தூர் வாரும் மரபே கிடையாது. சங்கனூர் ஓடையில் தூர் வாருவது கிடையாது. நொய்யல் ஆற்றங்கரைகளைத் தூர் வாருவது கிடையாது. அதுமட்டுமல்ல,

2016 ஜூன் 22] [திரு. நா. கார்த்திக்]

ஏற்கெனவே, 2006 ஆம் ஆண்டிலேயிருந்து 2011 ஆம் ஆண்டு வரை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இருந்த நேரத்தில் அன்றைக்கு மாநகராட்சியினுடைய துணை மேயராக நான் இருந்தேன். அன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், அதைப்போலவே அன்றைய பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த அன்பிற்குரிய அண்ணன் துரைமுருகன் அவர்களையும் நானும், அன்றைய மேயர் திரு. வெங்கடாச்சலம் அவர்களும் நேரடியாகச் சந்தித்து, கோவையிலே இருக்கக்கூடிய 7 குளங்களைத் தூர் வாரி அந்தக் கரைகளைப் பலப்படுத்தி, அதன்மூலமாக அந்த நீர் வழித்தடங்களையெல்லாம் சுத்தப்படுத்தி, நீராதாரத்தைப் பெருக்குவதற்காக பொதுப் பணித் துறையின் வசம் இருக்கக்கூடிய குளங்களையெல்லாம் மாநகராட்சியினுடைய பராமரிப்புக்குத் தாருங்கள் என்று நாங்கள் வேண்டுகோள் வைத்தோம். அதைப்போலவே, மாநகராட்சிக்கு அந்தக் குளங்களைப் பராமரிப்பதற்கு அன்றைக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு உக்கடம் பகுதியில் உள்ள ஒரு குளத்தை மட்டும் தூர் வாரி மேம்படுத்தியிருக்கின்றார்கள். மீதமிருக்கக்கூடிய குளங்கள் தூர் வாரப்படாமல் இருக்கின்றன.

அதைப்போலவே, நீர் வழித் தடங்கள்; சங்கனூர், நொய்யலாறு போன்ற ஓடைகளை, நீர் வழித் தடங்களை தூர் வாரி, நீராதாரங்களைப் பெருக்குவதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கோவை மாநகராட்சிப் பகுதியில் 2007 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே 377 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் நிதியொதுக்கி, தமிழ்நாட்டின் அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த அன்பிற்குரிய தளபதி அவர்கள் அதற்குண்டான திட்டத்தைத் தொடங்கி வைத்தார். பாதாளச் சாக்கடை கட்டுமானத் திட்டத்திற்கான அந்த டெண்டர் நடைமுறைகளெல்லாம் பின்பற்றப்பட்டு, 2009–2010 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டன. கட்டுமானப் பணிகள் தொடங்கி இன்றோடு கிட்டத்தட்ட 7, 8 வருடங்கள் ஆகிவிட்டன. இந்த 7, 8 வருட காலமாக, குறிப்பாக, கணபதி, சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், வரதராஜபுரம், சாரமேடு, ஜி.எம். நகர், மஜீத் காலனி இப்படி பல்வேறு இடங்களிலே பாதாளச் சாக்கடை கட்டுமானப் பணிகள்

[திரு. நா. கார்த்திக்] [2016 ஜூன் 22

இன்றுவரை சரியாக நடைபெறவில்லை. அந்தப் பணிகள் நடைபெறுகிறதா, இல்லையா என்பதை அங்கு இருக்கக்கூடிய ஆணையாளரோ, நிருவாகப் பொறியாளரோ, துணை ஆணையாளரோ, உதவி ஆணையாளரோ யாருமே வந்து எட்டிப் பார்ப்பது கிடையாது. ** அந்தப் பணிகள் அனைத்தும் மிக மிகத் தாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மட்டுமல்ல. உறுப்பினர் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது ** சம்பந்தமாகப் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடு) அவருடைய கன்னிப் பேச்சில் கோரிக்கைகளை வைப்பாரென்று பார்த்தால், குற்றச்சாட்டுகளையே பதிய வைத்துக் கொண்டிருக்கிறார். அதுவும் தவறான புள்ளிவிவரத்தைப் பதிய வைக்கிறார். எல்லாமே அவருடைய தலைவர் ஆட்சியிலே இருந்தது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது கொண்டு வந்தார் என்று இப்படி பதிய வைத்துக்கொண்டே செல்கிறார். கோரிக்கைகளை வைக்கவில்லை. அவர் பேச்சு முழுவதும் இப்படியே இருக்கிறது. நாங்களும் எதுவும் பேசாமல், இப்படியே பேச விட்டுக்கொண்டிருந்தோம். அவர் உண்மைக்கு மாறான தகவல்களை அவையில் பதிய வைக்கிறார் என்பதற்காக சில விவரங்களைச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிப் பேசினார். (குறுக்கீடு) அவர் முடித்துவிட்டார். சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில். . . (குறுக்கீடு) அவர் பேசி முடித்துவிட்டார்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் என்ன விளக்கம் சொல்கிறார் என்று கேளுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜூன் 22]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 70 லிட்டர் முதல் 90 லிட்டர் வரை. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்களுடைய கட்சி உறுப்பினரைத்தான் பேசுவதற்கு நான் அனுமதித்திருக்கிறேன். அவர் தவறான தகவல் சொன்னார் என்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிய பிறகு நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) பொறுங்கள். நான் அவரைப் பேச அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடு) உங்களுடைய கட்சிக் கொறடா திரு. அர. சக்கரபாணி அவர்கள், அவரைப் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கூறுகிறார். நீங்கள் அவரை உட்காரச் சொல்கிறீர்கள். (குறுக்கீடு) இது என்ன முறை? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு முன்பு நீங்கள் ஒரு வரியில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

**திரு. நா. கார்த்திக்:** *அந்தப் பணிகள் நடைபெற்ற இடங்களிலே உடனடியாக தார்ச் சாலைகளை அமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், உரையை முடியுங்கள், நேரமாகிவிட்டது.*

**திரு. நா. கார்த்திக்:** *திருவண்ணாமலை மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சியில் சந்தோஷ் குமார், வயது 9, தகப்பனார் பெயர் திரு. வேலு, இரண்டாவது நபர் விவேக், வயது 6, தந்தை பெயர் திரு. வேலு ஆகியோர் நேற்றைய முன்தினம் மின் கம்பியிலே சிக்கி உயிரிழந்திருக்கின்றனர். அவர்களுக்கு தமிழக அரசின் சார்பிலே நிவாரண நிதி வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

*அதைப்போலவே கடந்த 24–2–2015 முதல் 9–6–2016 வரை தமிழகத்தைச் சேர்ந்த 103 விசைப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளன. மீனவர்கள்*

[திரு. நா. கார்த்திக்] [2016 ஜுன் 22

*விடுவிக்கப்பட்டாலும், 103 விசைப் படகுகள் இலங்கையில் பிடிபட்டுள்ளன. அவற்றில் கீழ்வேளூர் தொகுதியைச் சேர்ந்த விசைப் படகுகளின் எண்ணிக்கை 22 ஆகும். அந்தப் படகுகளை மீட்பதற்கு இந்த அவையின் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 35 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உரையை முடியுங்கள்.*

**திரு. நா. கார்த்திக்:** *20 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட மாநகராட்சியாக கோவை இருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், நீங்கள் உரையை முடிக்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்தான் உங்கள் கட்சி சார்பாக இன்றைக்குக் கடைசியாகப் பேசவிருக்கிறார். நீங்கள் உரையை முடிக்கமாட்டீர்களா? (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.*

**திரு. நா. கார்த்திக்:** *பீளமேடு பகுதியில் அரசு மருத்துவமனை ஒன்றை கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த உங்கள் அனைவருக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, இந்த வாய்ப்பினை வழங்கிய அன்பிற்கினிய தளபதி அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியினைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர்ப் பிரச்சினை, பாலங்கள் பிரச்சினை உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்துச் சொன்னார்கள். குறிப்பாக, பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றி, மிகப் பெருமையாகச் சொன்னார். பாதாள சாக்கடைத் திட்டம் முதன்முதலாக* JNNURM *திட்டத்தின் மூலமாக 2001–2006 ஆண்டுக் காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோது,*

2016 ஜூன் 22] [திரு. எஸ்.பி. வேலுமணி]

அப்பொழுது மேயராக மாண்புமிகு திரு. தா. மலரவன் அவர்கள் இருந்தபோது வடிவமைக்கப்பட்டு, அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதற்குப் பின்னால், அவர்கள் ஆட்சிக்கு வந்து, அந்தத் திட்டத்தில் 9 முதல் 10 சதவிகிதப் பணிகள் மட்டும் ஆரம்பிக்கப்பட்டு, ஆரம்பத்தில் எல்லா இடங்களிலும் குழி தோண்டி, அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். 2011 ஆம் ஆண்டில், சென்ற சட்டமன்றத் தேர்தலின்போது என்னுடைய தொகுதி முதற்கொண்டு எங்கு பார்த்தாலும் பள்ளம், கிணறு என்றிருந்ததை நாங்கள் பார்த்தோம். அந்த நேரத்தில் அதிருப்தி அதிகமாக இருந்தது. அதற்குப் பின்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் 2011–லே ஆட்சிக்கு வந்தார்கள். ஒண்டிப்புதூர், நஞ்சுண்டாபுரம் ஆகிய இடங்களில் இத்திட்டத்திற்கான சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பது சம்பந்தமாக நீதிமன்றத்தில் பல வழக்குகள் இருந்தன. அவற்றையெல்லாம் விசாரிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். பாதாள சாக்கடைத் திட்டம் என்பது ஒரு பெரிய திட்டம். அதுமட்டுமல்லாமல், கோவை மாநகரம் முழுவதும் அதிகமான கிலோ மீட்டர் தூரத்திற்கு குழாய்களைப் பதிக்க வேண்டியிருந்தது. அதிலும் பார்த்தால், அதிகமான பணிகள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான் நடைபெற்றன. முந்தைய ஆட்சியில் அந்தச் சாலைகளை அமைப்பதற்கு நிதி ஒதுக்கவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தச் சாலைகளை அமைப்பதற்கு நிதி ஒதுக்கியது மட்டுமல்லாமல், சிங்காநல்லூர் தொகுதிக்கும் நிதி ஒதுக்கி, அங்கேயும் அதிகமான சாலைகள் போடப்பட்டுள்ளன. உறுப்பினர் திரு. கார்த்திக் அவர்களுக்கும் அது தெரியும்.

முற்பகல் 11–25

அதேபோல், அனைத்து வார்டுகளிலும், தொகுதிகளிலும் இன்றைக்கு முழுமையாக சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. தார்ச் சாலைகள் அமைப்பதற்கும் அதிகமான நிதியை ஒதுக்கியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2001–2006–ல் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டு, அப்போது மேயராக இருந்த திரு. மலரவன் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

*இரண்டாவது, மேற்கு புறவழிச் சாலையை பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கு இப்போது G.O. போட்டு, நில எடுப்புக்கும் நிதி ஒதுக்கியுள்ளார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கலெக்டர்கள் மாநாட்டிலே அறிவித்து, அந்தத் திட்டத்திற்கு G.O. போட்டு, நில எடுப்புக்கும் மாண்புமிகு நிதி ஒதுக்கியுள்ளார்கள்.*

*அதேபோல், பாலங்கள், குடிநீர்ப் பிரச்சினைகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் இன்றைக்குப் பேசினார்கள். கோவை மாவட்டத்தில் பாலங்கள், சாலைகள் அமைப்பது மட்டுமல்ல, இன்றைக்குக் குடிநீர்த் திட்டங்கள் உள்ளிட்ட அனைத்துத் திட்டங்களையும் முழுமையாகக் கொண்டு வந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அவை என்னென்ன திட்டங்கள் என்பதை என்னால் சொல்ல முடியும்; இப்போது சொல்கிறேன்.*

*சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 13 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வந்து கொண்டிருந்த சூழ்நிலை இருந்தது. அதை சரிசெய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூ.11.65 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5.7 கிலோ மீட்டர் நீளத்திற்கு D.N., AC குழாய்கள் பதிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்காகக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே, தேர்தலுக்கு முன்பே 13 நாட்களுக்கு ஒரு தண்ணீர் என்பது ஏழு நாட்களாகக் குறைக்கப்பட்டு, இன்றைக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.*

*அதுமட்டுமல்ல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 24x7 என்ற ஓர் அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்காக ரூ.560 கோடிக்கு டெண்டர் விடப்பட்டுள்ளது. 24 மணி நேரமும் குடிநீர் வருகின்ற ஒரு திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வடிவமைத்திருக்கிறார்கள். அதனால் சிங்காநல்லூர் தொகுதி முழுவதும் தினமும் குடிநீர் வரும். அப்படியொரு திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். 26–7–2011–ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டிருக்கிறது. 24 மணி நேரமும் சீரான குடிநீர் வரும்.*

*அதேபோல், இன்றைக்கு கோவை மாவட்டத்திலே பில்லூர்*

*1—வது கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் பில்லூர் 2—வது கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்களைக் கொண்டு வந்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். சிறுவாணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்தது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆழியாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் கவுண்டம்பாளையம் மலைவழி கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைக் கொண்டு வந்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். ஆகவே, எல்லா கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் கொண்டு வந்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால்தான் அத்தனை அடிப்படை வசதிகளும் கொண்டு வரப்பட்டன.*

*அதேபோல், அவர் குறிப்பிட்ட காந்திபுரம் மேம்பாலம் ஓர் அற்புதமான மேம்பாலம். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போதுகூடச் சொன்னார்கள். அது ஓர் அற்புதமான பாலம்; இந்தமாதிரி வேகமாக எந்தப் பாலத்தையும் கட்டியது கிடையாது. மாண்புமிகு அம்மா அவர்களின் நடவடிக்கையால் வேகமாக அந்தப் பாலம் கட்டப்பட்டு வருகிறது. அது மக்களுக்கே நன்றாகத் தெரியும். இந்தத் திட்டத்திற்காக ரூ.162 கோடி ஒதுக்கப்பட்டு, பணிகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல, மேற்கு புறவழிச் சாலைக்கும் நில எடுப்புப் பணிக்காக சுமார் ரூ.300 கோடியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.*

*அதேபோல், குளங்கள் தூர் வாரப்படுவது பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் குறிச்சிக்குளத்தில் தூர் எடுக்கப்பட்டது. எல்லா குளங்களிலும் தூர் எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, என்னென்ன நடவடிக்கைகள் கோவை மாவட்டத்திற்குத் தேவையோ அவை எடுக்கப்பட்டிருக்கின்றன. கோவை மாவட்ட மக்கள்மேல் என்றைக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அதிகமான அன்பு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) கோவை மாவட்ட மக்களுக்கும் அதிகமான அன்பு எப்போதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம்தான் உண்டு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி,*

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் வைத்த கோரிக்கைகளுக்குத்தான் நாங்கள் பதில் சொல்கிறோம். (குறுக்கீடு) அதைச் சொல்ல வேண்டியது எங்களுடைய கடமை. கோவை மேற்கு புறவழிச் சாலையைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் கோவை மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, மேற்கு வட்டச் சாலை 32.43 கிலோ மீட்டர் நீளத்தில் அமைக்கத் தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்த ரூ.320 கோடிக்கு அரசு ஒப்புதல் தந்துள்ளது. இந்த வட்டச் சாலை மதுக்கரை அருகே சூணாபுரத்தில் தொடங்கி குனியமுத்தூர், சுண்டக்காமுத்தூர், பேரூர், கீர்த்திப்பாளையம், வடவள்ளி, பன்னிமடை உள்ளிட்ட 16 வருவாய்க் கிராமங்கள் வழியாக நரசிம்மநாயக்கன்பாளையத்தில் முடிவடைகிறது. நில எடுப்பிற்கான பூர்வாங்கப் பணிகள் அங்கே தொடங்கப்பட்டுள்ளன. ஆகவே, அந்தப் பணியைத் தொடங்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–30

அதேபோல், இரயில்வே பாலத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். சிங்காநல்லூர் தொகுதியில் நீலிக்கோணம்பாளையத்தில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்தில் LC 5-ல் நில எடுப்புப் பணி தற்போது நடைபெற்று வருகிறது. அதேபோல சிங்காநல்லூர் தொகுதியிலே தண்ணீர்ப்பந்தல் இரயில்வே கடவின் குறுக்கே LC 5–ல் நேர்ப்பாடு தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்ற காரணத்தால் காலதாமதம் ஆகின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, நிலங்களைக் கையகப்படுத்துவது சம்பந்தப்பட்ட வழக்குகளெல்லாம் இன்றைக்கு நீதிமன்றத்தில் இருக்கின்ற காரணத்தால் காலதாமதம் ஏற்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை

2016 ஜூன் 22]
*அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாரம்பரியமிக்க இந்தியக் கடற்பகுதியில், பாரம்பரிய மீனவர்கள் காலங்காலமாக மீன் பிடித்துக்கொண்டு வருகின்ற நிலையில், இலங்கைக் கடற்படையினர் நம்முடைய மீனவர்களை அவ்வப்போது கைது செய்வதும், தாக்குவதும் வழக்கமாகிவிட்டது என்ற நிலையில், நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கச்சத் தீவை நிரந்தரமாக மீட்பதன் மூலம்தான் இதற்கு நிரந்தரத் தீர்வு என்கிற உறுதியான நிலையில் உள்ளார்.*

*இடைப்பட்ட சூழ்நிலையில், நம்முடைய மீனவர்கள் தாக்கப்படும்போதும், அவர்களின் வலைகள் அறுக்கப்படும்போதும், அவர்கள் கைது செய்யப்படும்போதும், அவர்களுடைய படகுகள் பறிமுதல் செய்யப்படும்போதும் உடனடியாக போர்க்குரல் எழுப்பி, நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, இலங்கையிலுள்ள மீனவர்களை விடுவிப்பது சம்பந்தமாக கிட்டத்தட்ட 87 கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். தாக்குதல் சம்பந்தமாக 10 கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். மற்ற நாடுகளில் உள்ள நம்முடைய மீனவர்களை மீட்பது தொடர்பாக 17 கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். கடிதங்களை எழுதியதோடு மட்டுமல்லாமல், நேரிலேயும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தியதன் அடிப்படையிலே, கடந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 2,404 மீனவர்கள் மீட்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*படகுகள் மட்டும், மொத்தம் 357 படகுகள் இதுநாள்வரை மாண்புமிகு அம்மா அவர்கள், அரசு செலவிலேயே, அதுவும் விசைப்படகின் உரிமையாளர்கள், தொழிலாளர்கள் செலவில் இல்லை, அரசு செலவிலேயே, மீனவர்களின் தங்கு தளங்களுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்றால், எந்த அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் மீனவர்கள்பால் அன்பு கொண்டு, இவற்றைச் செய்திருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.*

*இன்னொன்று, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் வெகுவாகக் குறைந்துள்ளன. ஆனால், தி.மு.க. ஆட்சியிலே 32 சம்பவங்கள் நடந்திருக்கின்றன. (குறுக்கீடுகள்)*

[திரு. டி. ஜெயகுமார்] [2016 ஜூன் 22

*உங்களுடைய ஆட்சியில் சேதமடைந்த படகுகளின் எண்ணிக்கை 31; (குறுக்கீடுகள்) மூழ்கிய படகு ஒன்று. உங்கள் ஆட்சியில் 10 மீனவர்கள் இறந்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் உறுதியான தலைமையின் காரணமாக ஒரு மீனவர்கூட இறக்காத நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் ஆட்சியிலே காயம் அடைந்த மீனவர்கள் 27 பேர். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் ஒரு மீனவர்கூட காயம் அடையவில்லை. அதையும் யோசனை செய்யுங்கள். நம்முடைய மீனவர்கள், கிட்டத்தட்ட 24 பேர் இலங்கையிலே உள்ளார்கள். அவர்களை மீட்டுக் கொண்டு வருவதற்கு விரைவான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்து வருகிறார்கள். மேலும், 93 படகுகளையும் விடுவித்து உடனடியாக தமிழகம் கொண்டு வருவதற்கு விரைந்து நடவடிக்கைகளை எடுக்க அனைத்து ஏற்பாடுகளையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் செய்து வருகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள். (குறுக்கீடுகள்)*

**திருமதி மு. பரமேஸ்வரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. கே.பி.பி. சாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கோவை மாநகரத்திலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது, பொதுமக்கள் சாலையைக் கடப்பதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள், அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) கோவை மருத்துவமனை அருகிலே, தானியங்கி நடை மேம்பாலம்* (Escalator) *அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேபோல, திருச்சி ரோடு, இராமநாதபுரம் சிக்னல் அருகில் தானியங்கி நடை மேம்பாலம் அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்*

*என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.பி.பி. சாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒன்றுமில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சித் துணைத் தலைவர் உங்களை உட்காரச் சொல்கிறார், அதற்குக் கட்டுப்பட்டு நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.பி.பி. சாமி, உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அமைச்சராக இருந்தவர். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஆவேசப்படாதீர்கள், உட்காருங்கள்.*

*முற்பகல் 11–35*

***திருமதி மு. பரமேஸ்வரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். அம்மா! அம்மா! இது ஒரு சொல் அல்ல. இது எங்கள் வாழ்வின் வேதமந்திரம். கலைமகளும், அலைமகளும், மலைமகளும் கலந்துவிட்ட ஈகைத் திருமகளே! முப்பெரும் தேவியரும் ஓர் உருவில் உதித்திட்ட ஒப்பில்லா முதல்வரே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மூலவரே! தவ வாழ்க்கை வாழும் தமிழகத்தின் தங்கத் தாரகையே! போதும், போதும் என்று சொல்லும் அளவிற்கு ஈடில்லா திட்டங்களை அள்ளித் தந்து இணையற்ற ஆட்சி புரியும் எங்கள் அம்மாவே! தாயுள்ளம் கொண்டு, பெண்களின் மகத்துவத்தை நாடறியும்பொருட்டு வாழ்ந்து காட்டும் பெண்ணின் இலக்கணமே! திராணியற்ற ஒரு கூட்டம் ஐவர் கூட்டணியாய்த் திரிந்தபோதும், முதுகெலும்பற்ற ஒரு கூட்டம் விளம்பரம் தேடி அலைந்தபோதும், தனி ஒரு மனிதராய், சாதனைகள், திட்டங்கள் நிறைந்த கழக ஆட்சியின் காவலராய் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் மனதில் தாங்கள் இடம்பெற்று, 32 ஆண்டுக்கால வரலாற்றை மாற்றியமைத்து, 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று, இந்திய வரலாற்றில் இணையில்லா மக்கள் தலைவராக ஆறாவது முறையாக தமிழக முதல்வராகத் தொடர்ந்து அரியாசனத்தினை அலங்கரித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி பணிந்து வணங்குகின்றேன் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

[திருமதி மு. பரமேஸ்வரி] [2016 ஜூன் 22

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் தத்தமங்கலம் என்னும் சிறிய கிராமத்தின் ஒன்றியக் குழு உறுப்பினரான எனக்கு மணச்சநல்லூர் ஒன்றியப் பெருந்தலைவராக 2001 ஆம் ஆண்டும், 2011 ஆம் ஆண்டும் என இரண்டு முறை வாய்ப்புகளை வழங்கியும், 2016 ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் செய்த சாதனையால் வெற்றி பெற்ற நானும், எனது குடும்பமும் எங்களின் உயிர் உள்ளவரை தங்களுக்கு நன்றியுடன் இருப்போம் அம்மா! எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த மணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு இந்த சட்டமன்றப் பேரவையின் வாயிலாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க 15–வது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைமீதான விவாதத்தில் பேச வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களின் தலைவராம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே கோப்புகளில் கையெழுத்திட்டு அரசாணைகளை வெளியிட்டார்கள். சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட்டுகள் வரை இலவச மின்சாரம் தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

*திருமண உதவித் திட்டத்தின்கீழ் திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்டு வந்த நான்கு கிராம் தங்கத்தினை எட்டு கிராமாக உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தை 200 யூனிட்டுகளாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தை 750 யூனிட்டுகளாகவும் உயர்த்தித் தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*டாஸ்மாக்மூலம் நடத்தப்படும் மதுபானக் கடைகள் திறந்திருக்கும் நேரத்தைக் குறைத்ததுடன், 500 கடைகளை மூடி, ஏழைகளின் நலனையும், அனைத்து சமூகக் குடும்பங்களின் நலனையும் காத்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் அறிவிக்கப்பட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் மக்கள் நலத் திட்டங்களில் மகளிர், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், முதியோர், ஆதரவற்றோர் போன்ற சமூகத்தில் எளிதில் பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்களுக்கு சமூகப் பாதுகாப்பினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் உறுதி செய்துள்ளார்கள்.*

*பெண்களுக்கு உரிய அதிகாரம் அளிப்பதற்கான ஒரு முன்னோடி முயற்சியாக உள்ளாட்சி அமைப்புகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளில் போட்டியிட பெண்களுக்கான ஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்திய, பெண்ணினத்தின் ஒரே தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பண்ணைப் பசுமை காய்கறிக் கடைகள், அம்மா மருந்தகங்கள், அம்மா உணவகங்கள், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமென்ட் போன்ற ஏழை எளியோருக்கு வரப்பிரசாதமாக அமைந்த அருமையான திட்டங்களெல்லாம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் சிந்தனையில் சிறகடித்த திட்டங்கள்தான். அதுதான் உண்மை; அதுதான் நிதர்சனம்.*

*முற்பகல் 11–40*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் அறிவிக்கப்பட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அனைத்துத் திட்டங்களையும் உலகத் தமிழர்கள் மட்டுமல்லாமல், அகில உலக மக்களும் வியந்து பார்க்கிறார்கள், பாராட்டுகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இதேநேரத்தில், மணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக சில முக்கிய கோரிக்கைகளை முன்வைக்கிறேன். சைவத் திருத்தலங்களில் மிகவும் பிரச்சித்திபெற்ற அருள்மிகு விசாலாட்சி உடனுறை நீலிவனேஸ்வரர் திருக்கோயிலில் இராஜகோபுரப் பணியை மேற்கொண்டு, உள்பிரகாரம், தேரோடும் வீதிகளில் சிமென்ட் சாலை அமைத்து, விரைவில் குடமுழுக்கு செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எனது தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

புதிய அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தருமாறும், பயணியர் விடுதி அமைத்துத் தருமாறும், சிறுப்பத்தூர், திருத்தலையூர் மற்றும் சன்னமங்கலம் ஊராட்சிகளிலுள்ள ஏரிகளைப் புனரமைத்து, தடுப்பணைகள் கட்டி, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தித் தருமாறும், பிச்சாண்டார்கோவில் ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்தித் தருமாறும், மணச்சநல்லூரில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தருமாறும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய பொற்காலம் என்பது சங்க காலத்திற்குப் பிறகு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில், மேதகு ஆளுநர் அவர்களின் உரைமீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது நெஞ்சார்ந்த நன்றியை பணிவுடன் தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு அனுமதியளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏழு முறை சட்டமன்ற உறுப்பினராகப்

2016 ஜூன் 22] [திரு. கரி. இராமசாமி]

போட்டியிடுவதற்கு வாய்ப்பு கொடுத்த எங்களது அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு வாக்களித்து, என்னை வெற்றி பெறச் செய்த காரைக்குடி தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும், எங்களது கூட்டணிக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், அங்கே ஒரு பிரச்சினை இருக்கிறது; அதை முதலிலே சொல்லி விடுகிறேன். காரைக்குடிக்கு அருகில் தனியாருக்குச் சொந்தமான Tamil Nadu Chemical Factory என்ற நிறுவனம் இயங்கி வருகிறது. அத்தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுகள் அப்பகுதியில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக, நல்ல குடிதண்ணீர் கிடைக்கும் இடங்களிலெல்லாம் அந்தக் கழிவுகள் கலப்பதால் குடிதண்ணீர் நச்சுத்தன்மை வாய்ந்ததாக மாறக்கூடிய நிலை இன்றைக்கு அங்கே ஏற்பட்டிருக்கிறது. காரைக்குடி போன்ற ஒரு பெரிய நகரத்தின் மக்களுக்கு, அத்தியாவசியத் தேவையான குடிதண்ணீர் கெடுவதற்குக் காரணமாக இருக்கக்கூடிய அந்த Chemical Factory அங்கு தேவைதானா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்காக அந்தப் பகுதி மக்கள் பல முறை போராடியிருக்கிறார்கள்; காவல் துறையைச் சார்ந்தவர்கள் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்; அவர்கள் அனைவரையும் கைது செய்து, அவர்கள்மீது வழக்கும் தொடர்ந்திருக்கிறார்கள். ஒரு தனியார் நிறுவனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, குடிதண்ணீர் கெடுவதை இந்த அரசு எவ்வாறு ஏற்றுக்கொள்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. அரசு, இதில் உடனடியாகத் தலையிட்டு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காரைக்குடி அருகில் இருக்கின்ற இரசாயனத் தொழிற்சாலையினுடைய கழிவுகள் அந்தப் பகுதி

[திரு. எம்.சி. சம்பத்] [2016 ஜூன் 22

*மக்களுடைய குடிநீராதாரத்தைப் பாதிப்பதாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.* Pollution Control Board *மூலமாக அனைத்து அலுவலர்களையும் அங்கே அனுப்பி, அத்தொழிற்சாலையிலிருந்து வெளியேறுகின்ற கழிவுகளை சோதனை செய்து, அந்தக் கழிவுநீரின் அளவுகோல்களை, அதாவது,* TDS content*–ஐயும், மாசின் அளவையும் ஆய்வு செய்து நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முழு விவரத்தையும் சொல்வது எனது கடமையென்று நான் கருதுகிறேன். அந்த கெமிக்கல் தொழிற்சாலையின் முன்புறம் விவசாயம் சம்பந்தப்பட்ட அலுவலகம் திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட மூன்று நாட்களிலேயே அந்த அலுவலகம் மூடப்பட்டது. அதற்கு என்ன காரணம் என்று கேட்டபொழுது, அந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுகளினால் அங்கே வேலை செய்தவர்கள் மயக்கமுற்று மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். பின்னர், அந்த விவசாய அலுவலகத்தை காரைக்குடியிலிருந்து கறம்பக்குடிக்கு மாற்றியிருக்கிறார்கள். இப்பொழுது அந்தக் கட்டடத்தைக் கட்டியதற்கான பணத்திற்கு* A.G. Audit*–ல்* objection *தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*அடுத்தபடியாக, காரைக்குடி விரிவடைந்து கொண்டிருக்கக்கூடிய நகரம். வள்ளல் அழகப்பச் செட்டியார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் இன்றைக்கு பல்கலைக்கழகமாக மாறியிருக்கின்றது. எல்லாவிதமான கல்லூரிகளும் அங்கே இருக்கின்றன. ஆனால், அங்கே சட்டக் கல்லூரி இல்லை. நீண்ட நாட்களாக இந்தக் கோரிக்கையை தொடர்ந்து நாங்கள் வைத்து வருகிறோம். இந்த அரசு தயவுசெய்து அங்கே அரசு சட்டக் கல்லூரியை நிறுவ வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்; அந்தப் பகுதி மக்களும் விரும்புகிறார்கள். அதற்குரிய நடவடிக்கையை தாங்கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

2016 ஜூன் 22] [திரு. கரி. இராமசாமி]

*அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களை அதிகமான எண்ணிக்கையிலே நீங்கள் பெற்றிருப்பதால் இன்றைக்கு ஆட்சி அமைத்திருக்கிறீர்கள். இந்த அரசுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், சில புள்ளிவிவரங்களையும் நான் சொல்ல விரும்புகிறேன். அ.தி.மு.க., கூட்டணிக் கட்சிகள் பெற்ற வாக்குகள் 1,76,00,000. (குறுக்கீடுகள்) ஏற்றுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுக்கும் கூட்டணி இருக்கிறது. (குறுக்கீடுகள்) உங்கள் பக்கத்தில் இருப்பவர் உங்கள் கூட்டணியைச் சேர்ந்தவர். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *நான் அந்த சப்ஜெக்ட்டுக்குள் வரவில்லை, அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போகிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் அமர்ந்து கொண்டு பேச வேண்டாம். (குறுக்கீடு) அமர்ந்து கொண்டு பேசாதீர்கள்.*

*முற்பகல் 11–50*

**திரு. கரி. இராமசாமி:** *நாங்களும், தி.மு.க.–வும் சேர்ந்த கூட்டணி பெற்ற வாக்குகள் ஒரு கோடியே எழுபத்தைந்து இலட்சம். சதவீதப்படி 40.8 சதவிகிதம், நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். தி.மு.க. கூட்டணி, காங்கிரஸ் உட்பட 39.7 சதவிகிதம் பெற்றிருக்கிறது. வித்தியாசம் 1.1 சதவிகிதம். (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் பேசுகிறார். உட்காருங்கள், மாண்புமிகு அவை முன்னவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர், பேசுங்கள் (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், மாண்புமிகு அவை முன்னவர் பேசுகிறார்.*

[2016 ஜூன் 22

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூத்த உறுப்பினர் திரு. இராமசாமி அண்ணன் அவர்கள் எப்பொழுதும் நன்றாகத்தான் பேசுவார். இன்றைக்கு ஏதோ ஒரு சில பிரச்சினைகளை முன்வைத்து இங்கே விவாதத்தை ஆரம்பித்திருக்கிறார். இராமசாமி அண்ணன் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் அதிகமான சதவிகிதம் எடுத்து, நாங்கள்* pass, *நீங்கள்* fail. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, பேசுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதிலே எனக்கு உடன்பாடுண்டு, நான் இல்லையென்று சொல்லவில்லை. நாங்கள்* fail–*தான், நீங்கள்* pass–*தான். அதனால்தான் நாங்கள் இங்கே இருக்கிறோம், நீங்கள் அங்கே இருக்கிறீர்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *சரி, உறுப்பினர் அடுத்த* subject–*க்குச் செல்லுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக தமிழகத்தைச் சொல்கிறீர்கள். ஆனால், சில விவரங்களை நான் சொல்ல விரும்புகிறேன். வேலையில்லாமல் தமிழகத்திலே வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிந்திருக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை 92 இலட்சம் பேர். இதிலே பெண்கள் 44 இலட்சம், பொறியியல் பட்டதாரிகள் 2 இலட்சம், ஆசிரியர்கள் 3 இலட்சம். இவ்வளவு பேருக்கு வேலை கொடுக்க முடியவில்லை. இவர்களை என்ன செய்யப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. நாட்டிலேயே முதன்மையான மாநிலம் என்று எவ்வாறு சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *தயவுசெய்து என்னைக் கொஞ்சம்* free *ஆகப் பேச விடுங்கள். நீங்கள் கேட்பதற்கெல்லாம் என்னால் பதில் சொல்ல முடியும்; பதில் சொல்கிறேன்.*

*அடுத்தபடியாக, வேளாண் துறை. நம் நாட்டிலே விவசாயிகள் 56 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் முழுமையாக விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். உற்பத்தித் திறன் அதாவது*

2016 ஜூன் 22] [திரு. கரி. இராமசாமி]

(GDP) 10 முதல் 13 சதவிகிதம்தான் வருகிறது. இது இவ்வளவு குறைவாக ஏன் இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. விவசாயிகளை நீங்கள் அதிகமாக உற்சாகப்படுத்த வேண்டும். அவர்கள் விவசாயம் செய்வதற்கு இன்னும் பல வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்தைப் பொறுத்தமட்டில் முன்பிருந்த மத்திய அரசு ஏறத்தாழ 68 ஆயிரம் கோடி ரூபாய் கடன்களை இரத்து செய்தது. கலைஞர் அவர்களுடைய தலைமையின்கீழ் இருந்த அரசு ரூபாய் 7,000 கோடி (குறுக்கீடு) தப்பாக இருக்கலாம்.

முற்பகல் 11–55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விவசாயிகளை இந்த அரசு ஊக்கப்படுத்த வேண்டும், உற்சாகப்படுத்த வேண்டும், விவசாயத் துறையில் ஈடுபட வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடந்த ஐந்தாண்டுகளாக தமிழகத்திலே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, 50 இலட்சம் சிறு, குறு விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடனாக 23,214 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள் திருந்திய சாகுபடி முறையில் விவசாயம் செய்வதன் காரணமாக அதிக மகசூல் கிடைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வழிவகை செய்து, இன்றைக்கு இந்தியாவிலேயே நெல் மகசூலில் தமிழகம் முதல் மாநிலமாகத் திகழ்கின்றது. ஒரு இலட்சம் டன் அளவிற்கு நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கான பரிசுகளையும் பெற்றிருக்கிறோம். தொடர்ந்து இரண்டாண்டுகளாக நாங்கள் பரிசு பெற்றிருக்கிறோம்.

இரண்டாவதாக, கூட்டுறவு வங்கிகள் மூலமாக இன்றைக்கு உரங்கள் தட்டுப்பாடு இல்லாமல் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. வேளாண் துறை சார்பாக இன்றைக்கு 100 சதவிகிதம் மானியம் சொட்டு நீர்ப் பாசனத்திற்கு கொடுக்கப்படுகிறது. எனவே, இதுபோன்ற மாண்புமிகு அம்மாவினுடைய துரித

[திரு. செல்லூர் கா. ராஜு] [2016 ஜூன் 22

நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இன்றைக்கு விவசாயிகள் சிறப்பாக இருக்கின்றார்கள்.

வறட்சிக் காலங்களில் நிவாரண நிதி, வேறு எந்த மாநிலத்திலும் நிவாரணநிதி கொடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் வறட்சி கொடுத்தார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற மாநிலங்களில் நிவாரண நிதி கொடுக்கவில்லை. இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். தமிழகத்தில் இது வரை ஆண்ட எந்த அரசும் இதைச் செய்யவில்லை. மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கடந்த ஆண்ட எந்த வறட்சி ஏற்பட்ட காலங்களில், எந்தெந்த மாவட்டங்களில் வறட்சி ஏற்பட்டதோ, அங்குள்ள விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக உயர் அதிகாரிகளையும், அமைச்சர்களையும் அனுப்பி வைத்தார்கள். எந்த அளவு பாதிப்பு இருந்ததோ, அதற்கேற்றவாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிதி வழங்கப்பட்டது. ஆகவே, இதுபோன்ற காரணங்களினால் விவசாயிகள் யாரும் தமிழகத்தில் தற்கொலை செய்து கொள்ளவில்லை. அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மத்திய அரசு விவசாயிகளுக்கு 68 ஆயிரம் கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்ததாகச் சொன்னார்கள். (குறுக்கீடு) என்னைப் பேச விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் காலத்தில்தான், விவசாயிகளுக்கான உர மானியத்தில் கட்டுப்பாடு செய்து, உர மானியத்தை இரத்து செய்து கையெழுத்து போட்டது, அன்றைக்கிருந்த தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகள்தான். அன்றைக்கு மத்திய அரசில் இருந்த தி.மு.க. வசம் இரசாயனத் துறை அமைச்சகம் இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு அவர்கள் கையெழுத்து போட்டதனால்தான் DAP complex போன்ற உரங்களின் விலை பல மடங்காகக் கூடின. 20 மடங்கிற்கு மேல் கூடிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இது தெரியுமா எனத் தெரியவில்லை. இன்றைக்கு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்றால் அதற்கு காங்கிரஸ், தி.மு.க. கூட்டணி அரசுதான் முழுக்க, முழுக்க காரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி செய்தபோதுதான் ரூபாய் 68 இலட்சம் கோடி தள்ளுபடி செய்யப்பட்டது. (குறுக்கீடு) ரூபாய் 28 இலட்சம் கோடி. . . .

2016 ஜூன் 22]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் சரியான தகவலைச் சொல்லுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரியான பதில்தான், தவறு இல்லை. கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார். இந்தியாவிலேயே தமிழகம்தான் வேளாண்மைத் துறையில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்பதையும், மத்திய அரசினுடைய கிரிஷி கர்மான் விருதினைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாகப் பெற்றது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அதேபோன்று, காங்கிரஸ் அரசின் சாதனையாக சிலவற்றை அவர் குறிப்பிட்டிருக்கிறார். மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோதுதான் அரிசிக்கு சேவை வரி விதித்தார்கள் என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்குப் பதில் சொல்லி விடுகிறேன். (குறுக்கீடு) இடையூறு செய்ய விரும்பவில்லை.*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

*தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கின்றது என்றால் எந்த*

வகையில் முதன்மையாக இருக்கின்றது என்று கேட்டார்கள். சில விளக்கங்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகம், இந்தியாவில் முதன்மை மாநிலமாக இருப்பதற்கு சில உதாரணங்களைச் சொல்கிறேன். Automobile, கார் தயாரிப்பில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், ஜவுளி–Spinning Mill என்று சொல்லக்கூடிய. . . (குறுக்கீடு)

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்குட்டுவன், என்ன இது? மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன், என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? நாங்கள் சொல்வதை இல்லை என்று மறுக்கிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழகம் எந்தவிதத்தில் முதன்மை மாநிலம் என்ற ஒரு கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். அந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். அதில் என்ன பிரச்சினை இருக்கின்றது உங்களுக்கு? ஜவுளி–Spinning Mill–ஐ எடுத்துக்கொண்டால், 46% தமிழகத்தில்தான், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தோல் உற்பத்தியை எடுத்துக்கொண்டால், ஏற்றுமதியில் 37%, தமிழகம்தான் முதன்மை மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுலாவை எடுத்துக்கொண்டால், 46 இலட்சம் மக்கள் வருகின்ற மாநிலம் மாண்புமிகு அம்மாவினுடைய மாநிலம்; தமிழகம்தான் முதன்மை மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவச் சுற்றுலாவை எடுத்துக்கொண்டாலும் தமிழகம்தான் முதன்மை மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) காற்றாலை உற்பத்தியை எடுத்துக்கொண்டாலும் தமிழகம்தான் முதன்மை மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) சிறு, குறு தொழில்களை எடுத்துக் கொண்டாலும் 32% தமிழகம்தான் முதன்மை மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) Skill Development என்று சொல்லக்கூடிய திறன் மேம்பாட்டினை எடுத்துக் கொண்டாலும் தமிழகம்தான் முதன்மை மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு Metropolitan City–ல் மூன்று துறைமுகங்கள் இருப்பது இந்தியாவிலேயே சென்னையில் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) என்னைப் பேச விடுங்கள். நான் சொல்வது தப்பா? நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கு என்ன? அவர் கேட்டதற்குத்தான்

2016 ஜூன் 22] [திரு. பி. தங்கமணி]

*பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதில் உங்களுக்கு என்ன இடைஞ்சல் இருக்கிறது? (குறுக்கீடு) நான் சொல்வதில் தவறு இருந்தால் சொல்லுங்கள், பதில் சொல்கிறேன். சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் 46—ல், 36 தமிழகத்திலேதான் இருக்கின்றன.* International Airport *என்று சொல்லக்கூடிய சர்வதேச விமான நிலையம், தமிழகத்தில் நான்கு விமான நிலையங்கள் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி), ஜப்பான் கம்பெனிகள் இந்தியாவிலேயே அதிக அளவில் இருப்பது தமிழகத்தில் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்து, தொழிற்சாலைகள் மற்றும் வேலைவாய்ப்பைப் பற்றிப் பேசினார்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. தங்கம் தென்னரசு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். நீங்கள் எதற்காக எழுந்து நின்று பேசுகிறீர்கள்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். நீங்கள் என்னிடம்தான் வாய்ப்புக் கேட்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது குறுக்கிடக் கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பேசுவதில் ஏதாவது விளக்கம் கேட்க வேண்டுமென்றால் நீங்கள் என்னிடம்தான் வாய்ப்புக் கேட்க வேண்டும். நான் அனுமதி கொடுத்தால் மட்டுமே நீங்கள் பேச வேண்டும். அதைவிட்டுவிட்டு நீங்கள் எழுந்து நின்று இவ்வாறெல்லாம் பேசக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் பேசுகின்றபோது சில கோரிக்கைகளை, சில கேள்விகளை விடுத்தார். அந்தக் கேள்விகளுக்கு உரிய பதிலை விளக்கமாக நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அளித்துக் கொண்டிருக்கிறார். இதில் அவர்களுக்கு ஏதாவது குற்றச்சாட்டோ, ஆட்சேபனைக்குரிய வரிகளோ இருந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் அனுமதி பெற்றுத்தான் பேச வேண்டும். அதைவிடுத்து எல்லோரும் எழுந்து நின்று பேசுவது நல்ல நடைமுறையே கிடையாது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேட்ட கேள்விக்குப்பதில் சொல்கின்றேன். அடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் பேசவிருக்கின்றார். நான் சொல்வதிலே ஏதாவது குறையிருந்தால் அவர்கள் கேட்கட்டும், நான் பதில் சொல்லத் தயாராக இருக்கின்றேன். வேலைவாய்ப்பைப் பற்றிச் சொன்னார்கள். தமிழகம்தான் தொழிற்சாலையிலே முதன்மை மாநிலம்; 36,869 தொழிற்சாலைகள் இருக்கின்றன. தொழிலாளர்கள் 16,02,447 பேர் பணிபுரிந்து வருகின்றார்கள். மற்ற வேலைவாய்ப்பைப் பெற்றவர்களைச் சேர்த்து மொத்தமாக 19,65,000 பேர் இருக்கின்றார்கள். இதற்கான ஒப்புதலாகத்தான்* ASSOCHAM *என்று சொல்லக்கூடிய இந்தியாவைச் சேர்ந்த அமைப்பு 9* awards *கொடுத்திருக்கின்றது. தமிழகத்திற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்கு அங்கீகாரம் வழங்குகின்ற வகையில் 8* awards–*ஐ தமிழகம் பெற்றிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல* India Today *பத்திரிகை, எல்லோருக்கும் பொதுவான பத்திரிகை. 24 பரிசுகளைக் கொடுப்பதற்காக இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலிருந்தும் பரிசுகளுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். அதில் மூன்றில் ஒரு பங்கான 8 பரிசுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் மாநிலமான தமிழகம் பெற்றிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–05*

*திருப்பூரை எடுத்துக்கொண்டால், மாண்புமிகு உறுப்பினர்கள் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. நான் வாதத்திற்காகச் சொல்கின்றேன். ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முதன்மை மாவட்டமாக இருந்தது திருப்பூர் மாவட்டம். 2010–2011 ஆம் ஆண்டு அங்கே சாயப்பட்டறை பிரச்சினையின் காரணமாக, கடந்த காலத்தில் சரியான கொள்கை இல்லாததன் காரணமாக அங்கே சாயப்பட்டறை தொழில் பாதிக்கப்பட்ட காரணத்தால், ஏற்றுமதியின் அளவு 10,000 கோடியாகக் குறைந்துவிட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் 200 கோடி ரூபாய். . . (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், கேளுங்கள். சொல்லி முடித்ததற்குப் பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசுகின்றார் அல்லவா? மாண்புமிகு அம்மா அவர்கள் வந்ததற்குப் பின்னால் 200 கோடி ரூபாய் வட்டியில்லா கடன் கொடுத்ததற்குப் பின்னால், சாயப்பட்டறை தொழில் சீரமைக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் 21,000 கோடி ரூபாய் அளவிற்கு திருப்பூர் மாவட்டத்தில் மட்டும் ஏற்றுமதி*

2016 ஜுன் 22] [திரு. கரி. இராமசாமி]

*செய்திருக்கிறார்கள் என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கும், எப்படி நீங்கள் வேலைவாய்ப்பு இல்லை என்று சொல்கின்றீர்கள். அதற்காகத்தான் நான் இந்தக் கருத்தைச் சொல்ல வந்தேன்.*

*அதேபோல, சரக்கு வாகனம். லாரி போன்ற சரக்கு வாகனங்களில் தமிழகம் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. மோட்டார் சைக்கிள், தமிழகம் இரண்டாவது இடத்திலே இருக்கிறது. எல்லாவிதத்திலும் தமிழகம் முதன்மை மாநிலம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அதேபோல தொழிலாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்பைக் கொடுத்த மாநிலம் தமிழ்நாடு. மாண்புமிகு அம்மா அவர்களுடைய முயற்சியினால் இத்தனை தொழில்கள் வந்திருக்கின்றன, (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி. (குறுக்கீடுகள்) இருங்கள். சொல்வதைக் கேளுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். காங்கிரஸ் சட்டமன்ற கட்சியினுடைய தலைவர் திரு. இராமசாமி அவர்கள் பேசினார். அவர் கேட்ட கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார். மாண்புமிகு அமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட உறுப்பினர்தான் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) அவர் கேள்வி கேட்கவில்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு அவர் பேசி, அதற்குப் பிறகு ஆளும் கட்சியில் இன்னோர் உறுப்பினர் பேசி, எதிர்க்கட்சித் தலைவர் பேச இருக்கிறார். ஆகவே, ஏதாவது பேச வேண்டுமென்றால், எதிர்க்கட்சித் தலைவரிடம் சொன்னால், அவர் கேட்பார். (குறுக்கீடுகள்) நான் எல்லோருக்கும் வாய்ப்புத் தருவது என்றால் முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த தமிழகத்தின் தாரக மந்திரமே! பொங்கு தமிழ் பூக்கும் பொன் மனமே! பொற்கால ஆட்சி தரும் புகழ் மனமே! கார் முகிலாய்ப் பொழிகின்ற கருணையே! கண் துஞ்சாத உழைப்பால் தமிழினம் காக்கும் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாண்டு பொற்கால ஆட்சி தந்து, அதன் விளைவாய், 32 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வரலாற்றுச் சாதனை நிகழ்த்தியுள்ள சாதனைத் தாயே! எளிய தொண்டனாகிய என்னை மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, (குறுக்கீடுகள்) வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் செயல்படும் (குறுக்கீடுகள்) தமிழக அரசின் வேளாண்மைத் துறை அமைச்சராகப் பொறுப்பு வழங்கி, என்னை அழகுபார்த்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதம் தொட்டு கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். (குறுக்கீடுகள்) ஏழை விவசாயி ஆகிய என்னை இந்த மாமன்றத்தில் அமர்த்திய எங்களுடைய இதய தெய்வம், எங்களுடைய குல தெய்வம், தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த கண்கண்ட தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.*

*இங்கே பேசிய மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், வேளாண்மைத் துறையில் எந்த அளவிற்கு முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்கிக் கொண்டிருக்கிறது என்று கேட்டதற்காக சில விவரங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*

*2011–2012 ஆம் ஆண்டில் 101.52 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியில் உயர்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) 2013–2014 ஆம் ஆண்டில் 110.35 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியில் உயர்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) 2014–2015 ஆம் ஆண்டில் 127.95 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியில் உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு இன்னும் முடிவுறவில்லை. இருந்தாலும், மார்ச் மாதம் வரை இருக்கின்ற கணக்குப்படி பார்த்தால், 123.47 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே 3 முறை 'கிரிஷி கர்மான்' விருதினைப் பெற்றது*

2016 ஜூன் 22] [திரு. இரா. துரைக்கண்ணு]
*புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான இந்த அரசாங்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 12–10*

*மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்த அளவிற்கு வேளாண்மைத் துறையை உயர்த்தியுள்ளார்கள் என்பதை* 'Agriculture Today', 'India Today' *என்ற இரண்டு பத்திரிகைகளும் விவரித்துக் காட்டி, பாராட்டி உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதோடுமட்டுமல்ல, எந்த நேரத்திலும் விவசாயப் பெருமக்கள் கஷ்டப்படக் கூடாது, வேதனைப்படக் கூடாது என்பதை மனதில் உணர்ந்து, இன்றைக்குக்கூட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.54 கோடியே 65 இலட்சத்தை டெல்டா மாவட்டத்திற்கு நிதியுதவியாக வழங்கி, விவசாயத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதுமட்டுமல்ல, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தந்த வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக ஏழை விவசாயிகளுக்காக சிறு, குறு கடன்களை, ஐந்தாயிரத்து எழுநூற்று எண்பது கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சம் ரூபாயை தள்ளுபடி செய்திருக்கிறார் என்பதை உங்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் துறையைப் பொறுத்தமட்டில், நீங்கள் சிறு, குறு விவசாயிகளுக்கு கடனைத் தள்ளுபடி செய்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், எல்லா விவசாயிகளுக்கும் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*நவீன உலகத்திலே, விவசாயத்தை இயந்திரமயமாக்க வேண்டுமென்பது நம்முடைய கொள்கை. அதற்குரிய ஆரம்ப கட்ட வேலைகளை நம்முடைய அரசு உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். நவீன இயந்திரங்களை விவசாயிகள் பயன்படுத்துவதற்கு, வாடகைக்காகவாவது அதனைக் கொடுப்பதற்கு எல்லா வகையான*

[திரு. கரி. இராமசாமி] [2016 ஜூன் 22

இயந்திரங்களையும் அரசு வாங்கி, விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய வேளாண்துறை அமைச்சர் அவர்கள். . . (குறுக்கீடு) இப்படி எழுந்தால், நான் என்ன செய்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்கெனவே, 2012–2013 ஆம் ஆண்டிலேயே ஏறத்தாழ ரூ.84 கோடி மானியத்தில் இரண்டாயிரத்து நூற்று நான்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு டிராக்டர், கதிர் அறுக்கும் இயந்திரங்கள் உள்ளிட்டவற்றை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, 50 சதவீத மானியத்தில் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு வாங்கிக் கொடுத்து, இன்றைக்கு அது செயல்பாட்டில் இருக்கிறது. இது ஒரு பக்கம் இருக்கிறது. வேளாண்மைத் துறையின் மூலமாகவும் பல்வேறு பகுதிகளிலே இன்றைக்கு கருவிகள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய நோக்கமும் அதுதான், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நோக்கமும் அதேதான். விவசாயிகளுக்கு பயிரிடும் காலங்களில் இன்றைக்கு விவசாயக் கூலி கிடைப்பதே அரிதாக இருக்கிறது. அறுவடை காலங்களும் அரிதாக இருக்கின்றன. இதுபோன்ற காலங்களில் சிறு, குறு விவசாயிகள்கூட பயனடைய வேண்டும் என்பதற்காக இன்றைக்கு களங்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். பொது இடங்களில் ½ ஏக்கர், ஒரு ஏக்கர் உள்ளவர்களிடம் களம் இருக்காது. ஆனால், மிகப் பெரிய பண்ணையார்கள் 100 ஏக்கர், 50 ஏக்கர் வைத்திருப்பவர்களிடம் இருக்கும். இதுமாதிரி சிறு விவசாயிகளுக்குக்கூட அவர்கள் விளைவித்த பொருட்களுக்கு சரியான பாதுகாப்பு, விலை வேண்டும் என்பதற்காக 5 ஆண்டுகளில் 3,879 கிடங்குகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஏறத்தாழ ஐந்து இலட்சத்து பத்தாயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளைக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுமட்டுமின்றி, இந்தக் கிடங்குகள் மூலமாக விளைவித்த பொருட்களை சேமித்து வைத்து 30 சதவீதம், 40 சதவீதம் என விலை கூடுகின்ற போது அவற்றை விற்றுக் கொள்ளலாம் என்பதற்காக தானிய ஈட்டுக் கடன் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா

2016 ஜூன் 22] [திரு. செல்லூர் கா. ராஜு]

*அவர்களுடைய அரசு ஏற்கெனவே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இயந்திரங்களுடைய எண்ணிக்கை போதாது. அதைக் குறைந்த வாடகைக்குக் கொடுக்கும் வகையில் அதனை அதிகப்படுத்த வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், இன்றைக்குத் தேவையான தானியங்களினுடைய அளவு 125 இலட்சம் டன் என்று சொன்னார்கள். ஆனால், நாம் உற்பத்தி செய்வது ** அதை உற்பத்தி செய்வதற்கு. . .*

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள் இங்கே தவறான கருத்தை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியில்தான் தமிழ் நாட்டினுடைய ஒட்டுமொத்த நெல் உற்பத்தி 70 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் 2011–ல் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னர், அதை படிப்படியாக 101, 115, 118 இலட்சம் மெட்ரிக் டன், 127.95 இலட்சம் மெட்ரிக் டன் ஆக உயர்த்திக் காட்டிய பெருமை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். தவறான புள்ளிவிவரங்களைப் பதிவு செய்ய வேண்டாம். ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அந்தக் குற்றச்சாட்டு, ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

**திரு. கரி. இராமசாமி:** *குற்றச்சாட்டு இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தவறான புள்ளிவிவரம்.*

**திரு. கரி. இராமசாமி:** *கூட்டுறவுக் கடனைப் பொறுத்தமட்டில், விவசாயிகளிடம் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே கூட்டுறவுக் கடன்களை திருப்பிச் செலுத்தாததனால் ஜப்தி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *இல்லாத தகவலை, தவறான தகவலை பதிய வைத்துக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளின்மீது ஜப்தி நடவடிக்கையை இதுவரைக்கும் எடுக்கவே இல்லை. இப்போது ஆறாண்டு காலம் ஆகப்போகிறது. கடந்த 6 ஆண்டுகளில் ஜப்தி நடவடிக்கையில், இதுவரையில் ஈடுபடவே இல்லை. அவர் எங்கே, யார் நடவடிக்கை எடுத்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். கூட்டுறவு வங்கிகளில் கிடையாது, மத்திய சர்க்காருடைய வங்கிகளில் கடன் வாங்கியவர்களிடம் வேண்டுமானால் நடவடிக்கை எடுத்திருக்கலாமேயொழிய, இங்கே கிடையாது. (குறுக்கீடுகள்) வணிக வங்கிக்கும், நமக்கும் சம்பந்தமில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்கியவர்களிடம், இதுவரைக்கும் அந்த மாதிரியான நடவடிக்கையை எடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர், எந்த வங்கியில், எந்த விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. கரி. இராமசாமி, கொஞ்சம் இருங்கள். திரு. அர. சக்கரபாணி, என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

**திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கூட்டுறவு வங்கிகளின்மூலமாக ஜப்தி நடவடிக்கை இல்லை என்று சொன்னார்.*

2016 ஜூன் 22] [திரு. அர. சக்கரபாணி]

ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலே, விவசாயிகள் வாங்கியிருக்கின்ற கடன்மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியிலே சென்று சமீபத்தில் சந்தித்தார். 50 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்திருக்கிறீர்கள். மத்திய அரசை வலியுறுத்தி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கியிருக்கின்ற கடனையும் இரத்து செய்வதற்கு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் சரியில்லை. இதை விடுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் அவர்கள் சொன்னார், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் எடுக்கப்படுகிற ஜப்தி நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்ல வேண்டும் என்று சொன்னார். இவர்கள் காலத்தில் ஜப்தி நடவடிக்கை இருந்ததே? (குறுக்கீடுகள்) அப்போது அவருடைய தலைவர் சொன்னாரா? எத்தனை நடவடிக்கைகள்? நான் வேண்டுமென்றால் விவரங்களை எடுத்துத் தருகிறேன். நாளைக்கே உங்களுக்கு ஆதாரங்களைக் கொண்டுவந்து காண்பிக்கிறேன். நாளைக்கு சட்டமன்றம் கூடுகிறது. அப்போது, எத்தனை பேர் செத்தார்கள் என்ற விவரம் தருகிறேன். இந்தியா முழுவதும், நீங்கள் உர மானியத்தை இரத்து செய்ததால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் செத்தார்கள். அதற்குப் பரிகாரமாகத்தான் மத்திய சர்க்கார் இந்த விவசாயக் கடனை சொற்பமாக இரத்து செய்தார்கள். வேறு ஒன்றும் கிடையாது. (குறுக்கீடு) அதற்குப் பரிகாரம் தேடினார்கள். ஆனால், இப்போது, விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர், நஷ்டப்படுகின்றனர். அதற்கு முழுக்க, முழுக்க இரண்டு பேரும்தான் காரணம். மத்தியிலே 2006–லிருந்து ஆட்சியில் இருந்தவர்கள்தான் காரணம். இவர்கள்தான் உர மானியத்தை இரத்து செய்தவர்கள். இங்கே விவசாய வீட்டுப் பிள்ளைகள் யாராக இருந்தீர்களென்றால், எந்தக் கட்சியில் இருந்தாலும் சரி, இன்றைக்கு அவர்கள் படுகிற துன்பத்திற்கெல்லாம், அன்றைக்கு ஆண்ட மத்திய சர்க்காருடைய காங்கிரஸ் அரசும், கூட்டணியாக இருந்த தி.மு.க.வும்தான் முழுக்க, முழுக்க காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் எங்கே வேண்டுமானாலும் சொல்லத் தயார். என்றைக்கு கையெழுத்து போட்டார்கள், அதனால் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டனர், இந்திய

*அளவில் எவ்வளவு விவசாயிகள் செத்தார்கள் என்பதையெல்லாம் சொல்ல வேண்டுமென்றால், அந்த விவரங்களை எடுத்துத் தருகிறேன்.*

*பிற்பகல் 12–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, நீங்கள் பேசுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மின் துறையைப் பொறுத்தமட்டில், மின் மிகை மாநிலம் என்று சொல்லி இருக்கிறீர்கள். சென்ற ஐந்தாண்டுகளிலே நீங்கள் எத்தனை மெகா வாட் மின்சாரத்தை புதிதாக உற்பத்தி செய்து இருக்கிறீர்கள்? எத்தனை விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறீர்கள்? (குறுக்கீடு) மின் மிகை மாநிலம் என்றால், விவசாயிகளுக்கு போதிய மின் வசதிகளை செய்து தர வேண்டும். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இப்படிச் செய்கிறீர்களே, இது முறையா? உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார், அதைக் கேட்பதை விட்டுவிட்டு இப்படிச் செய்கிறீர்களே!*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு வழங்கக்கோரி விண்ணப்பித்தும் பல ஆண்டுகள் ஆகியும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. மின் மிகை மாநிலம் என்று சொல்கிறீர்கள். ஆனால், விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு மறுக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, எத்தனை விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் கொடுத்தீர்கள் என்று கேட்டவுடன் கை தட்டுகிறார்கள். அவர்களுடைய ஆட்சியில் மின்சாரமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எந்த விவசாயிக்கும் மின்சாரம் கொடுக்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் மின்சாரம் கொடுத்தார்கள். (குறுக்கீடு) அதைக் கேட்கின்றார்கள், நாங்கள் பதில் சொல்கின்றோம். (குறுக்கீடுகள்) சொல்கிறேன், பேசிவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சொல்கிறேன், இருங்கள். (குறுக்கீடுகள்)*

2016 ஜுன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், 2006–2011 ஐந்தாண்டு காலம் அவர்களோடு கூட்டணி.... குறுக்கீடுகள்) இருங்கள், நான் சொல்கிறேன். நீங்கள் ஏன் சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள், உட்காருங்கள். எதிர்க் கட்சியைச் சேர்ந்த திரு. இராமசாமி அவர்கள் பேசியதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். நீங்கள் ஏன் இப்படி பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) எதற்கு நீங்கள் பேசுகிறீர்கள்? நீங்கள் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) அவர் உங்கள் கட்சி உறுப்பினர் இல்லை. நீங்கள் பேசக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேச வேண்டுமென்றால் முதல் வரிசையில் உங்கள் தலைவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் வாய்ப்புக் கேட்டால் வழங்குவேன். (குறுக்கீடு) இதோ பாருங்கள் திரு. பொன்முடி, இப்படியெல்லாம் இஷ்டத்திற்கு எழுந்து நின்று நீங்கள் பேச முடியாது. (குறுக்கீடு) உட்கார்ந்து கொண்டு பேசுவதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) முதல் வரிசையில் உங்கள் தலைவர்கள் இருக்கிறார்கள், அவர்கள்* raise *செய்தால், நான் அனுமதிக்கிறேன். நான் வாய்ப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் 3 நாட்களாக பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) உங்கள் எல்லோருக்கும், நீங்கள் நினைத்தமாதிரி, கேட்டவுடனே வாய்ப்பு வழங்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் அதுமாதிரியெல்லாம் பேசி என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) திரு. பொன்முடி, நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர். நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன், நீங்கள் சொல்வதற்கெல்லாம் கட்டுப்பட்டு நான் அவையை நடத்த முடியாது. உங்கள் கட்சித் தலைவர்கள் கேட்டால் நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) நீங்கள் அவ்வளவு பேரும் எழுந்து நின்று வாய்ப்புக் கேட்டால் தர முடியாது. அது முறையுமில்லை. நான் இதை இறுதியாக உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. வேலு, உட்காருங்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2016 ஜூன் 22

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் அமைச்சராக இருந்தவர். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு இருக்கின்றது. நான் சொல்கின்ற கருத்தில் மாற்றுக் கருத்து இருந்தால், தயவுசெய்து அப்பொழுது சொல்லலாம். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. உங்கள் கட்சியின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் பேசவிருக்கின்றார். (குறுக்கீடு) நான் சொல்லவே ஆரம்பிக்கவில்லை. (குறுக்கீடுகள்) நான் என்ன சொல்கிறேன் என்றுகூட நீங்கள் கேட்காமல். . . (குறுக்கீடுகள்) நான் சொன்ன கருத்தில் ஏதாவது தவறு இருந்தால் நீங்கள் எழுந்து நின்று சொல்லுங்கள். நான் சொல்ல ஆரம்பிப்பதற்கு முன்பாகவே மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து நிற்கிறீர்கள். மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களிடம் நான் சொல்ல விரும்புவது என்னவென்று சொன்னால், 2006–2011 ஐந்தாண்டு காலம் உங்களோடு கூட்டணியாக இருந்ததுதான் தி.மு.க., அப்பொழுது மின்வெட்டு இருந்தது. விவசாயிகளுக்கு எவ்வளவு மின்சாரம் கொடுத்தீர்கள் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆனால், இப்பொழுது மின் மிகை மாநிலம் என்பதை அவரே ஒத்துக் கொண்டிருக்கின்றார். கடந்த ஐந்தாண்டு காலத்தில் எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்திருக்கின்றீர்கள் என்று கேட்டிருக்கின்றார். அதற்கு நான் விவரம் கொடுக்க இருக்கின்றேன். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மின்வெட்டு எட்டு மணி நேரம் என்று அறிவித்திருந்தீர்கள். ஆனால், கிட்டத்தட்ட 15 மணி நேரம், 16 மணி நேரம் என்று மின்வெட்டு இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் நேரத்திலே தெளிவாகச் சொன்னார்கள். நான் ஆட்சிக்கு வந்தவுடன், இரண்டு, மூன்றாண்டு காலத்திற்குள் தமிழகத்தில். . . (குறுக்கீடுகள்) என்னங்க இது? (குறுக்கீடுகள்) சரி, நான் சொல்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) அதெற்கெல்லாம் ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். எதுவாக இருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி முடித்த பின்னால், ஏதாவது கேள்வி இருந்தால் நீங்கள் கேளுங்கள், நான் வாய்ப்புத் தருகிறேன். எல்லோரும் இப்படி வாய்ப்புக் கேட்டால் எப்படி? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சருடைய பதில் முடியட்டும், நான் உங்களுக்கு*

2016 ஜூன் 22] [பேரவைத் தலைவர்]

*வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்தவுடன் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)*

**திரு. துரைமுருகன்:** *நாங்கள் எழுந்துவிட்டோம், பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எழுந்துவிட்டீர்கள், அதனால் என்ன, பரவாயில்லை. எழுந்து நின்றால் நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், இப்படியெல்லாம் வற்புறுத்தினால் நான் வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடுகள்) நான் பிறகு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பதிலைக் கேளுங்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்கு, கடந்த 2011–2016 ஐந்தாண்டு காலம்... (குறுக்கீடுகள்) 2011–2016 என்றுதானே சொன்னேன். (குறுக்கீடுகள்) மொத்தம் 4,455 மெகா வாட் மின்சாரத்தை புதியதாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் உற்பத்தி செய்த காரணத்தினால்தான் தமிழகம் மின் மிகை மாநிலமாக இருந்தது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) சொல்கிறேன், உட்காருங்கள். இப்படிப் பேசினால். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு முன் வரிசையில் இருப்பவர்கள் வாய்ப்புக் கேட்டால், வாய்ப்புத் தருகிறேன் என்று நான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகும் நீங்கள் இப்படி எழுந்து நின்று பேசிக் கொண்டிருந்தால், நான் என்ன செய்ய முடியும்? மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2016 ஜூன் 22

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழகம் மின் மிகை மாநிலம் என்பதற்கு மத்திய அரசினுடைய* Electricity Board *ஒரு* Certificate *கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த நான்கு நாட்களுக்கு முன்பாக செய்தித் தாளிலேகூட வந்திருக்கின்றது. அதை நீங்களும் பார்த்திருப்பீர்கள். அதற்குரிய ஆதாரம் என்னிடத்திலே இருக்கின்றது. நேரமில்லை என்று சொன்ன காரணத்தினால் உங்களுக்கு நான் இதைச் சொல்கின்றேன். இவர்கள் கேட்டதற்கு நான் ஒன்றை மட்டும் சொல்கின்றேன். அன்றையதினம் உங்கள் ஆட்சியில் மின் துறை அமைச்சராக இருந்தவர், எங்களுடைய ஆட்சி போகிறது என்று சொன்னால், இந்த மின்வெட்டினால்தான் ஆட்சி போகும் என்று சொல்லி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றையதினம் இந்தச் சட்டமன்றத்திலே கேள்விகள் கேட்கின்றபொழுது, அன்றைய முதல்வராக இருந்தவர், துப்பாக்கிச் சூடு நடத்தி விவசாயிகள் இறந்துவிட்டார்கள் என்று சொன்னதற்கு, துப்பாக்கியிலிருந்து 'பூ மழையா பொழியும், குண்டு மழைதான் பொழியும்' என்று சொன்னவர்களா, இன்று விவசாயிகளைப் பற்றி இவ்வளவு கவலைப்படுகிறார்கள் என்பதை அனைவரும் இப்போது பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் அனைவரும் உட்காருங்கள்.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் கேட்டது இரண்டு கேள்விகள். ஒன்று, எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்திருக்கின்றீர்கள் என்பது, இரண்டாவது கேள்வி எத்தனை விவசாயிகளுக்குப் புதியதாக மின் இணைப்பு தந்திருக்கின்றீர்கள் என்பது. அந்த இரண்டு கேள்விகளுக்கும் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லும்போது, எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்தோம் என்று சொன்னார்கள். ஆனால், எத்தனை விவசாயிகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டது என்று இன்னமும் சொல்லவில்லை. இதற்கிடையில், குண்டுமாரி பொழியும், துப்பாக்கி என்றெல்லாம் நாங்கள் சொன்னதாகச் சொன்னீர்கள். போர்க்களம் என்றால் மக்கள் சாவார்கள் என்று சொன்னது நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தமாதிரி தத்துவம் எல்லாம் எங்களுக்குத் தெரியாது.*

2016 ஜூன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைப் பொறுத்தமட்டில், அரசு எவ்வளவு மெகா வாட் உற்பத்தி செய்திருக்கிறது என்று நான் கேட்கின்றேன். நீங்கள் தனியாரிடமிருந்து விலை கொடுத்து வாங்குகிறீர்கள். நாம் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தைவிட தனியாரிடமிருந்து பெறக்கூடிய மின்சாரத்தின் விலை கூடுதல் என்று நான் எண்ணுகின்றேன். நீங்கள் எந்த மின் திட்டத்தை ஐந்தாண்டுகளிலே ஏற்படுத்தினீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்றால், வருகின்ற ஐந்தாண்டுகளிலே உங்களது திட்டம் என்ன என்பதை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவருக்கு சொல்லிக்கொள்கின்றேன். எந்த அரசுமே வாங்கிய மின்சாரத்தை கணக்கில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். புதியதாக உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை மட்டும்தான் சொல்வார்கள்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், புனல் மின் நிலையத்தின் வாயிலாக 107.5 மெகா வாட். அனல் மின் நிலையம் வாயிலாக 1,800 மெகா வாட். நம்மோடு சேர்ந்து செயல்படும் மத்திய தொகுப்பு அனல் மின் நிலையம் வாயிலாக 2,548 மெகா வாட். அணு மின் நிலையத்தின் வாயிலாக நாம் வாங்கியது 563 மெகா வாட். இதில் தனியாரிடத்திலிருந்து மின்சாரம் வாங்குவதை நாங்கள் எப்போதுமே கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. (குறுக்கீடு) இருங்கள், சொல்கிறேன். இன்னொன்று, தனியாரிடத்திலே அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதாகச் சொன்னார்கள். கடந்த காலத்தில், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், மின் வெட்டு அதிகமாக இருந்த காரணத்தினால் யூனிட்டுக்கு 13 ரூபாய் வரைக்கும் கொடுத்து வாங்கினார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி வந்ததற்குப் பின்னால், இந்த இரண்டாண்டு காலத்தில் வெளியே வாங்குகின்ற மின்சாரத்தைக் குறைத்து, காற்றாலை மின்சாரத்தை முழுமையாக எடுக்க வேண்டுமென்று சொல்லி, இன்றையதினம் 5 ரூபாய்க்கு மேல் தனியார் யாரிடத்திலும்

*வாங்கவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சி தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கரி. இராமசாமி, நீங்கள் பேச ஆரம்பித்து 51 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டன. நீங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) அனுமதியில்லை, நீங்கள் சீக்கிரம் பேசி, உரையை முடியுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாரிடமிருந்து வாங்கக்கூடிய மின்சாரத்தின் அளவு எவ்வளவு, அதற்கு என்ன விலை கொடுக்கிறீர்கள்?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *நான் சொன்னது மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்குப் புரியவில்லை என்று நினைக்கின்றேன். கடந்த காலத்திலேதான் அதிக விலை கொடுத்து வாங்கினார்கள். (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கின்றேன். ஐந்து ரூபாய்க்கு மேல் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கவில்லை என்பது ஒன்று. அதுமட்டுமல்லாமல், மின் மிகை மாநிலம் என்று எப்படிச் சொல்கிறீர்கள் என்று கேட்டீர்கள். கடந்த 10 நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு அம்மா அவர்கள், தனியார் மின் உற்பத்தியாளர்களிடம் தமிழகத்தில் தேவைக்கும் அதிகமாக மின்சாரம் இருக்கிறது, 900 மெகா வாட் மின்சாரத்தை நீங்கள் பக்கத்து மாநிலங்களுக்கு விற்றுக்கொள்ளலாம் என்று அனுமதி வழங்கியதற்குக் காரணம் மின் மிகை மாநிலமாக இருக்கும் ஒரே காரணம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 12–35*

*அதேபோல் விவசாயிகளுக்கான மின் இணைப்புகளைப் பொறுத்தவரையில், கடந்த 5 ஆண்டு காலத்தில் எவ்வளவு*

2016 ஜூன் 22] [திரு. பி. தங்கமணி]

இணைப்புகளை கொடுத்தீர்கள் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், நீங்களும் கேட்டீர்கள். இதுவரை மொத்தம் 87,882 இணைப்புகள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பதிலைச் சொன்னேன். நான் சொல்வதில் அவர்களுக்கு மாற்றுக் கருத்து இருந்தால், சொல்லட்டும். உட்கார்ந்துகொண்டு இது தவறு, பொய் என்று சொன்னால், அது எந்தவிதத்தில் நியாயம்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டுதான் சொல்கின்றார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள், விரைவில் உரையை முடியுங்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். நேரம் ஆகிவிட்டது. சீக்கிரம் உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 51 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் துறையைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். விவசாயிகளுக்கு மின் இணைப்பை உடனடியாகக் கொடுப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.

**திரு. என்.ஜி. பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் விழியாய், தமிழர்களின் ஒளியாய் வந்துதித்த மனித சக்தி கடந்த மகா சக்தி, எங்களை நாளும் வாழ வைக்கும் குலசாமி, தாயின் திருவடி பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி கெட்டவர்களின் நரித்தனத்தை மக்களுக்கு வெளிப்படுத்தி, வெத்து வேட்டு பேர்வழிகளின் வேஷத்தை நாசம் செய்து, சத்தியத்தை நிலைநாட்ட தெய்வ சக்தியாய் வந்துதித்த இந்தியா போற்றும் சத்தியத் தாய் பெற்றெடுத்த சரித்திரத் தாயே! தங்கள் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத்

தட்டும் ஒலி) புண்ணியத்தின் பிறப்பே, புரட்சியின் புறப்பாடே, கருணையின் வெளிப்பாடே, துணிவின் தோற்றமே, எங்களை வாழ வைக்கும் மனித தெய்வமே, சின்னவன் நான் சிரம் தாழ்ந்து பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண ஏழை நெசவாளர் குடும்பத்தில் பிறந்த என்னை சட்டக் கல்லூரி மாணவர் அணி செயலாளராக்கி, வேலூர் கிழக்கு மாவட்ட மாணவர் அணி செயலாளராக்கி, அதன் பிறகு எம்.ஜி.ஆர் இளைஞர் அணி இணைச் செயலாளராக்கி, இன்று வேலூர் கிழக்கு மாவட்டச் செயலாளராக இரண்டாவது முறையாகப் பொறுப்பை வழங்கி, இவை எல்லாவற்றிற்கும் மேலாக, சட்டமன்ற உறுப்பினராக்கி, என்னை இந்த மாமன்றத்தில் அமரச் செய்து அழகு பார்த்த அன்னையே! குடிசையில் அகல் விளக்காய் இருந்த என்னை, மலை உச்சியில் எரியும் தீபம் போல உயர்த்திய தாயே! இந்தக் கருணை ஈரேழு உலகத்தில் உங்களைத் தவிர யாருக்கும் இல்லை.

தங்களுக்கு பதிலுக்குக் கொடுப்பதற்கு என் உயிரையும், உடலையும் தவிர என்னிடத்தில் வேறு ஒன்றுமில்லை. இருந்தாலும், நன்றி என்ற மூன்றெழுத்தை என் உயிர் என்கின்ற மூன்றெழுத்தோடு இணைத்து, அம்மா என்கிற மூன்றெழுத்து கொண்டு நடமாடும் தெய்வத்தின் திருவடியில் பணிந்து சமர்ப்பிக்கின்றேன். அம்மாவால் இன்றைக்கு அடையாளம் காட்டப்பட்டு, சோளிங்கர் தொகுதிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டு, வெற்றிச் சின்னமாகிய இரட்டை இலைக்கு வாக்களித்து அறுதிப் பெரும்பான்மையோடு வெற்றி பெறச் செய்து, என்னைத் தேர்ந்தெடுத்த சோளிங்கர் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் இந்தச் சபையின் வாயிலாகக் கோடானு கோடி நன்றியினைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சில பகுதி மக்களின் கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு இந்தச் சபையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

108 வைணவத் தலங்களில் ஒன்றாக இருக்கின்ற சோளிங்கரில் குடிகொண்டிருக்கின்ற அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலுக்கு 2005–2006 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் Rope car அமைப்பதற்கு ஆணை பிறப்பித்தார்கள். அதனை

2016 ஜுன் 22] [திரு. என்.ஜி. பார்த்திபன்]

*விரைந்து செயல்படுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நெரிசல் மிகுந்த நகரமாக மாறிவருகின்ற சோளிங்கர் நகருக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் புறவழிச் சாலையை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சோளிங்கர் தொகுதி மாணவ, மாணவிகள் அருகில் இருக்கின்ற நகரங்களுக்குச் சென்று கல்லூரிப் படிப்பு படிக்க வேண்டியுள்ளதால், சோளிங்கர் நகரில் ஓர் அரசு கலைக் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட காவேரிப்பாக்கம் விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கின்றது. எனவே, காவேரிப்பாக்கம் பகுதியில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காவேரிப்பாக்கத்தில் செயல்பட்டு வருகின்ற அரசு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது 4 படுக்கைகள் மட்டும்தான் இருக்கின்றன. அதனை 20 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தயைபுரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

*பிற்பகல் 12–40*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதி நெசவாளர்கள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், பனப்பாக்கம் பகுதியிலே ஒரு ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டுமென்று இந்தப் பேரவையின் வாயிலாக மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மழை, வெள்ளக் காலங்களிலே மக்கள் படுகின்ற அவதியைக் கருதி, காவேரிப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட துரைப்பெரும்பாக்கம் என்ற ஊருக்கும், காவேரிப்பாக்கத்திற்கும் இடையில் இருக்கின்ற தரைப் பாலத்தை, உயர்நிலை மேம்பாலமாக உயர்த்தித் தர வேண்டுமென்று இந்தப் பேரவையின் வாயிலாக மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே தயவுகூர்ந்து கேட்டுக்கொள்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தின் தலைமைப் பண்புக்குரிய தன்னிகரில்லாதவர்கள் என்ற புத்தகத்தில் இடம்பெற்ற பட்டியலைப் பார்த்தேன். அதில் சொன்ன அனைத்தையும் ஒருங்கே பெற்று, உலகத்தில் வாழும் ஒரே தலைவர் நம் அம்மாதான். அறிவு, திறமை, நேர்மை, நம்பகத்தன்மை, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, முன்னின்று நடத்துதல், மன தைரியம், மனம் தளராமை, இலக்கு நோக்கி பயணித்தல், தொலைநோக்குப்*

பார்வை, சாதாரண மனிதனையும் ஊக்கப்படுத்துதல், எளியவர்களின் உயர்வு பற்றியே சிந்தித்தல் இவை அனைத்தையும் கொண்ட ஒரே தலைவர், வாழும் மனித தெய்வம் நம் அம்மா அவர்கள்தான் என்று இன்று அகிலமே சொல்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பட்டி தொட்டி எங்கும் தட்டுத் தடுமாறாமல் பேசும் ஒற்றைச் சொல் அம்மா என்னும் அன்புச்சொல். (மேசையைத் தட்டும் ஒலி) விண் உள்ளவரை, மண் உள்ளவரை, நீர் உள்ளவரை, நிலம் உள்ளவரை, கடல் உள்ளவரை, காற்று உள்ளவரை, அம்மா தங்கள் புகழ் நிலைத்து நிற்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறத்தினை நிலை நிறுத்தி, சூழ்ச்சியாளர்களை வேரறுத்து, நெருப்பாற்றில் நீந்தி, சூரியனை சுட்டெரித்து, எதிரிகளை ஓட ஓட விரட்டி, மீண்டும் தர்மத்தை நிலைக்கச் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) பொற்காலம் படைக்கும் பொன்மனத் தாயின் நற்கால ஆட்சி தொடர்ந்திட, தமிழகம் என்றும், எதிலும் முதன்மை, இணையில்லாத தனித்தன்மை என்று கருணை உள்ளத்தோடு நிறைவான மக்களாட்சி கிடைத்திட வழிவகை செய்த கருணைத் தாய் நம் அம்மா. அம்மாவின் பேனா தலை குனியும்போதெல்லாம் தமிழர்களின் தலை நிமிர்கிறது. பேனாவில் மை போட்டு எழுதும் தலைவர்கள் மத்தியில், மெய் போட்டு எழுதுகின்ற ஒரே தலைவர் நம் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகள் வாழ்வு உயர்ந்திட, எல்லோரும் எல்லாமும் பெற்றிட, தமிழகத்தில் தர்மம் தழைத்திட, ஆற்றல் மிக்க அரசியல் துணிவோடு, தமிழர்களின் தலையெழுத்தை தன் ஒரெழுத்தால் மாற்றி, தமிழர்களின் நலன் காக்கும் தர்மத் தாயின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஐந்து கையொப்பத்திற்கு நாம் அனைவரும் இந்தப் பேரவையில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்த விவாதத்தில் கடைக்கோடி தொண்டனான நான், பாரம்பரியமிக்க இந்தச் சபையில் ஆளுநர் அவர்களால் வாசிக்கப்பெற்ற உரையினைக் கேட்டபோதும், அப்புத்தகத்தின் 38 பக்கங்களைப் படித்தபோதும் அறிந்துகொண்ட, தெரிந்துகொண்ட செய்திகளின் சிறப்புகளை முழுவதும் பட்டியலிட்டால் இன்று ஒரு நாள் அடங்காது. காலத்தின் அருமை கருதி மிகச் சுருக்கமாகக் கருத்துகளைப் பதிவு செய்கிறேன்.

தமிழகத்தை ஏற்றம் பெறச் செய்திட வேளாண்மைத் துறையில் புரட்சி, விவசாயிகளின் நலன் காக்கும் திட்டம், மக்களின் மனம் குளிரும் வகையில், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையில் பல்வேறு மாற்றங்கள், வளர்ச்சித் திட்டங்களை வாரி வழங்கும் வீட்டு வசதித் துறை, கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களின் நலன் பேணும் கல்வித் துறை, உலகமே வியந்து போற்றும் நெசவாளர் நலன், மீனவர் நலன் பாதுகாத்தல், தொழில் துறையில் தமிழகத்தை தலைநிமிரச் செய்தல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள், முதியோர், திருநங்கைகள் நலன்கள் பேணப்படுதல்; இப்படியாக தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்குமான முன்னோடிக் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்து, சமூக நலனிலும் ஏழைகளின் நலன் காத்திடவும் அளித்திட்ட ஆளுநர் அவர்களின் உரைக்கு ஆயிரம் முறை நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். 38 பக்கங்களும் அற்புதம், பிரமாதம் என்றால் மிகையன்று. இன்றுதான் மக்களின் மனதில் பதிந்தது நம்பிக்கை, முகத்தில் மலர்ந்தது புன்னகை, ஜனநாயகத்தை நிறுவி, தர்மத்தை மக்கள் மத்தியில் நிலை நிறுத்தி, சரித்திர வெற்றிக்கு, சாதனை வெற்றிக்கு சொந்தக்காரர் ஒரே ஒருவர்; அவர்தான் நம் அன்புக்குரிய, பண்புக்குரிய, பாசத்திற்குரிய, எட்டு கோடி தமிழர்களால் நாளும் நேசிக்கக்கூடிய அம்மா, அம்மா, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

உலகமே வியந்து பார்க்கும் ஆளுமைத் திறனும், அபரிமித மக்கள் செல்வாக்கும் கொண்டு மாட்சிமைமிக்க ஆட்சியைத் தொடர்ந்திட, மக்கள் அளித்த அங்கீகாரம்தான் இந்த மாபெரும் வெற்றி. அம்மா, நீங்கள் சென்ற திசைகளிலெல்லாம் வெற்றிகள் வந்து குவிகின்றன. அம்மா, நீங்கள் நின்ற இடங்களிலெல்லாம் நியாயங்கள் பாதுகாக்கப்படுகின்றன. அம்மா, நீங்கள் சந்தித்த சாதாரணமானவர்களெல்லாம் சாதனையாளர்களாக மாறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்பை மறந்து, அறத்தைத் துறந்து, பகைமையே பாராட்டி, பிறரை பழிவாங்குவதையே கணக்கிட்டு செய்த கபட கும்பல்களுக்கு முற்றுப் புள்ளி வைத்த கோடி சிங்கத்தின் தைரியம் குடிகொண்ட குடியிருந்த கோயில் அம்மா நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு வண்ணங்களைக் கொண்ட மக்களின் எண்ணங்களை இன்றைக்கு நந்தவனப் பூக்களாய் மத்தாப்பு சிரிப்போடு ஆண்டு கொண்டிருக்கும் ஒரே தலைவி, எங்கள் அம்மா.

*பிற்பகல் 12—45*

*எங்கள் அம்மா சுட்டிக்காட்டினால் மட்டுமே எதுவும் வெற்றிச் சின்னம்; இல்லையேல் எல்லாம் வெத்துச் சின்னம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மிகப் பெரிய நல்ல வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியினுடைய மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொண்டு, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பங்கேற்று என்னுடைய கருத்துகளை எடுத்துச் சொல்லக்கூடிய வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நான் முதலில் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.*

*நாடு சுதந்திரம் பெற்ற பிறகு 1952, மே மாதம் 6 ஆம் தேதி தொடங்கிய ஆளுநர் உரை இந்தளவிலே தமிழக சட்டமன்றத்திலே தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வருகிறது. ஆளுநர் உரை என்றாலும், இது அரசினுடைய கொள்கையை அறிவிக்கக்கூடிய உரை என்பதை மக்களாட்சித் தத்துவத்தை உணர்ந்திருக்கக்கூடிய அனைவரும் நன்றாக அறிந்து கொண்டிருக்கின்றார்கள். இந்தச் சட்டமன்றம் பல்வேறு எதிர்க்கட்சித் தலைவர்களைப் பார்த்திருக்கிறது. 1952—ல் திரு. நாகி ரெட்டி அவர்களில் தொடங்கி, திரு. வி.கே. இராமசாமி முதலியார் அவர்கள், திரு. நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், திரு. பி.ஜி. கருத்திருமன் அவர்கள், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், பேராசிரியர் பெருந்தகை அவர்கள், ஏன்? இப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர் உள்ளிட்ட அனைவரையும் எதிர்க்கட்சித் தலைவராக சந்தித்த மாமன்றம்தான் இந்தச் சட்டமன்றமாகும். ஆக, அப்படிப்பட்ட பெருமைக்குரிய இந்தச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பணியாற்றக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்கு நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன். இந்தப் பெரும் பொறுப்பை*

2016 ஜூன் 22] [திரு. மு.க. ஸ்டாலின்]

எனக்கு வழங்கி, பணியாற்றக்கூடிய வாய்ப்பைத் தந்த எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அத்துணை பேருக்கும், இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், குறிப்பாகவும், சிறப்பாகவும் என்னை மீண்டும் கொளத்தூர் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவைக்கு அனுப்பி வைத்திருக்கக்கூடிய தொகுதி மக்கள் அத்துணை பேருக்கும் நான் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்க விரும்புகிறேன்.

நாங்கள் வெற்றி பெற்று வந்திருக்கிறோம் என்று இங்கே நீங்கள் கூறலாம். தேர்தலில் வெற்றி, தோல்வி என்பது ஜனநாயகத்தினுடைய இரண்டு பக்கங்கள் என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல. எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள் ஆளுங்கட்சி வரிசைக்கும், ஆளுங்கட்சி வரிசையில் இருக்கக்கூடியவர்கள் எதிர்க்கட்சி வரிசைக்கும் செல்வது ஜனநாயகத்தினுடைய ஒரு திருவிழா. அந்த நிகழ்வை உருவாக்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள் மக்கள்தான். அந்த மக்கள் அளித்த தீர்ப்பை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய பக்குவத்தை அரசியல்வாதியாக இருக்கக்கூடிய நாம் பெற வேண்டும்; பெற்றிருக்கிறோம் என்றுதான் நான் உளமார கருதுகிறேன். நீங்கள் இங்கே ஆளுங்கட்சியாக இருக்கிறீர்கள். நாங்கள் இங்கே எதிர்க்கட்சியாக இருக்கிறோம். இருவருக்கும் இடையில் இருக்கக்கூடிய வித்தியாசம் மிக மிகக் குறைவு என்பதை நீங்களும் உணர்ந்திருக்கிறீர்கள், நாங்களும் உணர்ந்து கொண்டிருக்கிறோம். இப்படி ஒரு தீர்ப்பை மக்கள் அளித்ததற்கு மிக முக்கிய காரணம், மக்கள் நம்மிடமிருந்து இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள் என்பதுதான். ஆளுங்கட்சி சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று மக்கள் கருதுகிறார்கள். அந்தச் செயல்பாட்டை எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக்கூடியவர்கள் கண்காணிக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். அதனால்தான் உங்களுக்கு 132 எம்.எல்.ஏ.–க்களையும், எங்களுக்கு 89 எம்.எல்.ஏ.–க்களையும் கொடுத்து வரலாற்றுச் சிறப்புமிக்க, பொறுப்புள்ள எதிர்க்கட்சியை உருவாக்கித் தந்திருக்கிறார்கள், தமிழ்நாட்டு மக்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மக்களுக்கு நன்றி செலுத்தக்கூடிய வகையிலே வெளிப்படையான நிருவாகத்தை ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய நீங்கள் வழங்கிட வேண்டும். அதை எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் உறுதி செய்ய வேண்டும்.

பிற்பகல் 12–50

திருவள்ளுவர் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

“இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்”

என்ற அழகான குறளை எடுத்து வைத்திருக்கிறார். ஆளுங்கட்சிக்கும், எதிர்க் கட்சிக்கும் இதைவிட ஒரு சிறந்த குறளை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை. இந்தக் குறளுக்கேற்ப ஆளுங்கட்சியினருக்கு எடுத்துச் சொல்கின்ற பணியை, நிருவாகத்தில் ஏற்படக்கூடிய குறைபாடுகளை சுட்டிக்காட்டுகிற பணியை, மக்களின் பிரச்சினைகளை உங்கள் கவனத்திற்கு எடுத்து வருகின்ற பணியை திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மன்றத்திலே எடுத்து வைக்கும் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பதைப்போல, நிதியாதாரங்களைத் திரட்டுவதற்கான வரி விதிக்கும் அதிகாரங்கள் மத்திய அரசிடம் அதிகமாகக் குவிந்துள்ள நிலையில், இன்றியமையாத பல பொதுச் சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கான பொறுப்பும், கடமையும் மாநிலங்களிடமே உள்ளன.

தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்காக மத்திய அரசுடன் இணைந்து செயல்படும் அதேவேளையில், மத்திய அரசு, மாநிலங்களுக்கிடையே நியாயமான நிதிப் பகிர்வு முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்ற கருத்து வரவேற்கத்தக்கதாகும்.

அடுத்து, மத்திய அரசினுடைய ஆட்சி மொழியாகவும், சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய வழக்காடு மொழியாகவும் தமிழ் மொழியினை அறிவிக்க வேண்டுமென்ற கருத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு உடனடித் தேவை, ஒரு மாநிலத்தினுடைய வெளிப்படையான நிருவாகம். இங்கு நாமெல்லாம் எப்படிச் செயல்படுகிறோம், மக்கள் பிரச்சினைகள் குறித்து நாம் என்னென்ன கருத்துகளைப் பேசுகிறோம் என்பதும், ஆட்சியில் நடப்பதைத் தெரிந்துகொள்ள தகவல் உரிமைச் சட்டம் வந்துவிட்ட நிலையில், தமிழக சட்டமன்றத்தினுடைய நடவடிக்கைகளை மக்கள் தெரிந்துகொள்ளக்கூடிய வகையிலே, தமிழக சட்டமன்ற

*நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நிதிச் சுமையைக் காரணம் காட்டி அதை ஒதுக்கி வைத்துவிடக் கூடாதென்று நான் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இதே வெளிப்படைத் தன்மை நிருவாகத்திலும் வேண்டும்.*

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23–5–2016 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அன்றையதினம் 5 வாக்குறுதிகளுக்குக் கையெழுத்திட்டிருக்கிறார்கள். குறிப்பாக, 5,780 கோடி ரூபாய் சிறு, குறு விவசாயக் கடன் தள்ளுபடி என்று கூறப்பட்டிருக்கிறது. விவசாயத் துறையினுடைய* website–*ல் இதுபற்றிய விவரங்கள் தெளிவாக இடம்பெற வேண்டும். மாவட்ட வாரியாக பயன் பெறக்கூடிய விவசாயிகளினுடைய பெயர்கள், அவர்களுக்கு தள்ளுபடி செய்யப்பட்ட தொகை ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும். 5,780 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படுகிறதென்று சொன்னால், கூட்டுறவு வங்கிகளுக்கு கொடுக்கப்படக்கூடிய நிதி எவ்வளவு என்ற விவரம்* website–*ல் இடம் பெற வேண்டும்.*

*இந்த நேரத்திலே இன்னொரு கருத்தையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இரண்டு நாட்களுக்கு முன்னால் விவசாயிகளினுடைய ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக இருக்கக்கூடிய திரு. பி.ஆர். பாண்டியன் அவர்கள் தலைமையிலே ஒரு குழு வந்து என்னைச் சந்தித்து, ஒரு கோரிக்கை மனுவை என்னிடத்திலே வழங்கினார்கள். அதிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்; சிறு குறு விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த விவசாயிகளினுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்பது அந்தக் கோரிக்கை. எனவே, ஆந்திர மாநில அரசைப்போல தமிழகத்திலே தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே விவசாயிகள் பெற்ற கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே நான் வலியுறுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக்கூட சந்திக்க அவர்கள் நேரம் கேட்டிருக்கிறார்கள். எனவே, முதலமைச்சரோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சரோ அவர்களை அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் உரை... (குறுக்கீடு) இல்லை, கோரிக்கைதான் வைத்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *ஒன்றுமில்லை, என்ன காரணம் என்று சொல்லப் போகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பதில் கேட்கிறார். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் பதில் கேட்கிறார். பதில் சொல்வது என்னுடைய உரிமை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவரே கேட்டார், விடுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பேசுகிறார், உட்காருங்கள்.*

*பிற்பகல் 12—55*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். அது என்னவென்றால், விவசாய மேம்பாடு மற்றும் விவசாயிகளின் நலன் என்னும் தலைப்பின்கீழ் கூட்டுறவு வங்கிகளுக்கு சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர்க் கடன், நடுத்தர காலக் கடன் மற்றும் நீண்டகால பண்ணைக் கடன்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்படும்; இதுதான் அறிவிக்கப்பட்டது. (குறுக்கீடு) சற்று நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்திருப்பதை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய கட்சித் தலைவர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அதற்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். நீங்களெல்லாம் உட்கார்ந்துகொண்டு பேசினால் என்ன அர்த்தம்? மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பேச விடுங்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவரிடம் வைக்கப்பட்ட கோரிக்கை குறித்து இங்கே சொன்னார். மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் என்ன வாக்குறுதிகளைக் கொடுத்தார்களோ, முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும், அந்த மை காயும் முன்னரே, கொடுத்த*

2016 ஜூன் 22] [திரு. செல்லூர் கா. ராஜு]

*வாக்குறுதிகளை நிறைவேற்ற உடனடியாகக் கையெழுத்திட்ட ஒரே முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிறு, குறு விவசாயிகள் எத்தனை பேர் பயனடைகிறார்கள் என்றால். . . (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். என்னைப் பேசவிடவே மாட்டேன் என்கிறீர்களே! ரூ.5,016.55 கோடி அளவிற்கு பயிர்க் கடனும், 732 கோடியே 32 இலட்சம் ரூபாய் அளவிற்கு மத்திய கால வேளாண் கடனும், 32.05 கோடி ரூபாய் அளவிற்கு பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடனும் தள்ளுபடி செய்யப்படுகிறது. அதாவது, 8,35,360 சிறு, குறு, விவசாயிகளுடைய கடன் 3,929 கோடியே 34 இலட்சம் ரூபாய். அதேபோன்று, 8,58,755 குறு விவசாயிகளுடைய கடன் 1,851 கோடியே 58 இலட்சம் ரூபாய், ஆக மொத்தம் 5,780.92 கோடி ரூபாய் இன்றைக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. ஏறத்தாழ 5,780 கோடியே 92 இலட்சம் ரூபாய் மேற்கண்ட விவசாயிகளுடைய கடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.*

*2006—ல் இதே அளவுதான் நீங்கள் தள்ளுபடி செய்தீர்கள். அன்றைக்கு தள்ளுபடி செய்ததைப் பற்றியெல்லாம் சொன்னால். . . (குறுக்கீடு) நான் குதர்க்கமாகச் சொல்கிறேன் என்று நினைக்கக் கூடாது. அன்று நீங்கள் எவ்வளவு தள்ளுபடி செய்தீர்கள் என்பதை மட்டும் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் எதிர்க்கட்சித் தலைவர் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்லி விடுகிறேன். (குறுக்கீடு) ஆந்திராவிலும், தெலுங்கானாவிலும் தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்றால், தேர்தல் காலத்தில் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பிறகு பேசலாம், உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் பேசியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *தெலுங்கானாவைப் பற்றியும், ஆந்திராவைப் பற்றியும் சொன்னார் இல்லையா? (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். இதேபோன்று, தேர்தல் காலத்தில் என்ன வாக்குறுதி கொடுத்தீர்களோ, அதைத்தான் நீங்கள் தள்ளுபடி செய்தீர்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *அதைத்தான் எங்கள் அம்மா செய்திருக்கிறார்கள். அதேமாதிரி ஆந்திராவிலும், தெலுங்கானாவிலும் அவர்கள் தேர்தல் காலத்தில் வாக்குறுதி கொடுத்தார்கள். அதனால் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதுவும் எவ்வளவு என்றால். . . (குறுக்கீடு) ஒரு நிமிடம், கேட்டுக்கொள்ளுங்கள். தெலுங்கானாவில் அதிகபட்சமாக ரூ.1 இலட்சம். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதை ஒரு நிமிடம் கேட்கச் சொல்லுங்கள். தெலுங்கானாவில் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக தள்ளுபடி செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்றால் ரூ.1 இலட்சம்தான்; ரூ.1 இலட்சம் மட்டும். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசட்டும்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *ஆந்திராவில் ஒன்றரை இலட்சம் ரூபாய் மட்டும்தான். அதற்கு மேல் கிடையாது. (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறார் இல்லையா?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *இதைத்தான் ஆந்திராவிலும் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஆனால், இங்கே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது, ஒன்றேகால் இலட்சம் ரூபாய், ஒன்றரை இலட்சம் ரூபாய் என்ற அளவில் சிறு, குறு விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்திருக்கிறார்கள். விவசாயிகளும் பயனடைந்திருக்கிறார்கள். இதுதான் உண்மை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் செய்திருப்பதை வரவேற்கிறோம். ஆனால் அந்த லிஸ்ட்டை website–ல் போடுங்கள் என்றுதான் சொல்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் நம்புகிறோம். அந்தச் செய்தி மக்களைச் சென்றடைய வேண்டும். ஆக, மக்கள் பயனடைந்திருக்கிறார்களா, எத்தனை பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்கிற விவரம் தெரிய வேண்டும். அதற்காகத்தான் website–ல்*

போட வேண்டும் என்று கேட்கிறோம். அரசிற்கென்று தனி website இருக்கிறது. நேற்றுவரையில், அந்த website–ல் அந்தத் தகவல் இல்லை. (குறுக்கீடு) ஆகவே, அந்தக் கோரிக்கையைத்தான் வைத்தேனே தவிர வேறொன்றுமில்லை. (குறுக்கீடு) அந்தத் தகவலை website–ல் நாளைக்கு அல்லது நாளை மறுநாள் போட்டுவிடுங்கள்.

பிற்பகல் 1–00

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதுபோன்று எவ்வளவு விவசாயிகள் பயனடைகிறார்கள், எந்தெந்தவகையில் பயன்பெறுகிறார்கள் என்பதை website–ல் போட்டு விடுவார்கள். (குறுக்கீடுகள்) அவர்கள் யார் என்ற விவரத்தை website–ல் போட்டுவிடுவோம். அதேநேரத்தில், அதற்கான பணிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் விரைவாக எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கையெழுத்து போட்டு 30 நாட்கள்தான் ஆகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் நேற்றையதினமே துரிதப்படுத்தச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கடன் தள்ளுபடி ஆக வேண்டும், வருகின்ற காலங்களில் அவர்களுடைய பயிர்க் கடன் எந்தவகையிலும் பாதிக்கப்படக் கூடாது, வருகின்ற காலத்திலே விவசாயிகளுக்கு உரிய கடன் வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், கடந்த ஆட்சியில் நீங்கள் தள்ளுபடி செய்ததற்குப் பின்பு, 52 நாட்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்) 52 நாட்கள் கழித்துதான், வழிகாட்டு நெறிமுறைகளையே கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் கையெழுத்து போட்டு 30 நாட்கள்தான் ஆகியிருக்கின்றன. அதிவிரைவிலே செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** நாங்கள் ஆட்சியைவிட்டுப் போய்விட்டோம். 2011–2016 வரைக்கும் நீங்கள்தான் ஆட்சியில் இருந்தீர்கள். அதையே சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். நீங்கள் சொன்னதைச் செய்யுங்கள். தயவுசெய்து என்னிடத்தில் சொல்லுங்கள்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2016 ஜூன் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலையில்லா கறவைப் பசுக்கள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வழங்கக்கூடிய முன்னோடித் திட்டங்கள் இந்த அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று ஆளுநர் உரை பக்கம் 15–ல் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, உங்கள் கட்சியினுடைய 2011 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில், தமிழகத்திலே ஒரு வெண்மைப் புரட்சியை உருவாக்க திட்டம் தீட்டப்படும் என்றும், 6,000 கிராமங்களில் சீரமைக்கப்பட்ட பால் பண்ணைகள் தொடங்கப்படும் என்றும், கூட்டுறவு நிருவாகத்தின்மூலம் 1 கோடி லிட்டர் பால் உற்பத்தியைப் பெருக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளுநர் உரை பக்கம் 9, 10–ல் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. ஆனால், தமிழகத்திலே செயல்பட்டுவரும் 17 மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்களில், குறிப்பாக, சேலம், நாமக்கல், திருச்சி, பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் முழுமையாகக் கொள்முதல் செய்யப்படவில்லை. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாலை எடுத்துச் சென்றால், சுமார் 20 சதவிகிதம் பாலை திருப்பியனுப்பி விடுகிறார்கள். ஆகவே, இந்த விவரத்தைப் பொறுத்தவரையில், நான் இங்கே அரசுக்கு நினைவூட்ட வேண்டுமென்று சொன்னால், ஆவின் நிறுவனம் நாளொன்றுக்கு சுமார் 31 இலட்சம் லிட்டர் பால்தான் கொள்முதல் செய்கிறது. நேற்றையதினம் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினுடைய தலைவராக இருக்கக்கூடிய திரு. செங்கோட்டுவேல் அவர்கள் மற்றும் அவருடைய குழுவைச் சார்ந்தவர்கள் என்னை வந்து சந்தித்து, இந்தப் பிரச்சினை குறித்து என்னிடத்திலே மனு ஒன்றையும் தந்திருக்கிறார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பால் முழுவதையும் ஆவின்மூலம் கட்டாயம் கொள்முதல் செய்து, அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்திட வேண்டும் என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பால்

2016 ஜூன் 22] [திரு. எஸ்.பி. சண்முகநாதன்]

*உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, தமிழகத்தில் இருக்கின்ற கூட்டுறவு தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு உற்பத்தியாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் வழங்குகின்ற பால் அனைத்தையும் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம் எடுத்து, அவர்கள் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு உதவும்விதமாக, பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு, கடந்த 18–11–2011 அன்று பசும் பால் மற்றும் எருமைப் பாலுக்கு தலா 2 ரூபாயும், 1–1–2014 அன்று தலா 3 ரூபாயும், 1–11–2014 அன்று பசும் பாலுக்கு 5 ரூபாயும், எருமைப் பாலுக்கு 4 ரூபாயும், ஆக மொத்தம் லிட்டர் ஒன்றுக்கு பசும் பாலுக்கு 10 ரூபாய் மற்றும் எருமைப் பாலுக்கு 9 ரூபாயும் உயர்த்தி வழங்கியுள்ளார்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். ஆக மொத்தம், ரூ.10/– உயர்த்தியதன் காரணமாக, பால் உற்பத்தி செய்கின்ற உறுப்பினர்கள் மட்டும் அந்தப் பாலை அந்தக் கூட்டுறவு ஒன்றியத்திலே கொண்டு சேர்த்தார்கள். ஆனால், பால் உற்பத்தி விலையை 10 ரூபாய் அளவுக்கு உயர்த்தியதன் காரணமாக, தனியார் பால் உற்பத்தியாளர்கள் அந்தப் பாலை விற்க முடியாமல், அந்தத் தரமற்ற பாலை தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் ஊற்றுவதற்கு முனைந்தார்கள். தரமான பாலை மட்டுமே வாங்குகின்ற கூட்டுறவுச் சங்கங்கள் இந்தப் பாலை வாங்க மறுக்கும்போது, வியாபாரிகள் இதுபோன்ற பிரச்சினையை கிளப்புகிறார்களே தவிர, உண்மையில் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் உற்பத்தி செய்கின்ற அனைத்துப் பாலையும் அரசு இன்று வரைக்கும் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–05*

*மாண்புமிகு அம்மா அவர்கள் 10 ரூபாய் விலை உயர்த்தியதன் காரணமாக, வெளியிலுள்ள பால் விற்க முடியாமல் போனதன் காரணமாக, தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் தனியார் பாலை, தரமற்ற பாலை கொண்டு சேர்க்கின்ற நிலை ஏற்படுவதன் காரணமாகத்தான் இந்த நிலை இருக்கின்றது. பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் உற்பத்தி செய்கின்ற அனைத்துப் பாலையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வாங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை, வியாபாரிகளுக்குத்தான் பாதிப்பு என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதற்கு ஒரு விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எது உண்மை என்பது, இதில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்கு நிச்சயமாகத் தெரியத்தான் போகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஏறியிருக்கக்கூடிய விலைவாசி குறித்து பேச விரும்புகிறேன். நீங்கள்கூட ஆளுநர் உரையிலே பக்கம் 17, 18—ல் விலைவாசியைக் கட்டுப்படுத்திட இந்த அரசு உருவாக்கிய பல்வேறு திட்டங்கள், ஏழை, எளிய மக்களையும், நடுத்தரக் குடும்பங்களையும் விலைவாசி உயர்விலிருந்து பாதுகாத்துள்ளன என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், இந்தக் கருத்தை எடுத்துச் சொல்கிறபோது, நான் இந்த அரசுக்குத் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், இன்று நடுத்தரக் குடும்பங்கள், தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள், தனியார் நிறுவனத்தில் குறைந்த ஊதியத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய பலர் விலைவாசி ஏற்றத்தால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றிரண்டை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.*

*இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய நடப்பு என்ன? விலைவாசியினுடைய ஏற்றம் என்ன? நேற்றையதினம் அண்ணாசாலையில் இருக்கக்கூடிய காமதேனு கூட்டுறவு அங்காடியிலே பல பொருட்களை நாங்களே சென்று வாங்கி, அந்தப் பொருட்களுடைய விலைகளையெல்லாம் குறித்துக் கொண்டு வந்திருக்கிறோம். பில்கூட கையிலே வைத்திருக்கிறோம். நான் ஏதோ பொத்தாம் பொதுவாகப் பேசுகிறேன் என்று தயவுசெய்து யாரும் கருத வேண்டிய அவசியம் இல்லை. கடலைப் பருப்பு 2011 ஜூன் மாதத்தில் ஒரு கிலோ 38 ரூபாய், 2016 ஜூன் மாதத்தில் ஒரு கிலோ 92 ரூபாய், 142 சதவீதம் விலை உயர்ந்திருக்கிறது; துவரம் பருப்பு 2011 ஜூன் மாதத்திலே ஒரு கிலோ 62 ரூபாய், 2016 ஜூன் மாதத்திலே ஒரு கிலோ 142 ரூபாய்; உளுத்தம் பருப்பு 2011 ஜூன் மாதத்திலே ஒரு கிலோ 56 ரூபாய், 2016 ஜூன் மாதத்திலே 167 ரூபாய், 198 சதவீதம் உயர்ந்திருக்கிறது; நல்லெண்ணெய் 2011 ஜூன் மாதத்திலே ஒரு லிட்டர் 84 ரூபாய்,*

*2016 ஜூன் மாதத்திலே ஒரு லிட்டர் 181 ரூபாய்; மிளகாய் 2011 ஜூன் மாதத்திலே ஒரு கிலோ 70 ரூபாய், 2016 ஜூன் மாதத்திலே ஒரு கிலோ 217 ரூபாய். இப்படி, பெரிய பட்டியல் இருக்கிறது, எல்லாவற்றையும் படிப்பதற்கு நேரமில்லை. அனைத்தையும் படிப்பதற்கு நான் விரும்பவில்லை. ஆக, விலைவாசியைக் கட்டுப்படுத்துகிற நிலையிலே இந்த அரசு செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விலைவாசி உயர்வைப் பற்றி ஒரு நீண்ட பட்டியலை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார். அதை இங்கே வாசித்தும் காட்டினார். மாண்புமிகு தமிழகத்தினுடைய தன்னிகரில்லா முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தில் விலைவாசியைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள், கட்டுக்குள்ளே வைத்திருக்கிறார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இதை யாரும் மறுக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் பதில் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எதிர்பார்க்கிற பதிலை நான் தருகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அமைதியாகக் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் ஒரு கோடியே 91 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசியை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 1–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எதிர்பார்த்த பதில் எல்லாம் என்னிடம் இருக்கிறது. உங்கள் கட்சியின் தலைவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோன்று கூச்சல் போடக்கூடாது. அவையிலே அடக்கமாக நடந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்)*

[திரு. இரா. காமராஜ்] [2016 ஜூன் 22

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்குமான உணவுப் பாதுகாப்பை வழங்கிக் கொண்டிருக்கும் ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற மாநிலங்களிலே எல்லாம் குறிப்பிட்ட பேருக்கு* Targeted Public Distribution System *தான் அமலில் இருக்கிறது. அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம்,* Universal Public Distribution System *இருக்கிற ஒரே மாநிலம் தமிழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம் ஒரு மாதத்திற்கு 3 இலட்சத்து 23 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியை விலையில்லாமல் வழங்குகிறோம். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட கேள்விக்குப் பதில் வரும். (குறுக்கீடுகள்)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்) கேட்ட கேள்விக்குப் பதில் வரும். பொறுமையாகக் கேட்டால் பதில் வரும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அதுமட்டுமல்லாமல், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு வழங்கப்படுகிறது. சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு ஒரு கிலோ 30 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஒரு கிலோ உளுத்தம் பருப்பு 30 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பாமாயில் ஒரு லிட்டர் 25 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் மானியம் வழங்கிக் கொண்டிருந்தது. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் சொல்கிறேன், உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதைக் கேளுங்கள். அதைக் கேட்காமல் நீங்கள் பேசக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி உயர்வைப் பற்றி இரண்டு வரிகளில் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) அதைக் கட்டுப்படுத்திக்*

*கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறோம். கடந்த முறை, உங்களுடைய தலைவர், அன்றைய முதலமைச்சர் இந்த அவையிலே சொன்ன பதிலையும் நான் சொல்ல இருக்கிறேன். (குறுக்கீடுகள்)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் விலைவாசியைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம் என்பதற்கு பல்வேறு உதாரணங்களைச் சொல்கிறேன். மத்திய அரசு சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கென வழங்கிக் கொண்டிருந்த மானியத்தை நிறுத்திவிட்டது. இவர்கள் கூட்டணி ஆட்சியிலே இருந்தபோது, 30–6–2011 அன்று, சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கிய மானியத்தை நிறுத்திவிட்டார்கள். அந்த மானியத்தையும் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) உணவு மானியம் வழங்குவதால் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும். உணவு மானியத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மானியத்திற்காக மட்டும். . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் பேச நேரம் அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு வேண்டுமென்ற அளவிற்கு நான் நேரத்தைத் தருகிறேன். (குறுக்கீடுகள்) பொறுமையாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பேச்சைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) சரி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள்.*

*பிற்பகல் 1–15*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை அதுவல்ல. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், “2011 ஆம் ஆண்டு நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். இப்போது இடைப்பட்ட காலத்தில், உங்கள் ஆட்சி* continue *ஆக நடந்து*

*கொண்டிருக்கிறது. நீங்கள் ஆட்சிக்கு வந்த நேரத்திலிருந்து விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது" என்று சில ஆதாரங்களைச் சொன்னார். விலைவாசி உயர்வை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கட்டுப்படுத்துவோம் என்று சொல்லலாம் அல்லது இல்லையென்று சொல்லலாம். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் ஆட்சியில் 'இந்தப் பிரகாரமாக' என்று ஆரம்பித்தால் எப்படி? (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், விலைவாசி உயர்வு பற்றி இங்கே பேசினார். அதற்கு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், அரசின் மூலமாக எவ்வாறெல்லாம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற பொருத்தமான பதிலை சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) பேசவிடுங்கள். எவ்வாறெல்லாம் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட்டு, கட்டுக்குள் இருக்கிறது என்பதனை விளக்கமாக, விரிவாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) பேச்சுக்குப் பேச்சு பதில் சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி? நான் பேசி முடித்த பிறகு பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அதைத்தான் சொல்கிறார். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்தீர்கள் என்று கேட்டார். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) அதற்குத்தான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். பொறுமையாகக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னது அவைக் குறிப்பில் பதிவாகியிருக்கின்றது; அதேபோன்று நாங்கள் கூறும் விளக்கமும் பதிவாக வேண்டுமல்லவா? அதுதானே நியாயம். எனவே, கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள், அவசரப்படாதீர்கள். இப்போதுதான் வந்திருக்கிறீர்கள். அதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள்?*

2016 ஜூன் 22] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இதே சட்டமன்றத்தில், நீங்கள் ஆளுகின்ற பொறுப்பில் இருந்தபோது, விலைவாசி உயர்வு பற்றி பிரச்சினை வந்தது, கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள், என்ன சொன்னாரென்றால். . . (குறுக்கீடு) கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடு) நாங்கள் பொருத்தமான பதிலை சொல்லிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் பொருத்தமில்லாமல் சொன்ன பதில் அவைக் குறிப்பில் பதிவாகியிருக்கிறது. அதைத்தான் சொல்ல வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு அவர் என்ன சொன்னார் என்பதை நான் படிக்கிறேன், நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள், “வருமானம் உயர்ந்திருக்கிறதா என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். விலைவாசி எல்லாக் காலத்திலும் ஏறிக்கொண்டிருக்கிறது. ஏதோ தி.மு.க., காங்கிரஸ் ஆட்சியில்தான் என்பது கிடையாது. கூலியாக இருந்தாலும், அரசு உத்தியோகமாக இருந்தாலும், எல்லோருக்கும் வருமானம் ஏறுகிறபோது, விலைவாசி ஏறுவது என்பது இயற்கையாகத்தான் இருக்கிறது” என்று கூறினார். விலைவாசி உயர்வு பற்றிய பிரச்சினைக்கு. . . (குறுக்கீடு) அதாவது, அவர், விலைவாசியை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று சொல்லவில்லை. நீங்கள் ஆட்சியிலிருந்தபோது விலைவாசி உயர்வை எப்படிக் கட்டுப்படுத்தினீர்கள், அதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று சொல்லவில்லை. ஆனால், அதற்குக் காரண, காரியங்களைத்தான் அவர் தேடிக் கொண்டிருந்தார் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பால் பிரச்சினையைப் பற்றி இங்கே பேசியபோது, பால் உற்பத்தியாளர்கள் அவரை சந்தித்ததாகவும், அவர்கள் உற்பத்தி செய்கின்ற பாலை முழுவதுமாக அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்ததாகவும் இங்கே தெரிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, என்னென்ன கொள்கைகளை வகுத்து, பால் உற்பத்தியை உயர்த்திக் கொண்டிருக்கிறது என்பதை விளக்கமாகச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். தற்போது 31 இலட்சம் லிட்டராக பால் உற்பத்தி உயர்ந்திருக்கிறது. இந்தளவுக்கு பால் உற்பத்தியைப் பெருக்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் நாட்டிலே வெண்மைப் புரட்சியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஆட்சியிலிருந்தபோது 21 இலட்சம் லிட்டராகத்தான் பால் உற்பத்தி இருந்தது. மாண்புமிகு

அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் பால் உற்பத்தி 31 இலட்சம் லிட்டராக தற்போது உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். கடந்த ஐந்தாண்டு காலத்தில் 231 கோடி ரூபாய் செலவில் 60 ஆயிரம் பயனாளிகளுக்கு... (குறுக்கீடு) நீங்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தால் எப்படி? 60 ஆயிரம் விலையில்லா கறவைப் பசுக்களை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஏன் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டார்கள், வெண்மைப் புரட்சி எதற்காக உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான காரணத்தை நான் சொல்கிறேன்; கேளுங்கள். 927 கோடி ரூபாய் செலவில் 7 இலட்சம் பெண்களுக்கு 28 இலட்சம் வெள்ளாடுகளும், செம்மறியாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவிக்கும்போது என்ன சொன்னார்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்கள், 2011 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை அறிவிக்கும்போது, “வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் ஏழையெளிய மக்களின் குடும்பப் பொருளாதார நிலை உயர்வதற்காகத்தான் இந்த விலையில்லா கறவை பசு மாடுகளையும், 4 வெள்ளாடுகளையும் தருகிறோம்” என்று சொன்னார்கள். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். நான் பேசுவதை கொஞ்சம் பொறுமையாகக் கேட்டால், அதற்கான விளக்கம் புரியும்.

பிற்பகல் 1–20

மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்ட 60,000 விலையில்லா பசுக்கள், 70,000 கன்றுக் குட்டிகளை ஈன்றிருக்கின்றன. (குறுக்கீடுகள்) எவ்வளவு? 70,000 கன்றுக் குட்டிகளை ஈன்றிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம் அந்த ஏழையெளிய மக்களுடைய குடும்பப் பொருளாதாரம் உயர்த்தப்பட்டிருக்கிறதா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) 7 இலட்சம் பெண்களுக்கு வழங்கப்பட்ட 28 இலட்சம் வெள்ளாடுகள், எவ்வளவு வெள்ளாட்டுக் குட்டிகளை ஈன்றிருக்கின்றன என்று தெரியுமா? (குறுக்கீடுகள்) 42 இலட்சம் குட்டிகளை அவை ஈன்றிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்பட்ட வெள்ளாடுகளைப் பெற்ற ஏழைக் குடும்பத்தினுடைய பொருளாதார நிலை உயர்த்தப்பட்டிருக்கிறதா, இல்லையா? (குறுக்கீடுகள்) சரி, விடுங்கள்.

2016 ஜூன் 22] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களிலிருந்து, இணையத்திலிருந்து சில வரைமுறைகளை... (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, உட்காருங்கள். நான் பேசி முடித்த பிறகு, இதில் தவறிருந்தால், நீங்கள் சுட்டிக்காட்டுங்கள். (குறுக்கீடுகள்) கிராமங்களில் இருக்கின்ற கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கும், இணையங்களுக்கும் வியாபாரிகள் பாலை கொடுக்கும்போது அவர்களால் எவ்வளவு பாலை* handle *செய்ய முடியுமோ, அதைத்தான் அவர்கள் கொள்முதல் செய்ய முடியும். எல்லா சங்கங்களுக்கும் 400 லிட்டர், 500 லிட்டர், 1,000 லிட்டர் என்ற அளவில்தான் பாலை அனுப்ப வேண்டும். சில வியாபாரிகள்* Excess*–ஆகக் கொடுக்கும்போது, அதை வாங்க முடியாத சூழ்நிலை ஏற்படும். அதைத்தான் இன்றைக்கு பெரிய பூதாகாரப் பிரச்சினையாகச் சொன்னீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட பால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளைத்தான் காப்பாற்ற முடியுமே தவிர, பால் வியாபாரிகளைக் காப்பாற்ற முடியாது என்று விளக்கமாகச் சொன்னார்கள் என்பதனை இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட்டுறவுக் கடைக்குப் போயிருக்கிறார். (குறுக்கீடுகள்) பதில் சொல்ல வேண்டியது, நான். (குறுக்கீடுகள்) காமதேனு கடைக்குப் போய் வாங்கியிருக்கிறார். (குறுக்கீடுகள்) நான் பதில் சொல்ல வேண்டாமா? (குறுக்கீடுகள்) நான் பதில் சொல்லக் கூடாது என்றால் எப்படி? (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடிக்கட்டும்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி உயர்கிறபொழுது, அதைக் கட்டுப்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் விலைக் கட்டுப்பாட்டு நிதியத்தை அமைத்து, எந்தப் பொருட்களுக்கெல்லாம் விலையேறுகிறதோ, அந்தப் பொருட்கள் எல்லாம் எங்கே விளைகின்றனவோ, அங்கிருந்து வாங்கி, கூட்டுறவு*

[திரு. இரா. காமராஜ்] [2016 ஜூன் 22

*அங்காடிகள் மற்றும் அமுதம் சிறப்பங்காடிகள்மூலம் விற்பதற்கு உத்தரவிட்டார்கள். அதனடிப்படையிலே, மிளகாய் விலை உயர்ந்தபொழுது சாத்தூராக இருந்தாலும், இராமநாதபுரமாக இருந்தாலும் அங்கிருந்து மிளகாயை வாங்கி, கூட்டுறவு அங்காடிகள்மூலம் விற்கப்பட்டதன் காரணமாக மிளகாய் விலை இறங்கியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *புளி விலை உயர்கிறபொழுது தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்து, எல்லா கூட்டுறவு அங்காடிகளிலும் விற்பனை செய்ததன்மூலம் அதன் விலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் மொத்தமாக 5,000 மெட்ரிக் டன் பருப்பினைத்தான் கொள்முதல் செய்தது. தேசிய அளவிலே பருப்பு விலை உயர்ந்திருக்கிறது. 5,000 மெட்ரிக் டன் கொள்முதல் செய்ததில், 700 மெட்ரிக் டன் பருப்பை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திற்குக் கேட்டுப் பெற்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாக் கடைகளிலும் இன்றைக்கு துவரம் பருப்பு கிலோ ரூ.110/—க்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்பேரில் விற்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியின் அடிப்படையிலே, 2,023 மெட்ரிக் டன் துவரம் பருப்பும், 1,000 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பும் மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்டு, தமிழகத்தின் அனைத்து அங்காடிகள், சிறப்பங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

*அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்மூலம் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நியாய விலையில் காய்கறிகளை வழங்க உத்தரவிட்டதன் காரணமாக, குறைந்த விலையில் காய்கறிகள் கிடைக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அம்மா உணவகங்கள், அம்மா மருந்தகங்கள், அம்மா குடிநீர், அம்மா சிமென்ட், அம்மா உப்பு போன்ற திட்டங்கள்மூலம் ஊட்டி*

*டீ போன்ற உணவுப் பொருட்களை (குறுக்கீடுகள்) கூட்டுறவு அங்காடிகளில் விற்பதன்மூலமும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விலைவாசியைக் கட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 1–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) எதிர்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். சொல்வதைக் கேளுங்கள், நீங்கள் உட்காருங்கள். எதிர்கட்சித் தலைவர் விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் இல்லையென்ற பதிலை அவருக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அதை முழுமையாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். சொல்வதைக் கேளுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். அதாவது, எதிர்க்கட்சித் தலைவர் பட்டியலிட்டார். (குறுக்கீடுகள்) பட்டியலிட்டபோது, ஆளுங்கட்சியினர் அமைதியாக அதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அதற்குப் பின்பு அதற்குப் பொறுப்பான மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். இன்னின்ன நடவடிக்கைகளால் விலைவாசி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று அவர் முழுமையாகப் பதிலைச் சொல்வதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அவர் முழுமையாகப் பதில் சொன்னதற்குப் பின்னால் நீங்கள் பேசலாம். நீங்கள் பேசுவதை நான் தடுக்கவில்லையே! (குறுக்கீடு) அப்படி இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர், பதிலைச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், பதிலைச் சொல்லி முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர், சுருக்கமாகப் பதிலைச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், சுருக்கமாகப் பதிலைச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் உணவுக்காக மானியம் ஒதுக்கியது மட்டும், 24,600 கோடி ரூபாய். கடந்த தி.மு.க ஆட்சிக் காலத்திலே ஒதுக்கியது 14,550 கோடி ரூபாய். 10,050 கோடி ரூபாயை அதிகமாக*

ஒதுக்கிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், நாங்கள் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம், தொடர்ந்து எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று இன்றைக்கு நாங்கள் பதில் சொல்கிறோம். அன்றைய முதலமைச்சராக இருந்த உங்களுடைய கட்சித் தலைவர் அவர்களிடம் விலைவாசி ஏற்றத்தைப் பற்றிக் கேட்டபொழுது அவர் கூறிய பதிலை சுருக்கமாகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) 'விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று சொல்லும் அதே நேரத்தில், பணப்புழக்கம் அதிகமாகி மக்களின் வாங்குகிற சக்தி அதிகரித்திருக்கிறது, அதை மனதில் வைத்துக்கொண்டுதான் விலைவாசி உயர்வைக் கணக்கிட வேண்டும்' என்று அன்றைக்கு சொல்லியிருக்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் உரையை முடிக்கவிருக்கிறார். இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எதிர்கட்சித் தலைவர், பேசுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் நீங்கள் பேசி முடித்துவிட்டீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 1–30

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் பக்கம் 35–ல் SC, ST கல்வி உதவித் தொகையைப் பற்றி ஒரு விஷயத்தை நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதாவது, தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகைக்காக மத்திய அரசிடமிருந்து கிடைக்கப் பெற வேண்டிய 1,167 கோடி ரூபாய் நிதியுதவி நிலுவையில் இருப்பதால், அதனை விரைவில் தமிழ்நாட்டிற்கு விடுவிக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம் என்ற ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறீர்கள். இதையொட்டி நான் சொல்ல விரும்புவது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு மத்திய

அரசு, தமிழக அரசிற்கு மொத்தமாக 2,551.38 கோடி ரூபாய் வழங்க வேண்டும். அதில், மத்திய அரசு 1,314.24 கோடி ரூபாய் வழங்கிவிட்டதாகவும், மீதமுள்ள 1,167.69 கோடி ரூபாய் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிகிறது. ஆனால், இதுவரை மத்திய அரசு வழங்கியுள்ள 1,314.24 கோடி ரூபாயைப் பயன்படுத்தியதற்கான பயன்பாட்டுச் சான்றிதழை, Utilisation Certificate–ஐ மத்திய அரசிற்கு அனுப்பியிருக்க வேண்டும். ஆனால், எனக்குக் கிடைத்த தகவலின்படி, இதுவரை தமிழக அரசு பயன்பாட்டுச் சான்றிதழை Utilisation Certificate–ஐ அனுப்பவில்லை. பயன்பாட்டுச் சான்றிதழை அனுப்பினால், மத்திய அரசு உடனடியாக இத்தொகையை தமிழக அரசிற்கு வழங்கும். இது தொடர்பாக, 15–6–2016 அன்று மத்திய அரசே, தமிழக அரசிற்கு நினைவூட்டுக் கடிதம்கூட அனுப்பியிருக்கிறது என்பதையும் நான் தங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையைப் பொறுத்தவரைக்கும், தமிழகத்தை முன்னடத்திச் செல்ல வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9, 10 ஆகிய தேதிகளில் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் நிறைவுரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2.42 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்க்கும் 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன. 4 இலட்சத்து 70 ஆயிரத்து 65 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும், தொழில் தொடங்க 30 நாட்களில் அனுமதி கொடுக்கப்படும் என்று முதலமைச்சரே அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி இதுவரை தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் எத்தனை, எவ்வளவு பேருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது, போடப்பட்டிருக்கக்கூடிய 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் நிலை என்ன என்பது குறித்த விவரங்களை தொழில் துறை Website–ல் பதிவேற்றம் செய்திட வேண்டும். (குறுக்கீடு) நான் பதிவேற்றம் செய்திட வேண்டும் என்றுதான் கேட்கிறேனே தவிர, குறையாகச் சொல்லவில்லை. எவ்வளவு என்று எண்ணிக்கை கேட்டு, website–ல் பதிவு செய்யுங்கள் என்றுதான் நான் கேட்கிறேன், வேறு ஒன்றுமில்லை. தயவுசெய்து குறுக்கிட வேண்டாம். (குறுக்கீடுகள்) மன்னிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் உரையை முடித்து விடுகிறேன். நான் தவறாக, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. முதலமைச்சர் சொன்னதை நான் நினைவுபடுத்தி, அதன் நிலை என்ன என்ற கேள்வியைத்தான்

கேட்கிறேன். அதை website–ல் பதிவு செய்து விட்டால் கேள்வியே கேட்க வேண்டிய அவசியம் இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுருக்கமாகப் பதில் சொல்லி விடட்டும். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், சுருக்கமாகப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2015 செப்டம்பர் மாதம் 9, 10 ஆகிய இரண்டு தினங்களில் உலக தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிக்காட்டுதலின்பேரில், உலக முதலீட்டாளர்கள் சந்திப்பில் கையெழுத்திடப்பட்ட 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 60 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் முன்னேற்றத்தில் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் 29–1–2016 அன்று 14 திட்டங்களுக்குண்டான 7 நிறுவனங்களை முழுமையாகத் திறந்து வைத்து, 7 நிறுவனங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஒட்டுமொத்தமாக 48,145 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியதில், ஒட்டுமொத்த மதிப்பீட்டுத் தொகை 23,257 கோடி ரூபாய் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், 60 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் முன்னேற்றத்தில் உள்ளன. 24 திட்டங்கள் நிலம் தேர்வு செய்தல், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல், தொழில்நுட்பப் பணியாளர்கள் தேர்வு செய்தல் போன்ற நிலைகளில் உள்ளன. முன்னேற்றத்தில் உள்ள அனைத்துத் திட்டங்களுக்கும் தேவையான அனுமதி மற்றும் வழிகாட்டுதல் வழங்கப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் செயலாக்கத்திற்குக் கொண்டு வர மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசால் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த முயற்சியால் தமிழ்நாடு அகில இந்திய அளவில் தொழில் துறையில் முதன்மை மாநிலமாகவும், தெற்காசியாவிலுள்ள தொழில் முதலீட்டாளர்களுக்கான முதல் 3 இடங்களில் ஒன்றாகவும் இருக்கின்றது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்ட அனைத்துத் தொழிற்சாலைகளையும்

2016 ஜூன் 22] [திரு. எம்.சி. சம்பத்]

உடனடியாக விரைந்து திறப்பதற்கான வழிகாட்டுதலினை இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழி நடத்திச் செல்கிறார்கள். வெகு விரைவிலே இந்தத் தொழிற்சாலைகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

பிற்பகல் 1–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Website–ல் இதையெல்லாம் பதிவு செய்திருந்தால் இந்தக் கேள்வியை நான் கேட்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. இங்கே குறுக்கிட்டுப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயமும் உங்களுக்கு வந்திருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தினுடைய தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையில் திறக்கப்பட வேண்டிய தொழிற்சாலைகள் என்ன ஆயிற்று என்பது குறித்த வெள்ளை அறிக்கையை நீங்கள் வெளியிட்டு, அதை அப்படியே தொழில் துறை website–லும் பதிவு செய்ய வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளாக எடுத்து வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) பதில் சொல்கிறார், கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டவாறு வெள்ளை அறிக்கை தேவையில்லை; வெகு விரைவிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, புரிந்துணர்வு ஒப்பந்தங்களை தொடர்ந்து நிறைவேற்றுவதற்குண்டான வழிவகைகள் செய்யப்படும் என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதுமட்டுமல்லாமல், இந்த ஆட்சி தொடர் ஆட்சி; 32 ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் இரண்டாவது கட்டமாக, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

*ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறார்கள். இதில் எந்தத் தொய்வும் இருக்காது. தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதற்குண்டான காரியங்கள் எந்தவிதத் தொய்வும் இல்லாமல் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை வளர்ச்சிக்கு மிக முக்கியமானது மின் திட்டங்கள். உடன்குடி மின் திட்டத்தை நிறைவேற்றிட முன்வர வேண்டும். சென்ற முறை அறிவித்த புதிய மின் திட்டங்களை இந்த 5 வருடங்களிலே உடனடியாக நிறைவேற்றிட முன்வர வேண்டும். நிச்சயமாக புதிய மின் திட்டங்கள்தான் புதிய தொழில் வளர்ச்சிக்கு துணை நிற்கக்கூடிய தூண்களாக அமைந்திட முடியும். அதேநேரத்தில் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற மின் வாரியத்தைச் சீரமைக்க போர்க்கால அடிப்படையிலான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த வேண்டும். மின் கொள்முதல் செய்து கொண்டே, மின் தேவைகளில் தன்னிறைவு பெற்றுவிட்டோம் என்று கூறி நாம் பெருமைப்பட முடியாது. மின் உற்பத்திமூலம் மின் தேவையில் தன்னிறைவு என்பதுதான் பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே அமைந்திட முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அது தொழில் வளர்ச்சிக்கும் கை கொடுக்கும். முதலீட்டாளர்களுக்கு முன்மாதிரி மாநிலமாக தமிழகம் விளங்கிட முடியும்.*

*அதைப்போல், அமைதி, வளம், வளர்ச்சி ஆகியவை இந்த அரசினுடைய முழக்கமாக இருக்கலாம். ஆனால், அண்மைக்காலமாக அடுத்தடுத்து நடக்கக்கூடிய கொலைகள், கொள்ளைகள், கூலிப்படையினுடைய அட்டகாசம் ஒழிக்கப்பட்டாக வேண்டும். கூலிப்படைகளை ஒழிக்க மாநில அளவிலே* Organised Crime Unit *இருக்கிறது. அதற்கு, ஒரு* IG, SP *மாவட்ட அளவிலே* Inspectors *இருக்கிறார்கள். இருந்தாலும், கூலிப்படையினுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, மக்கள் பாதுகாப்பாக இருக்க அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்தாக வேண்டும். அப்பொழுதுதான் அமைதி, வளம், வளர்ச்சி. . . (குறுக்கீடுகள்)*

2016 ஜூன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் சுபிட்சமாகத்தான் இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தையைச் சொல்லியது தவறு இல்லையா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மக்களுக்கு தகுந்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு எதிர்க்கட்சித் தலைவரே சாட்சி. ஒவ்வொரு நாளும் அவர் நடந்து போனார், டீ குடித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் மதுரைக்கு 5 வருடம் வராதவர். (குறுக்கீடுகள்) சும்மா ஏதாவது பேசக்கூடாது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே பொதுமக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பாதுகாப்பில் எந்தவிதக் குறைபாடும் இல்லை. சட்டம்—ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது. அச்சமில்லாமல் மக்கள் வாழ்கிறார்கள். அச்சத்தோடு மக்கள் வாழ்கிறார்கள் என்று சொன்னால் எப்படி? அதையெல்லாம் பதிவு பண்ணக் கூடாது. (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 1–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்போது எதிர்க்கட்சித் தலைவர் கேள்விகளைக் கேட்கின்றார். (குறுக்கீடுகள்) இருங்கள். சில கேள்விகளைக் கேட்கின்றார். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும். . . (குறுக்கீடு) சட்டம்—ஒழுங்கு பிரச்சினை என்று இந்த மன்றத்தில் பதிவு செய்து பொத்தாம் பொதுவாகப் பேசக்கூடாது. ஏதாவது ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைச் சொல்லி, அந்தச் சம்பவம் நடைபெற்றது, இதுவரை புலன் விசாரணை நடைபெறவில்லை. . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்லி முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு நிமிடம் இருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர், பேசி முடிக்கட்டும்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டிலே ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே சட்டம்–ஒழுங்கு முழுவதுமாகக் காப்பாற்றப்பட்டு, இன்றைக்கு தமிழகம் பாதுகாப்பாக மிகவும் அமைதியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) கடந்த ஆட்சியிலே எவ்வளவு நில அபகரிப்பு நடந்தது? (குறுக்கீடுகள்) தினகரன் பத்திரிகை அலுவலகம் எரிக்கப்பட்டது. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் பேச விடுங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மதுரை தினகரன் பத்திரிகை அலுவலகம் எரிக்கப்பட்டு, 3 அப்பாவி ஊழியர்கள் கொல்லப்பட்டார்களே, அதுதான் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்பதற்கு அடையாளம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சிக் கொறடா, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி அவர்களே, நான் நிற்கிறேன், நீங்கள் கொஞ்ச நேரம் உட்காருங்கள். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார். பேசுவதற்கு நேரம் இருக்கிறது. நீங்கள் கேட்பவற்றிற்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதற்கும், அவர்களுக்கு உரிமையிருக்கிறது. எப்படி குறையைச் சொல்வதற்கு உங்களுக்கு உரிமையிருக்கிறதோ, அதேபோன்று ஆளுங்கட்சியிலே மாண்புமிகு அமைச்சர்களுக்கும் அதற்குரிய பதிலைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இதற்கு மத்தியில், மாண்புமிகு அமைச்சர்கள் பேசும்போது எதிர்க்கட்சி பக்கத்திலேயிருந்து சப்தம் போடுவதும், ஊளையிடுவதுமாக அவைக்கு ஒவ்வாத பணிகளைத் தொடர்ந்து செய்வதால், என்ன பேசுகிறார்கள், எப்படிப் பேசுகிறார்கள் என்ற விவரமே எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் கட்டுப்படுத்துங்கள். எதிர்க்கட்சித் தலைவருக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம்*

2016 ஜூன் 22] [பேரவைத் தலைவர்]

இருங்கள். வாய்ப்புத் தருகிறேன். அதாவது எதிர்க்கட்சித் தலைவருக்குப் பேசுவதற்கு இன்னும் நேரம் நிறைய இருக்கிறது. நேரத்தை நீட்டித்துத் தருவதற்கும் மாற்றுக் கருத்து ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவதையும் நீங்கள் பொறுமையாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதை எப்படி ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் பொறுமையாகக் கேட்டுக்கொள்கிறார்களோ, அதேமாதிரி ஆளுங்கட்சியிலே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்கள் சொல்கின்ற பதிலையும் பொறுமையாகக் கேட்டு, பதிலைச் சொல்ல வேண்டும். விவாதம் நடத்த வேண்டுமேயொழிய இப்படி அவர்கள் பேசுகின்றபோது ஊளையிடுவதும், அவர்கள் பேசும்போது கூச்சலிடுவதும் சரியல்ல. (குறுக்கீடுகள்) என்னுடைய காதுக்கே கேட்கவில்லை. (குறுக்கீடுகள்) இது வழக்கம் இல்லை. இப்படியெல்லாம் பேசுவது வழக்கமில்லை. இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக இருங்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்துத்தான் அவரை அழைத்திருக்கிறேன். அவர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் இடையிலே, இடையிலே இப்படிச் செய்வதால் அவையினுடைய நேரம் வீணாகப் போகிறது. மாண்புமிகு அமைச்சர்களும் சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டுமென்று நானும் கேட்டிருக்கிறேன். சுருக்கமாகப் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) அமருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். . . (குறுக்கீடுகள்) நான் பேசி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைப் பேசுவதற்கு அழைத்துவிட்டேன். (குறுக்கீடு)

*பிற்பகல் 1–45*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையை அமைதியாக நடத்த வேண்டும் என்பதில் தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு மிக்க நன்றி. நாங்கள் உங்களோடு ஒத்துழைக்கத் தயராக இருக்கிறோம். காரணம், காலையிலிருந்து நீங்கள் எவ்வளவு பாடுபடுகிறீர்கள் என்பதை நான் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். அதேநேரத்தில் இரண்டு பக்கங்களிலிருந்தும் சப்தங்களை எழுப்புகிறார்கள். நீங்கள் ஏதோ இரண்டு பக்கங்களிலும் ஊளையிடுகிறார்கள் என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இந்தப் பக்கத்திலிருந்துதான் சத்தம் வந்தது. (குறுக்கீடுகள்) ஊளையிட்டது இந்தப் பக்கத்திலிருந்துதான். (குறுக்கீடுகள்) எதிர்கட்சித் துணைத் தலைவர், இந்தப் பக்கத்திலிருந்து வந்த சத்தத்தை நீங்கள் கேட்டீர்களா? (குறுக்கீடுகள்) நான் கேட்டுவிட்டுத்தான் சொல்கிறேன் (குறுக்கீடுகள்) அவைத்தலைவர் கேட்காமல் ஒன்றும் சொல்லவில்லை இந்த பக்கத்திலிருந்துதான் அவைக்கு ஒவ்வாத சத்தம் வருகிறது. இப்படி வந்தால் எப்படி விவாதம் நடக்கும்? கண்ணியமான முறையில் விவாதம் நடக்கட்டும். (குறுக்கீடு) நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன கருத்திற்கு மாற்றுக் கருத்து சொல்ல விரும்பவில்லை. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதன் முறையாகப் பேசுகிறார். அதிலே சொல்கிறபோதுகூட, குற்றம் சுமத்துவது என்பது வேறு. ஆனால், அவர் கூலிப்படை இருக்கிறது, இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று சொல்கிறார். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது. . . (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது யாரும் குறுக்கிட்டுப் பேசக் கூடாது என்ற கருத்தினை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கே அடிக்கடி பதிய வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த கால சம்பவம் எதையும் அவர்கள் பார்த்தது இல்லையென்று நான் நினைக்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, இந்தச் சட்டமன்றத்திற்கு தன்னந்தனியாக வந்தார்கள். நாங்கள் 60 பேர் இருந்தோம். எங்களையெல்லாம் நீங்கள் வெளியேற்றினீர்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக வந்து. . . (குறுக்கீடுகள்) இல்லை, சொல்வதைக் கேளுங்கள். தன்னந்தனியாக வந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணித்தரமான கருத்துகளை இங்கே பதிய வைத்தபோது சுமார் 65 முறைகளுக்கு மேல் அமைச்சர்கள் எழுந்து குறுக்கிட்டார்கள்*

2016 ஜூன் 22] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

என்பதனை மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்களுக்கு நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் சில குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது அதை மறுக்கின்ற உரிமை மாண்புமிகு அமைச்சர்களுக்கு உண்டு. அதை நீங்கள் பொறுமையாகத்தான் இருந்து கேட்க வேண்டும். நாங்கள் எப்படி உங்களுடைய குற்றச்சாட்டுகளைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோமோ, அதைப்போல நீங்களும் எங்களுடைய பதிலை பொறுமையாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள். திரு. சக்கரபாணி, நான் இந்தப் பக்கம் பதில் சொல்வதற்கு அனுமதி கொடுக்கிறேன். அதேபோல எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதற்கும் வாய்ப்புத் தருகிறேன், இடையில் உங்களுடைய துணைத் தலைவர் அவர்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன், அது இல்லாமல், எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் கேட்கும்போதும் நான் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். இவ்வளவு வாய்ப்புக் கொடுத்தும் உங்களுடைய உறுப்பினர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்தால் நான் எப்படி அவையை நடத்துவது? நான்தான் நேரம் தருகிறேன் என்று சொல்கிறேனே! நேரம் தருகிறேன் என்று சொல்லும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு நீங்கள் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். நீங்கள் இந்த மாதிரி குறுக்கிடக் கூடாது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்றால், எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது யாருமே குறுக்கிடக் கூடாது என்று நினைக்கிறீர்கள். அது முறையல்ல. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டது மாதிரி, ஏற்கெனவே இதே அவையிலே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேசுகிறபோது, 65 முறை அப்போதிருந்த அமைச்சர்கள் குறுக்கீடு செய்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) ஆகவே, இது ஒன்றும் புதிய முறையல்ல. ஆகவே, எல்லோருக்கும் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சிக்கும் வாய்ப்புத் தருகிறேன். எதிர்க்கட்சிக்கும் வாய்ப்புத் தருகிறேன். முழுமையாக விவாதத்தை நடத்துங்கள். அதைத்தான் நான் சொல்கிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன்னார். எதற்காக நான் பதில் சொல்கிறேன் என்று சொன்னால், ஏதோ மின்வெட்டு

இருப்பதைப்போல, அதனால் தொழில் வராததைப்போல ஒரு கருத்து இங்கே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன் உண்மை நிலையைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் நான் இப்போது பதில் சொல்கின்றேன்.

பிற்பகல் 1–50

தமிழகத்தினுடைய தேவை இப்போது 13,500 மெகா வாட்டிலிருந்து 14,000 மெகா வாட் மட்டும்தான். ஆனால், இப்போது உற்பத்தித் திறன் 17,976 மெகா வாட்டாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மின் மிகை மாநிலமாக இருக்கின்ற காரணத்தினால், எந்தத் தொழிற்சாலைக்கும், தொடங்கப்பட்டவுடன்... (குறுக்கீடுகள்) காற்றாலை இல்லை, காற்றாலை இல்லை. (குறுக்கீடுகள்) இப்படிச் சொன்னால் எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுமையாக இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலை இல்லாமல்தான் நான் சொல்கின்றேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே தொழில் தொடங்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். தொழில் தொடங்குவதற்குண்டான மின்சாரம் கையிருப்பில் இருக்கிறது என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை என்ற காரணத்தினால்தான், 900 மெகா வாட் மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்குக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்று, தொழில் துறையைப் பற்றிப் பேசுகின்றபோது, நீங்கள் வேகமாகச் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னீர்கள். தொழில் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுவது பற்றி உங்களுக்கே தெரியும். நீங்கள் அந்தத் துறையின் அமைச்சராக இருந்திருக்கின்றீர்கள். குறைந்தபட்சம் மூன்றாண்டு காலத்திலிருந்து ஏழாண்டு காலம் வரை அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கான காலம் இருக்கின்றது. அந்தக் காலகட்டத்திற்குள்தான் அவர்கள் கொண்டு வருவார்கள். அதற்குண்டான நடவடிக்கையையும்

2016 ஜூன் 22] [திரு. பி. தங்கமணி]

*மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்—ஒழுங்கைப் பற்றி. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் உட்காருங்கள். நீங்கள் மத்திய அரசாங்கத்திற்கு* utilisation certificate *அனுப்பவில்லை என்று சொன்னதற்கு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்.*

***மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** *மாண்புமிகு அம்மா இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** *கல்வி உதவித் தொகைக்கான. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் உட்காருங்கள், பின்னர் பார்த்துக்கொள்ளலாம். மாண்புமிகு அமைச்சர், உட்காருங்கள். கடைசியாகப் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர், நீங்கள் உட்காருங்கள், அப்புறம் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் உரையாற்றுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, கூலிப் படையினரால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் பற்றி சொல்லி, அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தமிழகத்தில் அதுபோன்ற*

*சம்பவம் கிடையாது, அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்று சொன்னார்; அப்படி இருந்தால் மகிழ்ச்சி. நான் ஆதாரங்களோடு சொல்ல வேண்டுமென்ற ஒரு கருத்தும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதாரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னால், பத்திரிகைகளிலே வந்த செய்திகளெல்லாம் ஆதாரமா என்றவொரு கேள்வியையும் நீங்கள் கேட்பீர்கள்.* ** *அவைத் தலைவர் மூலமாக அவை முன்னவருக்கு வழங்கத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்) இதில் தவறிருந்தால் கேளுங்கள். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் தவறிருந்தால் ஏற்றுக்கொள்ளத் தயார்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் இருங்கள். ஒரேயொரு நிமிடம் இருங்கள். நீங்கள் அதை முன்பே என்னிடம் கொடுத்து, என்னிடமிருந்து அனுமதி வாங்கியிருந்தால், நீங்கள் பேசுவது சரி. ஆகவே, இதுகுறித்து நீங்கள் பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) இப்பொழுது கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை. இப்பொழுது கொடுத்திருக்கிறீர்கள். அதை பின்னர் பார்க்கலாம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். அதைப் படிப்பதற்கு இப்போது எனக்கு நேரமில்லை. அவையை நடத்த வேண்டும். (குறுக்கீடுகள்) முன்பே கொடுத்து, என்னிடம் அனுமதி வாங்கியிருக்க வேண்டும்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையையும், செம்பரம்பாக்கத்தையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு நிகழ்ந்த பெருந்துயரத்தை யாரும் மறக்க முடியாது. அப்படியொரு நிலை மீண்டும் ஒரு முறை சென்னை மாநகர மக்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான் எல்லோருக்கும் இருக்கக்கூடிய எண்ணம். 2015—ல் டிசம்பரில் நடந்ததைப் போன்றதொரு சம்பவத்தை சென்னை மக்கள் மீண்டும் சந்தித்துவிடக்கூடாது என்பதில் இந்த அரசு முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதை நினைவில் வைத்துக்கொண்டு சென்னை*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

*மாநகர வளர்ச்சிப் பணிகளை முடுக்கி விடுவதற்கு அதற்குரிய சிறப்பு நிதியை ஒதுக்கியிருந்தாலும், அந்தப் பணிகளையெல்லாம் உடனடியாக நிறைவேற்றுகிற முயற்சியிலே இந்த அரசு ஈடுபட வேண்டும். சென்னையைப் பொறுத்தவரையில், ஏன், எங்களைப் பொறுத்தவரையில், சென்னையிலிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் முழு அளவில் அதற்கு ஒத்துழைப்புத் தருவதற்கு தயாராக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

*பிற்பகல் 1–55*

*சென்னையை பற்றிச் சொல்கின்றபோது, இன்னொரு பிரச்சினை. இன்றுகூட ஊடகங்களில் ஒரு செய்தி பரவலாக வந்திருக்கிறது. தமிழ்நாடு சிறு, குறு தொழில் நிறுவனங்கள் கூட்டமைப்பின் சார்பில், அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். என்னவென்று கேட்டீர்களேயானால், சென்னையில் மழை வெள்ளம் ஏற்பட்டபோது, சிறு, குறு தொழில் நடத்துபவர்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டார்கள்; அப்படிப் பாதிக்கப்பட்டவர்களை எல்லோரும் போய் பார்த்து, ஆறுதல் சொல்லியிருக்கிறோம், அவர்களுக்கு உரிய நிவாரணப் பணிகளையும் செய்திருக்கிறோம், நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறோம்; அது ஒரு பக்கம். நான் அதைப்பற்றியெல்லாம் பேச விரும்பவில்லை. மத்தியிலிருந்து அமைச்சர்கள்கூட வந்து, அவர்களைப்போய் சந்தித்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டிருக்கிறார்கள். மத்திய அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு திரு. கல்ராஜ் மிஸ்ரா அவர்கள் சென்னையிலே 19–12–2015 அன்று சற்றொப்ப 60 சிறு மற்றும் குறு தொழிற்சங்க நிர்வாகிகளோடு கலந்துபேசி, அவர்களுடைய குறைகளையெல்லாம் கேட்டார்கள். அப்போது மத்திய அரசிடம் எடுத்து வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்னவென்று கேட்டீர்களேயானால், வங்கிகளிடமிருந்து வாங்கியிருக்கக்கூடிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குக் கால அவகாசம், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணம், நிபந்தனையின்றி ஐந்து இலட்சம் ரூபாய் கடன். அதற்கு மத்திய அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் என்னவென்று கேட்டால், நிவாரணத்தை மத்திய அரசு நேரடியாக வழங்க முடியாது, மாநில அரசுதான் வழங்க வேண்டும் என்பதாகும். மேலும், வங்கிகள் சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பரிசீலிக்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போய், இவ்வளவு நாட்களாகியும், இவ்வளவு மாதங்களாகியும், இதுவரை எந்தவொரு*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2016 ஜூன் 22

*நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால், மத்திய, மாநில அரசுகள் எந்தவொரு நிவாரணமும் கொடுக்காத நிலையில், உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் ஏறத்தாழ 25,000 சிறு, குறு தொழில் நிறுவனங்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. அதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) இருங்கள், அவர் சொன்னதற்குப் பதில் சொல்லட்டும்.*

***மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாவது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.*

*மழை வெள்ளத்தால் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகையில் வந்த செய்தியைப் படித்தார். (குறுக்கீடு) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மழையால் பாதிக்கப்பட்ட குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்காக, அவர்கள் வாழ்வு மலர்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒருசிலவற்றை மட்டும் நான் சொல்கிறேன். மழையால் பாதிக்கப்பட்ட குறு தொழில் நிறுவனங்களுக்கு இத்துறையின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டுவரும், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் நிதியுதவி அளிக்க உற்பத்தி, சேவை, வியாபாரம் சார்ந்த தொழில் துவங்குவதற்கு ரூபாய் 5 இலட்சம் வரை 25 விழுக்காடு மானியத்துடன் கடன் வழங்க அம்மா அவர்களுடைய அரசு உத்தரவிட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 5,000 குறு தொழில் நிறுவனங்களுக்கு சராசரி திட்ட மதிப்பீடாக 2 இலட்சம் ரூபாயை கணக்கில்கொண்டு, 25 விழுக்காடு மானியமாக ரூபாய் 25 கோடி நிதியுதவியுடன் புனரமைக்க இத்துறை, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முயற்சியால் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் 31.86 கோடி மானியத்துடன் 5,215 பயனாளிகளுக்கு கடன் வழங்க வங்கிகளால்*

2016 ஜூன் 22] [திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி]
ஒப்புதல் அளிக்கப்பட்டு, 3,466 நபர்களுக்கு ரூபாய் 20.78 கோடி மானியத்துடன் கடன் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு நிதி ஒதுக்கீடானது ஏற்கெனவே தொழில் புரிந்துவந்த குறு தொழில் முனைவோர்களுக்கானதால் பயனாளிகள் மேற்கொள்ள வேண்டிய ஒருவார கால தொழில் முனைவோர் பயிற்சியிலிருந்து விலக்கு அளிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிந்துரை செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல; வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தித் தொழில் நிறுவனங்கள் வங்கியிலிருந்து பெறும் மாற்றியமைக்கப்பட்ட காலக் கடன்களுக்கு உரிய வட்டியைச் செலுத்துவதில், 3 சதவிகித வட்டி மானியம் ஒரு வருடத்திற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசே வழங்கும் என்ற அறிவிப்பை அம்மா அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்; அதை நடைமுறைப்படுத்தியும் வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தித் தொழில் நிறுவனங்கள், புதிய வெள்ள நிவாரணக் கடன்கள் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட காலக் கடன்களுக்கு பிணையமாக வைக்கப்பட்ட ஆவணங்களைப் பதிவு செய்வதற்கான முத்திரைத் தாள் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விலக்கு அளித்திருக்கிறது.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனடிப்படையில் இதுவரை வெள்ளத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களிலிருந்து ரூபாய் 54.43 இலட்சம் மதிப்பிற்கான 156 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மேலும், வெள்ளம் பாதிக்கப்பட்ட நிறுவனங்களின் புனரமைப்புக்கான காலம் 30–6–2016 வரை நீடிக்கப்பட்டுள்ளதால், கூடுதல் விண்ணப்பங்களை குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தித் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெற மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் வங்கியாளர்கள் கூட்டத்தை நடத்த மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள்,

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல; 15,679 நிறுவனங்களுக்கு ரூபாய் 1,053.12 கோடிக்கு காலக் கடன்கள் மறு சீரமைப்பு செய்யப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்குக் கடன் தவணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. 58,682 நிறுவனங்களுக்கு ரூபாய் 837.46 கோடிக்கு புதிய கடன் வசதி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை வந்தாலும், வெள்ளம் வந்தாலும், சுனாமி வந்தாலும் தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாப்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகராக யாருமே இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு ஒரு சில எடுத்துக்காட்டுகளைச் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் கவனமாகக் கேட்க வேண்டும்.

வங்கிகளின் மூலமாகவும், அரசாங்கம் மூலமாகவும் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு எப்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள் என்பது தொழில் செய்கின்ற நிறுவனங்களுக்குத் தெரியும். ஒரு சில தொழில் நிறுவனங்கள் இவர்களிடத்திலே நேற்று மனு கொடுத்திருக்கிறார்கள். நேற்றைய தினமலர் பத்திரிகையில் 5 ஆம் பக்கத்தில் ஒரு கட்டம் போட்ட செய்தி வந்தது. அந்தச் செய்தியை வைத்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், தொழில்களைப் பாதுகாப்பதிலே முனைப்போடு செயலாற்றுகிறார் என்பதற்கு ஒரு சில விவரங்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகச் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், உரையை சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,599 நிறுவனங்களுக்கு ரூ.168.86 கோடிக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட நடைமுறை மூலதனக் கடனை, நடைமுறை மூலதன காலக் கடனாக மாற்றி வழங்க உத்தரவிட்ட

2016 ஜூன் 22] [திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி]
*தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*1,034 நிறுவனங்களுக்கு ரூபாய் 152.22 கோடிக்கு மாற்றியமைத்த நடைமுறை மூலதன காலக் கடனுக்குரிய முதல் மற்றும் வட்டி ஆகியவற்றை காலந்தாழ்த்தி திருப்பிச் செலுத்தும் நடைமுறைக்கு நடவடிக்கை எடுத்த தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,418 நிறுவனங்களுக்கு ரூ.106.24 கோடிக்கு மாற்றியமைக்கப்பட்ட நடைமுறை மூலதன காலக் கடனில் 50 விழுக்காடு அளவுக்குக் கூடுதலாக நடைமுறை மூலதனக் கடன் வழங்க உத்தரவிட்ட தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*7,214 நிறுவனங்களுக்கு அபராதம் மற்றும் காலங்கடந்த வட்டி ஆகியவற்றைச் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க உத்தரவிட்ட தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 35,060 நிறுவனங்களுக்கு ஏற்கெனவே கடன் வசதி இல்லாதபட்சத்தில், புதிய கடன் வசதி வழங்க ஆணையிட்ட தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*23,009 குறுந்தொழில் நிறுவனங்களுக்கு ஈடில்லா கடன் வழங்க உத்தரவிட்ட தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மேலும், காப்பீட்டு நிறுவனங்கள்மூலம் 6,666 நிறுவனங்களுக்கு ரூ.584.91 கோடிக்கு நிவாரணம் வழங்க உத்தரவிட்ட தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*சென்னை மாவட்டம் உட்பட 6 மாவட்டங்களில் மழை, வெள்ளம் சூழ்ந்த நேரத்திலே தொழில்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக நடவடிக்கை எடுத்து, தொழிலாளர்களையும், தொழில்களையும் பாதுகாத்த ஒப்பற்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து நான் கூற இருப்பது ** நீதிமன்றத்திலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். நான் இதைப்பற்றி பேச விரும்பவில்லை. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி முடித்த பிறகு பேசலாம் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்வார்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *அந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. நான் விவாதிக்க விரும்பவில்லை. இருந்தாலும் ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய ஒரு கருத்து, ** என்பதுதான் கோரிக்கை. இந்த மன்றத்தின் மூலமாக இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல ***

*பிற்பகல் 2–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** பற்றி இங்கே பேசினார். அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால், அதுபற்றி இங்கே விவாதிப்பது உகந்தது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எடுத்தவுடனேயே, ** என்று அவர் பேசியது, நான் பேசியது உட்பட அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். ஏதாவது சம்பவங்கள் வரம்பு மீறி அங்கே நடைபெற்றிருந்தால் அதைக் குறிப்பிட்டு ஆதாரத்தோடு சொன்னால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனுமதியில்லை. நீதிமன்றத்தில் இருக்கும் பொருள் குறித்து, நீங்கள் அவையில் பேச வேண்டாம். நீதிமன்றம் சம்பந்தப்பட்ட பொருள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர், அவை முன்னவர் பேசியது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2016 ஜூன் 22]

**திரு. மு.க. ஸ்டாலின்:** *அதனால்தான், நான் அந்தப் பிரச்சினைக்குள்ளேயே போகவில்லை. நீதிமன்றத்தில் இருக்கின்றது என்ற காரணத்தினால்தான் ** ககன்தீப் சிங் பேடி, ஐ.ஏ.எஸ்., அவர்கள்.... (குறுக்கீடு) நான் அந்தப் பிரச்சினைக்குள்ளேயே போகவில்லை. 17–9–2013 அன்று முதலமைச்சர் அவர்களிடத்தில் அந்த ஐ.ஏ.எஸ்., அதிகாரி அறிக்கையைக் கொடுத்திருக்கிறார். அந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்டபோது அன்றையதினமே முதலமைச்சர் என்ன சொன்னார்கள் என்றால், பெரும் கனிம குவாரிகள் குறித்து கொள்கை முடிவு எடுக்கப்படும் என்ற ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். இப்போது மீண்டும் ஆட்சிப் பொறுப்பையேற்றிருக்கின்ற முதலமைச்சர் அவர்களை நான் கேட்க விரும்புவது, பெரும் கனிம குவாரிகள். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரானைட் குவாரிகளை அரசே எடுத்து நடத்துகின்ற விதத்தில் புதியகார்னெட் கார்னைட் புதிய கொள்கையை தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆளுநர் உரையில் இடம் பெற்றிருக்கிறது. நான் அதை வைத்துக்கொண்டுதான் பேசுகின்றேன்.*

*மாநில அரசு எட்டாவது ஊதியக் குழுவை அமைத்து, மத்திய அரசின் ஏழாவது சம்பளக் கமிஷனின் பரிந்துரைகளை ஆய்வு செய்து, அதற்குரிய ஊதியப் பலன்களை வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*அரசு அலுவலகங்களில் உள்ள காலிப் பணியிடங்கள் எல்லாம் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். ஆசிரியர்கள் நியமனம் உள்ளிட்ட அனைத்து நியமனங்களிலும் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வருவது மிக முக்கியமானது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்கள் மாறுதல் மற்றும் கவுன்சிலிங் அடிப்படையில் செய்யும் மாறுதல்களிலும் வெளிப்படைத் தன்மை வேண்டும்.*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2016 ஜூன் 22

*குறிப்பாக, காவல் துறையில் இருக்கக்கூடிய காவலர்கள் கடைசி வரையிலும் காவலர்களாகவே இருக்கக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதைப் போக்குவதற்கு காவல் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பி, மக்கள்தொகைக்கேற்ப காவலர்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்திட வேண்டும். அதன் மூலமாக காவலர்களுக்கும், சப்–இன்ஸ்பெக்டர்களாக, இன்ஸ்பெக்டர்களாக பணிபுரியக்கூடிய வாய்ப்பு கிடைக்கும்.*

*அடுத்து, ஓய்வுபெற்ற போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணப் பலன்கள் பல்லாயிரம் கோடி ரூபாய்க்கு மேலே நிலுவையில் இருக்கிறது. எனவே, ஓய்வுபெற்ற போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு உடனடியாக அவர்களின் ஓய்வூதியப் பலனை வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுருக்கமாகப் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) நேற்று நீங்கள் கேட்ட கேள்விக்குத்தான் பதில் சொல்கிறார்.*

**மாண்புமிகு திரு. பா. பெஞ்சமின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்குத் திட்டம்–2023,* Vision *2023 இலக்கின்படி, தமிழகத்தை அனைத்து சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் முதன்மை பெற்ற மாநிலமாக மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகின்றார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால், 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை அனைத்து வகை ஆசிரியர் பணியிடங்களில் மொத்தம் 79,354 ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் நியமனத்திற்கென ஒதுக்கப்பட்ட 59,544 அனைத்து வகை ஆசிரியர் பணியிடங்களில், ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் 54,681 பணியிடங்கள் நிரப்பப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்,*

2016 ஜூன் 22] [பேரவைத் தலைவர்]
*கவுன்சிலிங் பற்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பணி மாற்றத்திலே வெளிப்படைத் தன்மை வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். அதாவது, 2003–ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கவுன்சிலிங் முறையைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த முறையைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கவுன்சிலிங் முறையில்தான், வெளிப்படைத் தன்மையோடு பணி மாறுதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும், இந்த வருட கவுன்சிலிங் முறைக்குத் தேவையான ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கூடிய விரைவிலே, கவுன்சிலிங் தொடங்க இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

*பிற்பகல் 2–10*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்* counselling *அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார், அதை நான் வரவேற்கின்றேன். ஆனால், எல்லா பள்ளிகளும் திறக்கப்பட்டு, அவரவர்கள் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள். ஆகையால், திட்டவட்டமாக எப்போது* counselling *ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது புதியதாக ஆட்சி அமைக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் புதிதாக பதவியேற்றிருக்கின்றார்கள். அந்த ஆய்வுக்கான கோப்பு தற்போது மாண்புமிகு முதலமைச்சரின் பார்வைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்குண்டான தேதியை கூடிய விரைவில் வெளியிட*

இருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து நான் குறிப்பிட விரும்புவது லோக் ஆயுக்தா. இது பற்றி ஆளுநர் உரையிலேகூட நீங்கள் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இது குறித்து இந்த அவையிலே ஒரு நீண்ட விவாதம் நடைபெற்றிருக்கின்றது. எனவே, அதிகமாக நான் அதைப்பற்றிப் பேசவில்லை, சுருக்கமாகவே அதை நான் சொல்ல விரும்புகின்றேன். தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் முதலமைச்சரையே விசாரிக்கக்கூடிய பொது ஊழியர் குற்ற நடவடிக்கை சட்டம், 1973–ல் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டம் 1977–ல் இரத்து செய்யப்பட்டது. ஆனால், இப்போது தமிழகமே எதிர்பார்ப்பது லோக் ஆயுக்தா அமைப்பைச; ஊடகங்களில் வந்த செய்தியைச் சொல்கிறேன். இதற்கு ஆதாரத்தை அவைத் தலைவரிடம் கொடுத்தீர்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தயவுசெய்து கேட்டுவிடக் கூடாது என்பதற்காக நான் சொல்கிறேன். இது யதார்த்தமாக நடக்கக்கூடிய ஒரு நிலை. ரூ.300 லஞ்சம் என்ற வார்த்தையைச் சொல்லக் கூடாது, இருந்தாலும் 300 ரூபாய் கமிஷன் கொடுக்க முடியாத காரணத்தினால், அண்மையிலே மதுரை அரசு மருத்துவமனையிலே ஓர் உயிரையே பறித்த ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது. அது எல்லா ஊடகங்களிலும் வந்திருக்கின்றது. (குறுக்கீடு) இந்தச் செய்திகள் எல்லாம் ஊடகங்களில் வந்திருக்கின்றனவா, இல்லையா?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊடகங்களில் அதுபோன்ற செய்தி வந்தது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவாக நடவடிக்கை எடுத்தது. அந்த நோயாளியினுடைய உயிர் பிரிந்ததற்கு அந்தச் சம்பவம் காரணம் அல்ல. மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில் பாண்டி என்ற ஒருவர் தற்காலிகமாக ஏற்கெனவே அங்கே பணிபுரிந்து வந்திருக்கின்றார்; பணியிலிருந்து நீக்கப்பட்டவர், அந்த*

2016 ஜூன் 22] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]
*நோயாளிடம் பணம் பெற்றதாக புகார் வந்ததன் விளைவாக அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து, ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்து, கல்லூரி முதல்வரின் புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர்* remand *செய்யப்பட்டிருக்கின்றார் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஒரு நாளைக்கு 5 இலட்சம் புறநோயாளிகள், 80 ஆயிரம் உள்நோயாளிகள், 2 ஆயிரம் பிரசவங்கள் என்று மிகச் சிறப்பாக, சேவை மனப்பான்மையோடு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மட்டும்தான் மருத்துவ சேவை செய்து வருகின்றது. எங்கேனும் இதுபோன்ற சிறு தவறுகள் ஏற்பட்டாலும் அதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே சட்டம் இயற்றியதற்குப் பிறகு லோக் ஆயுக்தா தமிழகத்தில் அமைக்கப்படும் என்று நம்முடைய ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது. ஆனால், நான் குறிப்பிட விரும்புவது, லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம், 2013 என்ன சொல்கின்றது? அச்சட்டத்தில் பிரிவு 63– லோக்பால் சட்டம், அமலுக்கு வந்த தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் ஒவ்வொரு மாநிலமும் லோக் ஆயுக்தா அமைக்க வேண்டும் என்று தெளிவாகக் கூறுகிறது.* "Every State shall establish a body to be known as the Lokayukta for the State, if not so established, constituted or appointed by a law made by the State Legislature, to deal with complaints relating to corruption against certain public functionaries, within a period of one year from the date of commencement of this Act. . ." *என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றது. எனவே, மத்திய அரசினுடைய திருத்தத்திற்காகக் காத்திருக்காமல் மற்ற மாநிலங்களில் இருப்பதைப்போல் லோக் ஆயுக்தா அமைப்பை அமைக்க வேண்டும். அதிலும் கவுன்சிலர் முதல் முதலமைச்சர் வரை அனைவரையும் விசாரிக்கக்கூடிய அதிகாரம் படைத்ததாக அந்த அமைப்பு இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2016 ஜூன் 22

*பிற்பகல் 2–15*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023. அதனுடைய முதல் பாகம் 22–3–2012 அன்று வெளியிடப்பட்டது. உதாரணமாக, 2023 ஆம் ஆண்டிற்குள் மின் துறையில் 4.50 இலட்சம் கோடி ரூபாய், போக்குவரத்துத் துறையில் 3.70 இலட்சம் கோடி ரூபாய், தொழில் மற்றும் வர்த்தகத் துறையில் 1.60 இலட்சம் கோடி ரூபாய், நகர்ப்புற கட்டமைப்புத் திட்டங்களுக்கு 2.75 இலட்சம் கோடி ரூபாய். இப்படி பல்வேறு துறைகளுக்கான முதலீடுகள் பெறப்படும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. வருடத்திற்கு 1.35 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு என்ற முறையில், இந்த 15 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு கொண்டு வரப்படும் என்று கூறப்பட்டது. இன்னும் சொல்லப்போனால். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *இன்னும் சொல்லப்போனால். . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) நான் வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாண்டியராஜன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்பு கொடுத்துதான் நீங்கள் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடு) அவருக்கும் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)*

***திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி. . . (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்ட கேள்வி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 'தொலைநோக்குத் திட்டம், 2023' தொடர்பானது. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள். முதலில், நீங்கள் உட்காருங்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்குத் திட்டம். . . (குறுக்கீடுகள்)*

2016 ஜூன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சிக் கொறடா, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். அதில் சில விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள். என்னைப் பேச விடுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு நிமிடம். நீங்கள் அனைவரும் உட்காருங்கள். நான் பேசுவதை பொறுமையாய் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். இப்படியெல்லாம் ஆவேசப்பட்டு பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 2–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதை பொறுமையாகக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்குட்டுவன், நீங்கள் பேரவைத் தலைவருக்கு* direction *கொடுக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். பேரவைத் தலைவரை நீங்கள் யாரும் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். பேரவைத் தலைவராகிய நான் ஏற்கெனவே இந்த அவையில் நடந்திருக்கின்ற நடைமுறைகளையெல்லாம் பார்த்துத்தான், அவை நடவடிக்கைகளை நடத்திக் கொண்டிருக்கிறேன். யாரும் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டாம். எனக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) எது நியாயமோ, அந்த நியாயத்தை நான் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதே அவையிலே 31–7–2006 அன்று தமிழகத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, திருத்திய வரவு–செலவுத் திட்டத்தின்மீதான விவாதத்தில் பேசியபோது, தி.மு.க. அமைச்சர்கள் 65 முறை குறுக்கிட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதை முழுமையாகக்*

கேட்டுக்கொள்ள வேண்டும். *(குறுக்கீடுகள்)* அவைக் குறிப்பை வைத்துக் கொண்டுதான் பேசுகிறேன். *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* என்னை முழுமையாகப் பேச விடுங்கள். நீங்கள் அவைத் தலைவரைக் கட்டுப்படுத்த முடியாது. *(குறுக்கீடுகள்)* என்னை முழுமையாகப் பேசவிடுங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், நான் சொல்கிறேன். என் கையில் இந்த அவையினுடைய நடவடிக்கைக் குறிப்புகளை வைத்துக் கொண்டுதான் நான் பேசுகிறேன். *(குறுக்கீடுகள்)* அதாவது 65 முறை குறுக்கிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அன்றைக்கு கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும், திரு. சி. கோவிந்தசாமி அவர்களும்; இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும்; பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி.கே. மணி அவர்களும் அம்மா அவர்களுடைய விவாதத்திலே குறுக்கிட்டுப் பேசியிருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அன்றைக்குக் குறுக்கிட்டுப் பேசியிருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* இங்கே ஆளுங்கட்சி உறுப்பினர் குறுக்கிட்டுப் பேச விரும்புகிறார். எந்த உறுப்பினரை எப்போது பேச அழைக்க வேண்டுமென்பது என்னுடைய உரிமை. *(குறுக்கீடுகள்)* அவைத் தலைவருடைய உரிமை. *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இங்கே பாருங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* கட்சித் தலைவர்கள், இங்கே பாருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. சிவபுண்ணியம் அவர்கள் அன்றைக்கு கட்சித் தலைவர் கிடையாது. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், எனக்குத் தெரியும். *(குறுக்கீடுகள்)* நான் சொல்கிறேன், நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் சொல்வதைக் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் எனக்கு direction கொடுக்கக் கூடாது. *(குறுக்கீடுகள்)* இங்கே பாருங்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குத் திரும்பத் திரும்ப நான் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார். *(குறுக்கீடுகள்)* அவர் பேசுவதற்கு எல்லா வாய்ப்புகளும் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. *(குறுக்கீடுகள்)* விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. விவாதத்திலே குறுக்கிட்டுப் பேசுவதற்கு ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து வாய்ப்புக் கேட்கின்றபோது, யாரை அழைப்பது என்று எனக்குத் தெரியும். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சரைத்தான் அழைக்க வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. *(குறுக்கீடுகள்)* அதெல்லாம் கட்டாயம் கிடையாது. *(குறுக்கீடுகள்)* அது என்னுடைய உரிமை. *(குறுக்கீடுகள்)* இங்கே பாருங்கள், திரும்பத் திரும்பச் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* திரும்பத் திரும்பச் சொல்கிறேன்.

2016 ஜூன் 22] [பேரவைத் தலைவர்]

*நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இந்த அவையிலே யாரைப் பேச அழைப்பது என்பது என்னுடைய உரிமை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 2–25*

*இங்கே பாருங்கள், திரும்பத் திரும்ப நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்ப நான் சொல்கிறேன். உங்கள் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார். நான் விவாதத்தை அனுமதித்திருக்கிறேன். விவாதத்திலே குறுக்கிட்டு யார் பேச வேண்டுமென்பதை அவைத் தலைவரான நான்தான் முடிவு செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் முடிவு செய்ய முடியாது. உங்களுடைய முடிவு என்னைக் கட்டுப்படுத்தாது. (குறுக்கீடுகள்) நான் யாரை அழைக்கிறேனோ அழைக்கப்படுபவர்தான் பேச வேண்டும். நீங்கள் அதுவரை பொறுமையாக இருந்து உரையைக் கேட்க வேண்டும். (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பாகக் கேட்ட கேள்வி. . . (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்* Vision *2023, அம்மா அவர்களுடைய தொலைநோக்குத் திட்டத்தைப் பற்றி அவர் கேட்ட கேள்வி முக்கியமான கேள்வி. முதல்முறையாக இந்தச் சபையிலே பேசும்போது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட அந்த* Vision *2023–ல் அவர் கேட்டது* Phase–I . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய கட்சித் தலைவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்) திரு. பாண்டியராஜன், இருங்கள். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், உங்களுடைய தலைவர் பேசுவதை நீங்களே விரும்பாத மாதிரி இப்படியெல்லாம் கூச்சல் போடுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து என்ன பேசுகிறார்களோ அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு நீங்கள் ஆளாளுக்கு,*

*இவர்கள் பேசக்கூடாது, அவர்கள் பேசக்கூடாது என்றெல்லாம் சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருவேன். எதிர்க்கட்சிக்காரர்களுக்கு நான் வாய்ப்புத் தருவேன். (குறுக்கீடுகள்) இருங்கள், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இருங்கள், திரு. பாண்டியராஜன் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறார். (குறுக்கீடுகள்) சரி, கேளுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர், சொல்லுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைப்பற்றி எடுத்துச் சொல்லி, அதிலே முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அந்த வாக்குறுதிகளை, அந்த அறிவிப்புகளைத்தான் எடுத்துச் சொன்னேன். இதிலே ஏதாவது பிரச்சினை இருக்கிறதா?* Objection *இருக்கிறதா? அவர் எழுந்து பேச வேண்டிய அவசியம் என்ன? (குறுக்கீடுகள்) அதுதான் என்னுடைய கேள்வி. ஏதாவது பிரச்சினை இருந்தால், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *நான் இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு நான் அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்* Vision *2023 பற்றி பேசியிருக்கிறீர்கள். அதற்குப் பதில் சொல்வதற்காகத்தான் ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து அவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்) அவர் என்ன பேசுகிறார் என்று கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பாண்டியராஜன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச விரும்பியது,* GIM *பற்றி கிடையாது.*

2016 ஜூன் 22] [திரு. க. பாண்டியராஜன்]

*(குறுக்கீடுகள்) நான் பேச விரும்பியது,* Vision *2023. இதே அவையிலே முதல் நாளிலே நான் பதிவு செய்த விஷயங்களைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கும்போது.... (குறுக்கீடுகள்) அந்த* Vision *2023–ல்* Phase–I *பற்றிப் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)* Phase–II *முடிந்து ரொம்ப நாளாகிவிட்டது. (குறுக்கீடுகள்)* Phase–III *துவங்கிவிட்டது. 217 திட்டங்கள் உருப்பெற்று அந்தத் திட்டங்களில் 85 திட்டங்கள்* execution*–ல் வந்து கொண்டிருக்கின்றன. (குறுக்கீடுகள்) அதிலே 10 திட்டங்கள் முடிந்திருக்கின்றன. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்னுடைய முடிவை நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. பாண்டியராஜன், ஒரு நிமிடம் இருங்கள். எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் நீங்கள் என்னை நிர்ப்பந்தப்படுத்துவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள்; சொல்வதைக் கேளுங்கள். எவ்வளவு நேரம் இந்த அவையை நடத்த விடாமல் செய்தாலுங்கூட என்னுடைய முடிவை நான் மாற்றிக்கொள்வதாக இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நான் யாரை அழைக்கிறேனோ, அவர்தான் கண்டிப்பாகப் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) நான் எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அழைத்திருந்தேன். அவர் பேசிக்கொண்டிருந்தார். அவர் குறிப்பிட்ட* Vision *2023 குறித்துப் பேச வேண்டுமென்று திரு. பாண்டியராஜன் கேட்டிருக்கிறார். நான் அவரைப் பேசுவதற்கு அனுமதிக்கிறேன். அவர் பேசியதற்குப் பின்பு எதிர்க்கட்சித் தலைவர் பேசட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசியதற்குப் பின்பு எதிர்க்கட்சித் தலைவர் பேசட்டும். (குறுக்கீடுகள்) திரு. பாண்டியராஜன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 2–30*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிய, மாண்புமிகு அம்மா அவர்களுடைய விஷன் 2023 திட்டம். . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. க. பாண்டியராஜன், ஒரு நிமிடம் பொறுங்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஷன் 2023 திட்டம் பற்றிப் பேச நான் தொடங்கியிருக்கிறேன். பேசத் தொடங்கி, அந்தத் திட்டம் எவ்வாறு வரையறுக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லி முடித்திருக்கிறேன். அதற்குள் ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் எழுந்து பேச வேண்டிய அவசியம் என்ன? ஏதாவது குற்றம் சுமத்தியிருந்து, ஏதாவது தவறான தகவல் சொல்லியிருந்தால். . . (குறுக்கீடு) நான் சொன்னதில் ஏதாவது தவறு இருந்தால், சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் ஏற்றுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள். (குறுக்கீடு) நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், பொறுங்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *அந்தத் திட்டத்தின்கீழ் பெறப்படும் 15 இலட்சம் கோடி ரூபாய் எங்கிருந்து வரப்போகிறது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி எழுப்பினார். அந்த 15 இலட்சம் கோடி ரூபாய் எங்கிருந்து வரப்போகிறது என்று கேட்டதற்கு இதே அவையில் தெளிவாகச் சொல்லியிருக்கும்போது.... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதோ பாருங்கள். நீங்கள் செய்வது தவறு. (குறுக்கீடு) அப்புறம் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். இதுவெல்லாம் சரியில்லை. (குறுக்கீடு)*

**திரு. க. பாண்டியராஜன்:** *அதைக் கேட்பதில் அவர்களுக்கு என்ன பயம்? (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதோ பாருங்கள். நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். நான் ஓர் உறுப்பினரைப் பேச அழைத்திருக்கிறேன். (குறுக்கீடு) முதலில் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்கு, மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்கிறார் என்பதைக் கேளுங்கள் என்று சொன்னவுடனே, அவரே அமைதியாக உட்கார்ந்துவிட்டார். நீங்களும் உட்காருங்கள். அமைதியாக மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைக் கேளுங்கள். அதற்கு உங்கள் கட்சித் தலைவர் பதில் சொல்வார். நீங்கள் யாரும் ஒன்றும் சொல்லாதீர்கள். பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) இப்பொழுது உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள், விஷன் 2023 குறித்து என்ன*

2016 ஜுன் 22] [பேரவைத் தலைவர்]

*சொல்கிறார் என்று கேட்டுக்கொள்ளுங்கள். அதைக் கேட்டுவிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பதில் சொல்வார். அதற்கு மேலேயும் வாய்ப்பு வேண்டுமென்றால், உங்களுடைய கட்சித் துணைத் தலைவருக்கும் வாய்ப்புத் தருகிறேன், அவரும் பேசட்டும் (குறுக்கீடு) அது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடு) இங்கே பாருங்கள். யாரை நான் அழைப்பது என்பது என்னுடைய உரிமை. அந்த உரிமையின் அடிப்படையில் திரு. க. பாண்டியராஜன் அவர்களை நான் அழைத்திருக்கிறேன். திரு. க. பாண்டியராஜன் அவர்கள் பேசலாம்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனவுத் திட்டமான விஷன் 2023, தொலைநோக்குத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது, குறிப்பாக அதன் முதல் கட்டத்தைப் பற்றி முதலில் அவர் சொன்னது சரிதான். இந்தத் திட்டம் வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தில் 15 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு அடுத்த 11 வருடங்களில் 2023 மார்ச் வரை திரட்டப்படவிருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் முதலில் எனர்ஜி செக்டார், எரி சக்தி செக்டாருக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த எரி சக்தி செக்டாரில் எவ்வளவு பணம் வந்திருக்கிறது, எவ்வளவு மெகா வாட் வந்திருக்கிறது என்று முதலில் கேள்வியைக் கேட்டார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், விஷன் 2023 திட்டம் மூன்று கட்டங்கள் அடங்கியது. முதல் கட்டம், உங்களுக்குத் தெரியும்* Asian Development Bank *உதவியுடன். . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் சற்று அமைதியாக இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், திரு. க. பாண்டியராஜன் அவர்களின் விளக்கத்தைக் கேட்டுவிட்டுப் பேசுவார். (குறுக்கீடு) பேசாமல் இருங்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *அது நிறைவேற்றப்பட்டது 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம். அந்த டாக்குமென்ட்டை சட்டமன்றத்தில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுத்தார்கள். அதற்கடுத்த கட்டம், மிகப் பெரிய அளவில் 217 திட்டங்களாக அவை திட்டப்படுத்தப்பட்டு, ஒரு வருடத்திற்குள் இவ்வளவு பெரிய புத்தகத்தை சட்டமன்றத்தில் அனைவருக்கும் கொடுத்தார்கள்,* Industrialists *எல்லோருக்கும் கொடுத்தார்கள். அந்த 217 திட்டங்களில் 85 திட்டங்கள் தற்போது 7–வது கட்டத்தில் இருக்கின்றன. (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் பேசும்போது, அதுகுறித்துப் பேசுங்கள்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுமாதிரியே, மொத்தம் 11* sector*–களாகப் பிரிக்கப்பட்டது.* Energy Sector *மட்டும் கிடையாது,* Highways, Bridges, By–pass Sector, Railways Sector, Ports Sector, Airports, Aircrafts Maintenance Sector, *தொழில் துறை, சுற்றுலாத் துறை,* Urban Infrastructure, Agriculture & Irrigation, Health Care *கடைசியாக கல்வி,* Human Resources Development, Skill Development *இதுபோன்று 11* sectors*–ஆகப் பிரிக்கப்பட்டு, 217 திட்டங்களும், அவை திட்டப்படுத்தப்பட்டதை வைத்து நாம்* Global Investors Meet *நடத்தி, அதில் பெறப்பட்ட வாக்குறுதிகளில் 60,000 கோடி ரூபாய் நிதி இன்று பெறப்பட்டு விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தெளிவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றுடன் மூன்று வருடங்கள் முடிந்துவிட்டன. அவர்கள் அறிவித்த மார்ச் 2012–லிருந்து மார்ச் 2023 வரையிலுள்ள 11 வருடங்களில் ஒவ்வொரு வருடமும் எவ்வளவு முதலீடுகளை நாம் எதிர்பார்க்கப் போகிறோம் என்று அன்றே அந்த முதலீட்டாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். ஒரு முதலீட்டாளர்கள் மாநாட்டில் இந்த விஷன் 2023 திட்டம் வெளியிடப்பட்டது. 17* MoUs sign *செய்த நாளில் மாண்புமிகு அம்மா அவர்கள் இதனை அறிவித்தார்கள். அதற்குப் பிறகு, இன்று வரை விஷன் 2023 புத்தகத்தில் நீங்கள் தேடிப் பார்த்தால் தெரியும், 15 இலட்சம் கோடி ரூபாயில் 2 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்குமேல் முதலீடுகள் கடந்த மூன்றாண்டுகளில் தமிழகத்திற்கு வந்துவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) அது எப்படி வந்தது என்று* explain *பண்ணத் தயாராக இருக்கின்றோம். இந்த 85 திட்டங்கள் எவை, எவை?* Energy*–ல் இருக்கிற 14 திட்டங்கள் எவை?* Highways*–ல் இருக்கிற 5 திட்டங்கள் எவை? இரயில்வேயில் இருக்கிற 3 திட்டங்கள் எவை? இதில் அனைத்து நிதியையும் மாநில அரசாங்கம் கொடுக்கும் என்று நாங்கள் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 2–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

2016 ஜுன் 22]

**திரு. க. பாண்டியராஜன்:** *இதில் எல்லாவற்றையும் மாநில அரசாங்கம் கொடுக்கும் என்று சொல்லவில்லை. மாநில அரசாங்கத்தினுடைய முதலீடு இருக்கிறது, மத்திய அரசாங்கத்தினுடைய முதலீடு இருக்கிறது; தனியாருடைய முதலீடுகள் இருக்கின்றன;* Multi–national companies–*னுடைய முதலீடும் இருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இருங்கள், அவர் பேசட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசுவதை முழுமையாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) பின்னர் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)*

**திரு. க. பாண்டியராஜன்:** *இவைகள் எல்லாமும் சேர்ந்ததுதான் இந்த 15 இலட்சம் கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) அதனால் இந்த ரூ.15 இலட்சம் கோடி என்பது தெளிவாக 7 கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு,* Bid stage–*ல் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். டெண்டரைப்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். 17 திட்டங்கள்* Bid stage–*ல் இருக்கின்றன.* DPR–*அதாவது* Detailed Project Report, Detailed Feasibility Report stage–*ல் 26 திட்டங்கள் இருக்கின்றன.* Preparatory stage–*ல் 62 திட்டங்கள் இருக்கின்றன.* Concept–*ஐ* approve *செய்ய வேண்டும். பல இடங்களில்,* Concept–*ஐ* approve *செய்ய வேண்டிய நிலையில் 13 திட்டங்கள் இருக்கின்றன. இந்த 217 திட்டங்களில்* preparation yet to commence *என்றிருப்பது 14 திட்டங்களில் மட்டுமே. இதைத் தெள்ளத் தெளிவாக எல்லோருக்கும் புரிகின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துக் கொடுத்திருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து, இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) இந்தமாதிரி ஒரு தொலைநோக்குத் திட்டம் போட்ட 7 மாநிலங்களில் எந்த மாநிலமும் தமிழ்நாடு அளவிற்கு ஆழமாகப் போடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இந்தத் தொலைநோக்குத் திட்டம் என்பது எங்களுக்கு* Bible *மாதிரி. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், இதை ஒரு* Bible *மாதிரி வைத்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ஒவ்வொன்றும், ஒவ்வொரு வரியும்—இப்போது பிரதமர் மோடி அவர்களிடம் இருக்கிற திட்டங்கள் குறித்தெல்லாம் சொல்லப்பட்டது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் இன்னொரு கருத்தையும் பதிவு செய்தார்கள்.* Micro, Small and Medium Enterprises, MSME–*ஐ பொறுத்தவரை, என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டீர்கள்.* State Level Bankers' Committee–*ஐ, கூட்டி. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)*

**திரு. க. பாண்டியராஜன்:** *அதன்மூலமாக ஜம்மு–காஷ்மீர் வெள்ளத்துக்கு எந்தளவுக்கு* MSME benefits–*ஐ கொடுத்தார்களோ, அந்த* benefits–*ஐ கொடுக்க மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்திருக்கின்றது, நமது தமிழக அரசாங்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) தொலைநோக்குப் பார்வை இல்லாத அரசாங்கம் கடந்த தி.மு.க. அரசாங்கம். தி.மு.க. அரசாங்கத்தால் போடப்படாத இந்தத் தொலைநோக்குத் திட்டம் இந்த அரசாங்கத்தால் போடப்பட்டது என்பதைச் சொல்லி, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் இப்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்) இப்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், அவர் அனுமதித்தால் உங்களுக்குப் பேச நான் அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறைக்கு ரூ.4½ இலட்சம் கோடி எப்படி வரும், எப்பொழுது வரும் என்று கேட்டார்கள். அதற்குண்டான முழு விவரமும் என்னிடத்திலே இருக்கின்றது. இந்தத் திட்டம் எந்த அளவிலே இருக்கின்றது, ஒவ்வொரு திட்டம் குறித்தும் சொல்வதற்கு காலதாமதமாகும். அனைத்துத் திட்டங்களும் இதுபோன்ற நடைமுறையில்தான் இருக்கின்றன என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2016 ஜூன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள். அவர் சொல்வதையும் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள்தானே கேட்டீர்கள்! (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைநோக்குத் திட்டம் 2023–ல், தொழில் துறை முன்னேற்றம் கண்டுள்ளதா என்ற ஒரு கேள்வியை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே கேட்டார்கள்.*

*மதுரை, தூத்துக்குடி தொழில் பெருவழிச்சாலையில் முதலீட்டு பிராந்தியங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தி முதலீட்டு பிராந்தியத்தை ரூ.38,000 கோடி செலவில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரை மற்றும் தென் மாவட்டங்களின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, திட்டத்தைத் தொடர்ந்து எடுத்துச் செல்ல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மதுரை–தூத்துக்குடியில்* Industrial Corridor Corporation Limited *என்ற புதிய நிறுவனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

*பிற்பகல் 2–40*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *டிட்கோ நிறுவனம் ஸ்ரீபெரும்புதூரில் 258 ஏக்கர் பரப்பளவில் வான்வெளி ஊர்தி தொழிற்பூங்காவை அமைத்து வருகிறது. இந்த இடத்திற்கு சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. வான்வெளி ஊர்தி பாகங்கள் தயாரிக்கும் 30 நிறுவனங்கள் இங்கு உற்பத்தி மையங்களைத் தொடங்க ஆர்வம் தெரிவித்துள்ளார்கள். இவற்றில், இதுவரை 14 நிறுவனங்களுக்கு கொள்கை அளவிலான இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம் சார்பாக 6,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் பழுப்பு நிலக்கரி*

[திரு. எம்.சி. சம்பத்] [2016 ஜுன் 22

*மூலம் 1,500 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் திட்டமாகும். இதற்காக டிட்கோ நிறுவனத்தின்மூலம் 8,373 ஏக்கர் நிலம் ஜெயங்கொண்டம் மற்றும் 13 கிராமங்களில் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், கொஞ்சம் சுருக்கமாகப் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *பிளாஸ்டிக் தொழிற்பூங்காவைப் பொறுத்தவரை, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், வயலூர் மற்றும் காட்டுப்பள்ளி கிராமங்களில் பிளாஸ்டிக் சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்காக ஒரு தொழிற்பூங்கா அமைக்க தமிழக அரசு 2012 ஏப்ரல் மாதம் அனுமதி வழங்கியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பெட்ரோலிய வேதிப்பொருட்கள் மற்றும் பெட்ரோ கெமிக்கல் முதலீட்டுப் பிராந்தியம் உருவாக்குதல்; நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு 3–7–2012–ல் அனுமதி வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

*சென்னையில்* Finance City–*ஐ உருவாக்கும் திட்டத்தினை தற்பொழுது ஒருங்கிணைந்த நிதி சேவைகள் மையமாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்கள் தலைவர்தான் பேச போகிறார்; நீங்கள் அமைதியாக இருங்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *இதற்கான திட்ட ஆலோசகர்* PWC *நியமிக்கப்பட்டு, விரிவான அறிக்கை பெறப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நிலம் முதலில் நந்தம்பாக்கத்தில் தேர்வு செய்யப்பட்டு,* I.D.P.L. *நிறுவனத்திடமிருந்து எடுப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. பின்னர்,* BIFR *அமைப்பில்* I.D.P.L. *தொடர்ந்த வழக்கினால் தற்போது மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. டிட்கோ நிறுவனம் இதனை கூட்டு முயற்சியில் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2016 ஜுன் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்,* Vision *2023 சம்பந்தமாக நீங்கள் பேசி முடியுங்கள். நீங்கள் பேசி முடித்த பிறகு, நிதி அமைச்சர் அவர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு)* Vision *2023 சம்பந்தமாகப் பேசிவிட்டு, நீங்கள் அனுமதி கொடுத்தீர்களானால், நிதி அமைச்சர் அவர்கள் பேசுவார்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *என்ன பேச வேண்டும்?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நிதி அமைச்சர் பேசுவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *முடித்துவிடச் சொல்கிறீர்களா? (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதுசம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடித்ததற்குப் பிறகு பேசுவார்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *திரு. பாண்டியராஜன் அவர்கள்* Vision *2023 சம்பந்தமாக அந்தப் புத்தகத்தில் இருப்பதையெல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள். நானும் படித்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன். அந்த அடிப்படையிலே எனக்கு ஏற்பட்ட சந்தேகங்களைத்தான் கேட்டிருக்கிறேனே தவிர, வேறல்ல.*

*இன்னும் சொல்லப்போனால், தொலைநோக்குத் திட்ட ஆவணத்திலே தமிழகத்தினுடைய மொத்த உற்பத்தி வளர்ச்சியின்* (G.S.D.P.) *அடிப்படையில் 2011–2012 முதல் 2016–2017 வரை 4.21 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு பெறப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி, மாநிலத்தினுடைய உற்பத்தி வளர்ச்சியின் அடிப்படையில் பார்த்தால், 4.21 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு பெறப்பட்டிருக்க வேண்டும். தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் 2012–ல் தொடங்கப்பட்டது. இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் தலைவராக இருக்கிறார்கள். 2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 2,000 கோடி ரூபாய் நிதியும் இந்த வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. திட்டங்களைத் தயாரிப்பதற்கு 200 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிறகு தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023 இரண்டாம் பாகம் 23–2–2014 அன்று வெளியிடப்பட்டிருக்கிறது. 15 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு துறைகளுக்கு பெறப்படக்கூடிய முதலீடுகள் குறித்து மீண்டும் வலியுறுத்தி கூறப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023, இரண்டின்படி விவசாயத்*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2016 ஜூன் 22

துறையிலே ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 40,000 கோடி ரூபாய் முதலீடு 1,21,000 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. மின்சாரம், போக்குவரத்து, தொழில் துறை, நகர்ப்புற உட்கட்டமைப்பு என பல்வேறு துறைகளில் 217 திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் நீங்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னீர்கள். பொருளாதார ரீதியாக தமிழகத்தில் தற்போது 73,278 ரூபாயாக இருக்கும் தனிநபர் வருமானம், 2023–க்குள் 4,50,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 2–45

அறிவிக்கப்பட்ட 217 திட்டங்களுடைய நிலை என்ன? முதல்வர் தலைமையில் இருக்கக்கூடிய தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் இதுவரை எத்தனை முறை கூடியிருக்கிறது? தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023 ஒன்று மற்றும் இரண்டின்படி ஒவ்வொரு துறையிலும் இந்த ஆய்வை நடத்தி பெறப்பட்டிருக்கக்கூடிய முதலீடுகள் எவ்வளவு? இந்த இரண்டு தொலைநோக்குத் திட்டங்களும் அறிவிக்கப்பட்டு, நான்கு வருடங்கள் முடிந்துவிட்ட நிலையில், இந்த Vision 2023 மூலம் இதுவரை தமிழகத்திற்குக் கிடைத்திருக்கக்கூடிய பலன் என்ன என்பதைத்தான் தங்களின்மூலம் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023–ல் சில சந்தேகங்களை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். சில விளக்கங்களை மட்டும் நான் இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2016 ஜூன் 22] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023–ன் ஆவணங்களை, நாட்டினுடைய வளர்ச்சிக்காக தமிழ்நாட்டில் பிரகடனப்படுத்தினார்கள். தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023–ன்கீழ் பதினைந்து இலட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 217 அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சம்பந்தப்பட்ட திட்டங்கள் பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் என்ற நோக்கோடு தொலைநோக்குத் திட்ட ஆவணம் தயாரிக்கப்பட்டது. இன்றைய நாள்வரை, 85 திட்டங்களுக்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) 17 திட்டங்களின் பணிகள் ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையினை அடைந்துள்ளன. 26 திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR), விரிவான சாத்தியக்கூறு ஆகியவற்றை ஆராய்ந்து, Detailed Feasibility Study தயாரிக்கப்பட்டுள்ளது. ஏனைய திட்டங்களில் 89 திட்டங்கள் திட்ட வடிவமைப்பு நிலையில் தற்போது உள்ளன. இதுதான் இந்த 217 திட்டங்களினுடைய இன்றைய status.

தொலைநோக்குத் திட்டம் செயல்படுத்தப்படுவதால், 2023 வரை நீங்கள் பொறுமையாக இருங்கள். தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேலும் உயரும் வாய்ப்பு ஏற்பட்டு, தமிழ்நாட்டின் சராசரி தனி நபர் வருமானத்தை 10,000 அமெரிக்க டாலர் அளவில் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கு உறுதியாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் உலக அளவில் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு ஒப்பாக மதிப்பிடப்படும் தனி நபர் சராசரி வருமானம், தமிழ்நாட்டில் இருக்குமென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு இலக்கினை நிர்ணயித்துத்தான் இந்தத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழக மக்களுக்கு சர்வதேச தரமுடைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் அளிக்கப்பட வேண்டுமென்பது மாண்புமிகு அம்மா அவர்களது அரசினுடைய உயரிய நோக்கம் ஆகும். இந்தியாவிலேயே முதலீட்டாளர்களுக்கு உகந்த முதல் மாநிலமாகவும், ஆசிய அளவில் முதல் மூன்று இடங்களில் ஒன்றாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் விளங்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம், 2023–ன் நோக்கம் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜூன் 22

*இந்த 217 திட்டங்களினுடைய* break–up *என்னிடத்தில் இருக்கின்றது. ஒவ்வொன்றாகப் படித்து அதனுடைய* performance. . . *(குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள், என்னென்ன* performance *என்று சொல்ல ஆரம்பித்தால் ரொம்ப நேரம் ஆகும். அதனால் இந்த* performance–*ஐ மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களிடம் நான் கொடுத்துவிடுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நேரடியாகச் சென்று பார்த்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, எனது உரையினை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள். நீங்கள் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியபோது. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு சிறிய உதாரணம் சொல்லி, உரையை முடித்துவிடுவார். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போவதற்கு முன்னால் பேசிவிடட்டும்.*

**திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசியதில், அவர்கள் சொன்ன ரூபாய் 73,000. . . (குறுக்கீடுகள்) 2011–2012–ல் தனி நபர் வருமானம் ரூபாய் 73,000. (குறுக்கீடுகள்) 2010–2011–ல் தி.மு.க. அரசு இருந்தபோது, தனி நபர் வருமானம் 69,000 ரூபாயாக இருந்தது. (குறுக்கீடுகள்) அதற்கடுத்த வருடம் 73,000 ரூபாய். அதை இந்த வருடம் 73,000 ரூபாய் என்று சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) தமிழகத்தில் இந்த வருடம் தனி நபர் வருமானம் 1 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் தவறாகச் சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறாகச் சொல்வதை நாங்கள்* correct *செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்) எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பாக இந்த இடத்திலே இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அதற்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் எல்லாம் தயவுசெய்து கேளுங்கள். (குறுக்கீடுகள்)*

2016 ஜூன் 22] [திரு. க. பாண்டியராஜன்]

*பிற்பகல் 2–50*

*மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தமிழகத்தில் தனி நபர் வருமானம் 73 ஆயிரம் ரூபாய் என்று அவையில் பதிவு செய்கின்றார்; அது, 2011–2012 ஆம் ஆண்டில் இருந்த தனி நபர் வருமானம். தற்போதைய தனி நபர் வருமானம் 1 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் தனி நபர் வருமானத்தை இரண்டு மடங்காக உயர்த்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) தனி நபர் வருமானம் இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிற காரணத்தால்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியபடி 2023 ஆம் ஆண்டு தனி நபர் வருமானம் 10 ஆயிரம் டாலர் இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. நீங்கள் தவறான கருத்தை எப்படிப் பதிவு செய்யலாம்? 2011–2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தமிழகத்தின் தனி நபர் வருமானம் 73 ஆயிரம் ரூபாய் என்று இப்போதுதான் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு எழுதிக் கொடுத்தவர்கள் இன்றைய தனி நபர் வருமானம் 73 ஆயிரம் ரூபாய் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். தயவுசெய்து அதை மீண்டும் சரிபார்க்க வேண்டும். (குறுக்கீடுகள்) தமிழகத்தில் தனி நபர் வருமானம் 2011–2012 ஆம் ஆண்டில் 73 ஆயிரம் ரூபாய் என இருந்தது; இன்றைக்கு இல்லை. இன்றைய தனி நபர் வருமானம் 1 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது. இதை நீங்கள் தெரிந்துகொண்டு மறுபடியும் பேச வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுமையில்லாமல் இருக்கக்கூடாது. ஓர் உறுப்பினர் பேசும்போது பொறுமையாகக் கேட்டுக்கொள்ள வேண்டும்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *இந்த அவையைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 89 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; கூட்டணிக் கட்சிகளையும் சேர்த்து 98 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 1 கோடியே 77*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2016 ஜூன் 22

இலட்சத்து 75 ஆயிரத்து 374 வாக்காளர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் வாக்களித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி வாக்களித்த மக்களுக்கு மட்டுமின்றி, வாக்களிக்காத மக்களுக்கும் சேர்த்து திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக நிதி ஒதுக்குவார்கள். குறிப்பாக, சென்னையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட நிலையை நான் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கிய நிதியை செலவிட, சென்னையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் போதிய அளவிற்கு எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய கொளத்தூர் தொகுதியைப் பொறுத்தவரையில், நான் ஒதுக்கிய நிதியில் 60 சதவிகிதத்திற்குமேல் செலவு செய்யப்படவில்லை. எனவே, இந்தமுறை அதுபோன்ற ஒரு நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக முன்னெச்சரிக்கையாக இதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். எப்படி தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு single window system என்று சொல்கின்றோமோ, அதுபோல சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்கள் தங்குதடையின்றி நடைபெற வேண்டுமென்றால், மாநில அளவில் ஓர் ஒருங்கிணைப்பாளரை நியமிக்க வேண்டும். அதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப்போகிறார். (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** 60 சதவிகிதத்திற்குமேல் செலவு செய்யப்படவில்லை என்பதற்கான ஆதாரம் என்னிடம் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சென்னையில் ஒதுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி குறித்துப் பேசினார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, 5 வருடங்களில் அனைத்துத்

தொகுதிகளிலும் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மட்டுமல்லாமல், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியும் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தன்னுடைய தொகுதியில் ஏற்பட்ட சில பிரச்சினைகள் பற்றிக் கூறினார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பயன்படுத்தப்படாத நிதி எதுவென்று பார்த்தால், சில இடங்களில் கட்டடம் கட்டுவதற்கு இடம் இருந்திருக்காது. சட்டமன்ற உறுப்பினர்கள், கட்டடம் கட்டுவதற்கு, கழிவறை கட்டுவதற்கென நிதியை ஒதுக்குவார்கள். உரிய ஆய்வுகளை மேற்கொள்ளும்போது, கட்டடங்கள் கட்டுவதற்கு அங்கு இடம் இருக்காது. இதுபோன்ற பிரச்சினைகளால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை பயன்படுத்த முடியாமல் போயிருக்குமேதவிர, வேறொன்றும் இல்லை.

அதேபோன்று, சென்னை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து சில வேலைகளைச் செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கும்; அவ்வேலைகளைச் செய்வதற்கு டெண்டர் கோரப்பட்டிருக்கும். அதே வேலைகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்களும் நிதி ஒதுக்கீடு செய்திருப்பார்கள். இதுபோன்ற பிரச்சினைகள், சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஏதாவது ஒரு நிகழ்வைக் குறிப்பிட்டுச் சொன்னால், நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதியிலும்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த காலங்களில் 1,554 பணிகளை மேற்கொள்ள 190 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள்; சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி அல்ல, மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கி, மாநகராட்சி மூலமாக அப்பணிகள் நடைபெற்றுள்ளன; பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக இருந்தாலும், மேற்குறிப்பிட்ட சிக்கல்களால்தான் பணிகள் நடைபெறாமல் இருந்திருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும்கூட, அந்த நிதியை வேறு பணிகளுக்கு மாற்றி எழுதிக் கொடுக்கும்போதோ அல்லது வேறு இடத்தைத் தேர்வு செய்து எழுதிக்

கொடுக்கும்போதோ அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order எதுவும் கிடையாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்தான் பேசப்போகிறார், உட்காருங்கள். (குறுக்கீடு) Point of order ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டுமல்லவா?

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை முறைப்படுத்தவேண்டும், இதுபோன்று மீண்டும் ஒரு தவறு நடந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேனேதவிர வேறல்ல.

பிற்பகல் 2–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அதேபோல், கரூரிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும், நான் வாய்ப்புத் தருகிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக உட்காருங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜுன் 22]

**திரு. மு.க. ஸ்டாலின்:** *அடுத்து, அண்மையிலே. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதாவது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்* ** *பற்றி சொன்னதற்குப் பதில்தான் இது. (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *நடந்து முடிந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி, தேர்தல் ஆணையத்தினுடைய* code of conduct *இருந்தது. அந்த நேரத்தில் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டில்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற* ** *என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை.* ** *(குறுக்கீடுகள்)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதற்குத் தேர்தல் ஆணையம்தான் முடிவெடுக்க முடியும். (குறுக்கீடுகள்)*

**திரு. மு.க. ஸ்டாலின்:** ** *அவ்வளவுதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ** *அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், பேசுகிறார். உட்காருங்கள்.*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2016 ஜூன் 22

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* ** *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். இப்போது இருக்கின்ற 231 சட்டமன்ற உறுப்பினர்களும் தேர்தல் ஆணையத்தினுடைய கட்டுப்பாட்டில்தான் ஜெயித்து வந்திருக்கிறோம். தேர்தல் ஆணையம் எடுத்த நடவடிக்கைகளை நாம் இப்போது விமர்சிக்க முடியாது. (குறுக்கீடுகள்) அது தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிற விஷயம். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகளில் நாம் தலையிட முடியாது. (குறுக்கீடுகள்) ஆகவே, அதுகுறித்துப் பேசிய வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசியது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) வேறு பேசுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* ** *(குறுக்கீடுகள்) அதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

*பிற்பகல் 3–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *3–00 மணியாகி விட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பேசுவதற்கு நிறைய வாய்ப்பளித்தும், அவர் நிறைய பேசியும், இரண்டேகால் மணி நேரம் பேசுவதற்கு வாய்ப்பளித்தும், வேண்டுமென்றே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திட்டமிட்டு வெளிநடப்புச் செய்வதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, என்ன வேண்டும்? சொல்லுங்கள். திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2016 ஜூன் 22]

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பத்திரிகைகளிலும் வந்த செய்தியைத்தான் அவர்கள் இப்பொழுது சொன்னார்கள். தேர்தல் கமிஷனுடைய விசாரணையில் இருந்தால் நாம் விவாதிக்கக்கூடாது என்று எந்தச் சட்டத்திலே இருக்கிறது? நீங்கள் அந்த விதியைக் காட்டுங்கள். நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். (குறுக்கீடு) நீங்கள் விதியைக் காட்டுங்கள், சட்டப் புத்தகத்தில் உள்ள விதியைக் காட்டுங்கள், நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எந்த விதியும் இல்லாமல். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்ள வேண்டும். தேர்தல் கமிஷனுடைய நடவடிக்கைகளை நாம் விமர்சிக்கக்கூடாது, விமர்சிக்க முடியாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நடைமுறைகள் இருக்கின்றபொழுது பல்வேறு இடங்களில் கிட்டத்தட்ட 162 கோடி ரூபாய்க்கு மேலாக அவர்கள் கைப்பற்றி இருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான வழக்குகளை விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த விசாரணையில் உண்மைத் தன்மை இருப்பின், நீதிமன்றத்தில் ஒப்படைப்பார்கள். நீதிமன்றம்தான் அதை விசாரணை செய்யும். இத்தகைய சூழ்நிலைகள் இருக்கும்பொழுது, அதைச் சட்டமன்றத்தில் விவாதிப்பது என்பது உண்மையிலேயே ஏற்புடையதல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதனால்தான் அதை நான் நீக்கிவிட்டேன்.*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23–6–2016) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 3–01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

---

# 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*3. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் வகைமுறைகளின்கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளை மின்னணுமூலம் நிர்வகிக்கும் பொருட்டு, 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் (மையச் சட்டம் 21/2000) அடங்கியுள்ள வகைமுறைகள் மற்றும் அதன்கீழ் இயற்றப்பெற்ற விதிகள் மற்றும் வழிமுறைகள் எந்த அளவிற்குப் பொருந்துமோ அந்த அளவிற்கு மேற்சொன்ன சட்டத்தின்படியான நடவடிக்கைகளுக்கு கடைப்பிடிப்பது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (சி1) துறையின் 29—1—2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 16—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*4. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச்சட்டத்தின் வகைமுறைகளின்கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளை மின்னணுமூலம் நிர்வகிக்கும் பொருட்டு, 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் (மையச் சட்டம் 21/2000) அடங்கியுள்ள வகைமுறைகள் மற்றும் அதன்கீழ் இயற்றப்பெற்ற விதிகள் மற்றும் வழிமுறைகள் எந்த அளவிற்குப் பொருந்துமோ அந்த அளவிற்கு மேற்சொன்ன சட்டத்தின்படியான நடவடிக்கைகளுக்கு கடைப்பிடிப்பது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (சி2) துறையின் 29—1—2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 17—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*5. 2014—2015 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முப்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

2016 ஜுன் 22]

*6. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறு தொழில் கழகத்தின் ஐம்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*3. 1957 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி (தமிழ்நாடு) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (சி1) துறையின் 16–2–2016 ஆம் நாளிட்ட 35 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.*

* * *

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the**
**Director of Stationery and Printing,**
**Chennai-600 002.**